காஞ்சி காமகோடி பீடம்

தஸ்தாவேஜிகள்

பாகம் .1.

THE

PRINCIPAL DOCUMENTS

RELATING TO

SREE CANCHEE CAMA COTTEE PEETATHIPATHI

ALIAS

THE JAGATH GURU

SREE SANKARACHARIA SWAMIGAL

RESIDING AT KUMBAKONAM,

TANJORE DISTRICT.

VOL I.

பிரஸித்தியாய்

கும்பகோணத்தில் விளங்கப்படாநின்ற

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்களாகிய

ஜகத்குரு

ஸ்ரீசங்கராசாரிய சுவாமியளவர்கள்

ஸ்ரீமடத்தின் முக்கிய தஸ்தாவேஜிகளை

௸ ஸ்ரீமடம் ஏஜண்டு ஸ்ரீகாரியம்

குப்புசாமி அய்யரால்

சென்னை:

ஜி. ஏ. நடேசன் கம்பெனியில்

பதிப்பிக்கப்பட்டது.

EXAMINED BY P. V. RAMASWAMY AIYER.

1908.

VOLUME II. WILL FOLLOW EARLY.

6₹ 60

1844௵ அசல் 95நெ. பிராது காபி.

திருச்சிறுப்பள்ளி ஜில்லா பிறன்சீபால் சதர்மீன் கோர்ட்டா ர்கள் சமுகத்துக்கு.

நகரம்சீமை கொப்பம் தாலூகா ஸ்ரீங்கேறியிலிருக்கும் மேற்படி ஸ்ரீங்கேரி மடாதிபதி அவர்களாகிய ஸ்ரீசகத்குரு சங்கராசாரிய சுவாமியாறுன நரசிம்மபாரதி சுவாமியவர்க ளால் முக்தியார்னுமா பெத்தவரும் ௸மடம் விசாரணை கர்த்தருமான சேஷசோவயர் அந்தஸ்து ௸மடம் விசா ரணைக் கர்த்தர். } வாதி.

I. கும்பகோணம் ஜில்லா கஸ்பா கும்பகோணத்தி லிருந்து இப்போது திருச்சிறுப்பள்ளி ஜில்லா லால்குடி தாலூகா ஜெம்புகேசுவரத்தில் வந்திருக்கும் சந்திரசேகர பாரதிசுவாமி அந்தஸ்து. எதி 1

II. ௸ தாலூகா பிக்ஷாண்டார் கோவிலிலிருக்கும் ௸ ஜெம்புகேசுவரம் கோவில் தர்மகர்த்தாவான சந்திர சேகரம்பிள்ளை அந்தஸ்து விவஸாயம் 2

III. ௸ஜெம்புகேசுவரத்திலிருக்கும் அய்யகளி அய்ய ராகிய ஜெம்புதீக்ஷிதர் அந்தஸ்து கோவில் ஸ்தளத்தார். 3

IV. ௸யூரிலிருக்கும் குட்டை தீக்ஷாபண்டிதர் என் கிற பெரியதீக்ஷாபண்டிதர் 4

V. பெரியசுவாமி பண்டிதர் 5

VI. வெங்காச்சம் என்கிற வெங்கிடாசலபண்டிதர் 6

VII. வெங்கிட்டறுய பண்டிதர் 7

VIII. சுப்பறுயபண்டிதர் அந்தஸ்து அர்ச்சகம் ... 8

IX. சின்னு வய்யன் 9

X. பெருமாளய்யன் 10

XI. ஆனையய்யன். அந்தஸ்து ஸ்தானீகம் ... 11

XII. முத்திய பிள்ளை 12

XIII. செம்புலிங்க பிள்ளை 13

XIV. கிருஷ்ண பிள்ளை 14

XV. சிவலிங்க பிள்ளை அந்தஸ்து கணக்கு ... 15

XVI. நாகரத்தினம் பிள்ளை அந்தஸ்து கணக்கு ... 16 } பிறதிவாதிகள்.

1844௵ அசல் 95நெ. பிராது காபி.

திருச்சினுப்பள்ளி ஜில்லா பிறன்சீபால் சதர்மீன் கோர்ட்டா வர்கள் சமுகத்துக்கு.

நகரம்சீமை கொப்பம் தாலூகா ஸ்ரீங்கேறியிலிருக்கும் மேற்படி ஸ்ரீங்கேரி மடாதிபதி அவர்களாகிய ஸ்ரீசகத்குரு சங்கராசாரிய சுவாமியாருன நரசிம்மபாரதி சுவாமியவர்களால் முக்தியார்னுமா பெத்தவரும் ஷெ மடம் விசாரணை கர்த்தருமான சேஷசோவலியர் அந்தஸ்து ஷெ மடம் விசாரணைக் கர்த்தர். — வாதி.

I. கும்பகோணம் ஜில்லா கஸ்பா கும்பகோணத்திலிருந்து இப்போது திருச்சினுப்பள்ளி ஜில்லா லால்குடி தாலூகா ஜெம்புகேசுவரத்தில் வந்திருக்கும் சந்திரசேகர பாரதிசுவாமி அந்தஸ்து. எதி 1

II. ஷெ தாலூகா பிக்ஷாண்டார் கோவிலிலிருக்கும் ஷெ ஜெம்புகேசுவரம் கோவில் தர்மகர்த்தாவான சந்திரசேகரம்பிள்ளை அந்தஸ்து விவஸாயம் 2

III. ஷெ ஜெம்புகேசுவரத்திலிருக்கும் அய்யகளி அய்யராகிய ஜெம்புதீக்ஷிதர் அந்தஸ்து கோவில் ஸ்தளத்தார். 3

IV. ஷெ யூரிலிருக்கும் குட்டை தீக்ஷாபண்டிதர் என்கிற பெரியதீக்ஷாபண்டிதர் 4

V. பெரியசுவாமி பண்டிதர் 5

VI. வெங்காச்சம் என்கிற வெங்கிடாசலபண்டிதர் 6

VII. வெங்கிட்டருய பண்டிதர் 7

VIII. சுப்பருயபண்டிதர் அந்தஸ்து அர்ச்சகம் ... 8

IX. சின்னு வய்யன் 9

X. பெருமாளய்யன் 10

XI. ஆனையய்யன். அந்தஸ்து ஸ்தானீகம் ... 11

XII. முத்திய பிள்ளை 12

XIII. செம்புலிங்க பிள்ளை 13

XIV. கிருஷ்ண பிள்ளை 14

XV. சிவலிங்க பிள்ளை அந்தஸ்து கணக்கு ... 15

XVI. நாகரத்தினம் பிள்ளை அந்தஸ்து கணக்கு ... 16

— பிரதிவாதிகள்.

உத்தேசம் ரூ. 2000 பொருமான அடியில் காணுகிற ஸ்ரீ சக்கறதாடங்கங்களை ஷை மடத்து ஸ்ரீ சுவாமியாரவர்களால் துறஸ்து செய்விக்கும்படியாயும் அதில் பிரதிவாதிகளுடைய தடங்கலை நீக்குதல் செய்விக்கவேண்டியதைக் குரித்தும் வாதி சலாம்செயிது பிரதிவாதிகள்பேரில் செயிதுகொண்ட பிறுது என்னவென்றால்.

ஆதியில் அதுவையிதசித்தாந்தோத்தாறண நிமித்தியம் அவதாறம்செய்து ஷண்மதாஸ்தாபனம்பண்ணி ஷை ஸ்ரீங்கேரியில் சாரதாபீடம் ஸ்தாபித்து மடம் நிர்ம்மாணம்பண்ணி ஆசேது ஹிமாசல தேசங்களுக்கும் ஜெகத்குருவாகிய சங்கரபகவத் பாதாசாரியரவர்களாலே உத்தேசம், தமிழ் **1708**-வருஷத்துக்கு முன் ஷை ஜெம்புகேசுவரம் கோவில் ஸ்ரீ அகிலாண்டேசுவரி அம்மனுக்குத் தங்கத்தில் கெம்பு வகைரா கல்புதைத்து ஷை துகை பொருமானமுள்ள ஸ்ரீசக்கறதாடங்கங்களை ஸ்தாபனஞ்செய்து ஷை அம்மன் திருக்காதுகளில் சாத்திவைத்தார்கள். பின்பு உத்தேசம் இதற்கு எண்பது வருஷம் இருக்கும். ஷை மடத்துக்கு அதிபதியாயிருந்த அபிநவ சச்சிதானந்தபாரதீ சுவாமியவர்கள் சேதுயாத்திரையாயி விஜயம் செய்தபோது ஷை கோவிலுக்கு வந்திருந்ததில் ஷை தாடங்கங்கள் ஜீர்ணமாயிருந்ததை துரஸ்து செய்வித்தும் இருக்கிறார்கள். இதுவுமல்லாமல் இப்போதிருக்கிற சுவாமியாரவர்கள் ஹேவிளம்பி வருஷத்தில் சேது யாத்திரையாயி விஜயம் செய்திருந்தபோது ஷை வருஷம் மாசிமாசத்தில் ஷை கோயிலுக்கு விஜயம்செய்ததில் ஷை தாடங்கங்கள் கொஞ்சம் ஜீர்ணமாயிருக்கிறதென்றும் துறஸ்து செய்வித்துகொடுக்கவேணுமென்றும் ஷை கோவில் அர்ச்சகாள் ஸ்தானீகாள் வகைரா ஷை ஸ்ரீசுவாமியாரவர்களைக் கேட்டுக்கொண்டதில் அவர்கள் அந்தப்படி செய்வித்துக்கொடுக்கிறதாயும் உத்திரவு செய்தார்கள். இதின் சங்கதிகளின் நிஜஸ்திதிகளை ஷை கோவில் ஸ்தலத்தார் வகைரா **1836**௵ மே௴ **20**உயில் இந்த சுபா கலெக்ட்டர் துரையவர்களுக்கு எழுதிக்கொண்டிருக்கிற அர்ஜியில் விவரமாய்க் கண்டிருக்கிறதுந்தவிர, ஷை ஸ்ரீசுவாமி அவர்களுடைய சந்நிதானத்துக்கு ஷையார்கள் பிலவ௵ தை௴ **5**உயில் எழுதிக்கொண்டிரு

கிற விக்யாபனப் பத்திரிகையிலும் கண்டிருக்கிறது. ஷை அர்ஜி விக்யாபனப்பத்திரிகை இதுகளை கோர்ட்டாரவர்கள் பார்வையிட்டு யோசித்தால் மேலெழுதிய ஷை தாடங்கங்கள் ஷை ஆதிசுவாமி அவர்களாலே செய்யப்பட்டது முதலான சங்கதிகள் தெரியவருகிறதுந் தவிர இப்பவும் பூர்வமும் நடந்துவந்த வழக்கப்படிக்கு இந்த சுவாமி அவர்களாலே துறஸ்து செய்யவேணுமென்றும் மற்ற யாவரும் செய்யக்கூடாதென்றும் விசிதமாகும். பின்னும் ஷை சங்கதிகளுக்குப் போதுமான ருசுக்களிருக்கிறது.

2-வது. ஆதிசுவாமி அவர்களாலே ஷை தாடங்கங்களுக்குள் நாற்பத்திமுக்கோண எந்திரங்களை ஸ்தாபித்து அதுகளில் ஸ்ரீவித்தியா ஆகமசாஸ்திரோக்த பிரகாரமும் மகா மந்திரோக்தபூதமாகவும் இருக்கிற பீஜாக்ஷரங்களையும் எழுதி அதுகளுக்கு மேலாக கல்பதித்தும் ஷை சாரதாபீட எந்திரத்துக்கு ஸமானமாய் பிரதிஷ்டையும் செய்வித்திருக்கிறார்கள். இவ்விதமாய் ஷை தாடங்கங்கள் ஸ்தாபனம் செய்யப்பட்டதே தவிர, சாதாரணமான நகைகளை ஒப்பந்தமல்லா. அதுகளை ஷை மடத்து ஸ்ரீ சுவாமியளாயிருக்கிறவர்களே துறஸ்து செய்யவேணுமே தவிர மைத்தவர்கள் துறஸ்து செய்யக்கூடாது. அதுகளை ஷை அம்மனுக்கு சாத்தியபிறகு விசேஷமாய் சான்னிதியம் உண்டாகிறதுந்தவிர அப்படி சாத்தினபிறகு ஷை அம்மனுக்கு நித்திய பூசைமுதலான நைவேத்தியங்கள் செய்யவேணும். அது சாத்தாமலிருக்கும்போது யாதொரு பூஜை முதலானதுகள் செய்யக்கூடாதென்கிறதும் ஷை தாடங்கங்கள் ஸ்தாபனமான நாள் முதல் நடந்துவருகிறது. ஷை தாடங்கங்கள் பூசார்கமே தவிர ஸாதாரணமான நகைகள் ஒப்பந்தமல்லா.

3-வது. விபூதி ருத்திராக்ஷம் தரித்திருக்கிற பிர்ம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திராள் நாலு வர்ணங்களுக்கும் அந்தந்த வர்ணங்களில் சந்நியாசியா யிருக்கிறவர்களுக்கும் ஆசேது இமாசலதேசங்களுக்கும் ஷை பகவத்பாதசாரியாளான ஸ்ரீ சங்கராசாரிய சுவாமி அவர்களே ஆதி செகத்குருவென்பதை அனேக கிரந்தபாகங்களில் விசிதமாயிருக்கிறதுந்தவிர அப்படியே ஆசாரமும் நடந்துவருகிறது.

4-வது. சுவேதச்சத்திரம் மகரதோரணம் பஞ்சகலசம் முதலான மகாபிருதுகளும் சிஷியார்ஜிதமான தேசசஞ்சாரங்களும் ஷெ ஸ்ரீங்கேரி சாரதாபீடாதிபதிகளாகிய ஷெ சுவாமிகளவர்களுக்கே தவிர மைத்தவர்கள் பிருதுகள் வைத்துக்கொள்ளவும் தேச சஞ்சாரம் முதலானதுகள் செய்யவும் கூடாது. இப்படி ஹயிதராபாத் அதாலத்து கோர்ட்டிலும் வருஷம் நம்பர் யாதி இல்லே. தீர்ப்பு புறந்திருக்கிறது.

5-வது. இப்படிக்கிருக்க முதல் பிரதிவாதி தாம் சுவயமாய் மடாதிபதிகள்போலவும் ஷெ தாடங்கங்களை தாம் துறஸ்துசெய்ய வேணுமென்றும் ஸ்ரீசுவாமிகளவாள் செய்யக்கூடாதென்றும் 2-3 உள்ள பிரதிவாதிகளை வசப்படுத்திக்கொண்டு தடங்கல் செய்ததுந் தவிர ஒருக்காலும் நடவாத காரியமுமான ஷெ செய்கைகளைச் செய்ய எத்தனித்திருக்கிறார்கள். அப்படி செய்கிறதானது மாமூல் வழக்கத்துக்கும் சாஸ்திரத்துக்கும் முழுதும் விரோதமாகவும் அக்கிரமமாகவு மிருக்கிறதும்தவிர ஷெ ஸ்ரீசுவாமியவர்களுக்கு மிகவும் கண்ணியக்குறைச்சலும் சம்பவிக்க இடமுண்டாகும். அப்படி நேரிடாமலிருக்கும்படி நியாயாதிபதிகள் நீதி செலுத்தவேணும்.

6-வது. லவுகீககாரியமான வியாஜ்ய விஷயங்களில் ஷெ ஸ்ரீ சுவாமியவர்கள் பேரால் பிராதுமுதலானதுகள் செய்கிறது, ஷெ மடம் உண்டான நாள்முதல் வழக்கமில்லாமல் ஷெ மடம் காரியஸ்தர்கள் மூலமாய் நடப்பிவித்து வருகிறதும் வாடிக்கையாயிருப்பதால் ஷெ ஸ்ரீசுவாமி அவர்களால் முக்தியார்நாமா பெற்றவனுகவும் என் முன்னேர்கள் நாள்முதல் ஷெ மடத்து காரியஸ்தனுகவும் இருக்கிற நான் வழக்கப்படி இந்த பிராது செய்யலானேன். முதல் பிரதிவாதியின் ஷெ எத்தினத்துக்கு மைத்த பிரதிவாதிகளும் ஒன்று சேர்ந்து இருப்பதால் அவர்களையும் அதில் பிரதிவாதிகளாக சேர்க்கலாச்சுது. ரூ 2000 பொருமான ஷெ தாடங்கங்களை ஷெ ஸ்ரீசுவாமியவர்களால் துறஸ்து செய்விக்கும்படி இந்த பிராதானத்திணுலே ஷெ துகைக்கு தகுந்த அச்சுக்கடுதாசியில் இந்த பிராது செய்யலானேன். ஆகையால் ஷெ தாடங்கங்களை ஷெ ஸ்ரீ சுவாமி

அவர்கள் துறஸ்துசெயவித்து ஷெ அம்மனுக்கு சாத்தும்படியாயும் தீர்மானிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பின்னும் சில சங்கதிகளைக் குறித்து பிரதிவாதிகள்பேரில் வேறே பிராது செய்யவும் சித்தமாயிருக்கிறேன்.

(ஒப்பம்) சேஷஜோவலியர் என்று தெலுங்கில் கையெழுத்து செய்யப்பட்டிருக்கிறது.

1844 ஹ ஜூலைமீ 23உக்குச் சரியான
தமிழ் குரோதி ஹ மீ உ } வக்கீல்

(ஒப்பம்) கிருஷ்ணசாஸ்திரி.

கும்பகோணத்தில் வசிக்கும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
அவர்களாகிய ஜகத்குரு ஸ்ரீசங்கராசாரிய சுவாமியவர்
அவர்கள் ஸ்ரீமடம் ஸ்ரீகாரியம் கெணபதி சாஸ்திரி
யளுக்காக கோர்ட்டு வக்கீல் சுப்பய்யர் சலாம்
செய்து கொடுத்த மனு விபரம்.

திருச்சினாப்பள்ளி ஜில்லா பிரன்சிபால் சதிரமீன் கோர்ட்டாரவர்கள் சமுகத்துக்கு.

கோர்ட்டு 1844 ஹ அசல் 95 நெ. பிரதிவாதியாகிய ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்களாகிய ஜகத்குரு ஸ்ரீசெந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்ரீசங்கராசாரிய சுவாமியவர்களிடத்தில் முக்தியார்நாமா பெற்ற ஸ்ரீகாரியம் கெணபதி சாஸ்திரியளுக்காக கோர்ட்டு வக்கீல் சுப்பய்யர் சலாம்செய்து எழுதிக்கொண்ட மனு என்னவென்றால்.

ஷெ நெ. வாதி ஜம்புகேசுவரம் ஸ்ரீ அகிலாண்டேசுவரி அம்மனுக்கு சாத்தப்பட்ட தாடகங்கத்தை ஜீர்ணோத்தாரணம் செய்கிற சுவாதந்திரம் சித்திக்கவேணுமென்று ரூ 2000-க்கு பிராதுசெய்திருப்பதாக ஒரு அரிக்கை வந்தது. அந்த அரிக்கையில் ஷெ சுவாமி அவர்களுடைய சரியானபேரைக் கண்டெழுதாமல் செந்திர

சேகரபாரதி என்னும் சகல பிரபஞ்ச வியாபாரங்களை தியாஜிச்சு யெதியாயும் மடாதிபதியாயு மிருக்கப்பட்டவரை பிரதிவாதியாக சேர்த்திருக்கிறது. அப்படிக்கவரை பிரதிவாதியாக சேர்த்ததும் அவர்பேர் வித்தியாசமாய்க் கண்டதும் கூடாதகாரியமாக இருக்கிறது. எனென்றால் மடத்திலாவது கோவிலிலாவது நடக்கப்பட்ட சகலகாரியங்களும் பொதுப்பட ஹிந்துமதஸ்தர்களை சேர்ந்ததாயிருக்கிறது. மேலும் கோவில்களில் நடக்கப்பட்ட சகல காரியங்களுக்கும் அந்தந்த கோவில் தர்மகர்த்தாக்கள் பாத்தியஸ்தராயும் முந்தின அனுபோக பறம்பரைகள் அறிந்து நடத்த கடமைப்பட்டவராயுமிருக்கிறபடிக்கு இந்த ஜெம்புகேசுவரம் கோவிலை சேர்ந்த எல்லா காரியங்களுக்கும் தர்மகர்த்தாவான 2-வது பிரதிவாதி பாத்தியஸதராயு மிருக்கிறதில் இந்த வாதி கோவிலில் தனக்கு எவ்வித சுவதந்திரமாவது கிடைக்கவேணுமென்று நினைக்கும்பக்ஷத்தில் அதற்கு பாத்தியஸ்தரான ரெண்டாம் பிரதிவாதியின்பேரில் வியாஜியம் செய்யவேண்டியதே தவிர இந்த சுவாமிகளை பிரதிவாதியாக சேர்க்கவாவது அவர்பேரிலும் பிரியாது செய்யவாவது தகாது. கும்பினி துரைத்தனத்தாரவர்களுடைய உத்திரவுபடிக்கு எல்லாம் தர்மகர்த்தர்களுக்கு கலெக்டர் துரையவர்கள் கொடுத்திருக்கப்பட்ட சன்னதுகளில் மேற்படி கோவில் விசாரணையைக் குறித்த சங்கதிகளைக்குறித்து மேற்படி தர்மகர்த்தர்களே சகல விசாரணைகளும் நடத்தி உத்திரவாதியா யிருக்கவேணுமென்றும் அவர்கள் எதாவது கிரமதப்பாய் நடந்தால் அவர்கள் சீவில்கோர்ட்டுக்கு உள்பட்டிருக்கவேணுமென்றும் கண்டிருக்கிறபடிக்கு இந்த வியாச்சியம் செய்யவேணுமென்று தோணினால் தர்மகர்த்தாவான இந்த நம்பர் 2-ம் பிரதிவாதிபேரில் மாத்திரம் செய்யவேணுமென்று மேல்கண்டிருக்கிற நியாயங்களுக்கு ஒத்துதலாகவு மிருக்கிறது. மேலும் வாதி முக்தியார்நாமா பெற்றவனென்று சொல்வதைக்குரித்து வெகு ஆக்ஷேபமிருக்கிறது. இப்படிக்கு பேர் முதலியது சரியாயில்லாமலும் அதைப்பற்றியே அரிக்கைக்கு கையெழுத்து வைக்கப்படாமல் ஆக்ஷேபிக்கப்பட்டு அத்தாக்ஷியும் வந்திருக்கிற

படியினலே சரியானபேரை கண்டு பிராது கொடுக்கிறவரையில் மேற்படி பிராது மஞ்சூர்ப்பண்ணாமல் இருக்கிறது. அந்தபேரை சரியாய் எழுதிக்கொடுத்து அந்தபிராது மஞ்சூர் ஆகிறத்துக்கு முன்னுராகவும் யாதொன்றும் நடந்துக்கூடாததாயுமிருக்கிறது. மேற்படி சுவாமியவர்களுடைய பேர் பிராதில் வித்தியாசமாயும் நாஷணையாயும் கண்டிருக்கிறதென்பதற்கு இருக்கப்பட்ட சர்க்கார் ஆதிரவுகளை பார்க்கத் தெரியவரும். ஆகையால் மேற்கண்ட நிமித்தியத்தைப் பற்றி இந்த சுவாமியளை பிரதிவாதியில்லாமல் நீக்குதல் செய்ய வேணுமென்றும் அப்படிக்கில்லாவிட்டால் மேற்படி பிராதுக்கு சரியான பேர்கண்டு கொடுக்கிறவரையில் வியாஜியத்தில் யாதொன்றும் நடத்தாமல் இருக்கும்படிக்கும் வாதியின் முக்தியார்நாமாவுக்கு நகல் எழுதிக்கொள்ளும்படிக்கு உத்திரவாகவேணுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

(ஒப்பம்) ஸ்ரீமடம் ஸ்ரீகாரியம் கெணபதிசாஸ்திரியள்

1844௵ செப்டம்பர்ீ 13உக்கு
குரோதி௵ ீ உ } (ஒ) வக்கீல் **சுப்பய்யர்.**

பிராதுக்கு ஆன்சர்.

திருச்சிணப்பள்ளி ஜில்லா பிரன்சிபல் சதிர்மீன் கோர்ட்டாரவர்கள் சமுகத்திற்கு.

1844௵ அசல் 95 நெ. முதல் பிரதிவாதி அவர்களுடைய முக்தியார்நாமா பெற்ற கெணபதி சாஸ்திரியளுக்காக கோர்ட்டு வக்கீல் சுப்பய்யர் சலாம்செய்து எழுதிக்கொண்ட ஆன்சர் என்னவென்றால்.

வாதி பிராது சரியல்லா. பிராதில் குறித்த ஜெம்புகேசுவரம் ஸ்ரீ அகிலாண்டேசுவரி அம்மனுக்கு சாத்தப்பட்ட ஸ்ரீசக்கிர தாடகங்கம் ஜீர்ணோத்தாரணம் செய்யவேண்டிய பாத்தியம் வாதியின் எஜமானருக்கு எவ்வளவும் சம்மந்தமில்லே. ஸ்ரீங்கேரியிலிருக்கிற வாதியின் எஜமான் லோககுருவென்றும் அவர் செங்காராசாரியரான

மடாதிபதி என்றும் வாதி பிராதில் சொல்வது சரியல்ல. எப்படி யென்றால்.

1-வது. ஜெகத்குருவாகிய ஆதி ஸ்ரீசங்கரபகவத் பாதாசாரியரான ஸ்ரீசெங்கராசாரியசுவாமியவர்கள் கலியுகம் பிறந்து 2000த்துக்குப் பின் கேரளதேசத்தில் அவதாரம்பண்ணி அத்வைதத்திற்கு விருத்தமாயிருக்கிற மதங்களை கண்டனம் பண்ணி மண்டனமிசிர சரசுவதி முதலான பேர்களை வாதத்தினாலே ஜயிச்சு சஞ்சாரம் பண்ணி வருகையில் சாஸ்திர புராண பிரசித்தமாயும் முக்திக்ஷேத்திரமாயுமிருக்கிற காஞ்சீபுரத்தில் வந்து லெக்ஷ்மீ ஸரஸ்வதி முதலானவர்களுக்கு அதிதேவதையாயும் வேத பிரசித்தியாயுமிருக்கிற ஸ்ரீகாமாக்ஷி அம்மனுக்கு ஆலயமுதலானதுகளை நிர்மாணம் செய்வித்து காமாக்ஷி அம்மன் சந்நிதியில் சகலலோக க்ஷேமகரமான ஸ்ரீசக்கிரபிரதிஷ்டையும் சர்வக்ஞபீடமென்கிற காமகோடிபீடஸ்தாபனமும் முக்கியமான மடமும் ஷண்மத ஸ்தாபனமும் செய்து கஜாரணிய க்ஷேத்திரமான மேற்படி ஜெம்புகேசுவரத்தில் ஸ்ரீ அகிலாண்டேசுவரி அம்மனுக்கு ஸ்ரீசக்கிரதாடங்கங்களை செய்வித்து பிரதிஷ்டை செய்து தாரணம் செய்வித்து அவடத்திலும் மடமும் நிர்மாணம்பண்ணி தமக்கு மனோனுகூலராயும் சிஷியராயும் அத்தியந்தம் யோக்கியராயுமிருந்த சுரேசுவராசாரிய சுவாமியவர்களை காஞ்சீபுரத்தில் காமகோடி பீடாதிபதியாக ஏற்படுத்தி கைலாஸத்திலிருந்து கிடைத்திருந்த அஞ்சுலிங்கங்களில் தாம் பூசை பண்ணிக்கொண்டிருந்த முக்கிய லிங்கமான போகலிங்கமென்கிற ஸ்ரீ செந்திரமௌளீசுவர சுவாமியையும் கொடுத்து ஆராதனம் செய்துக்கொண்டு முக்கிய மடாதிபதியாயும் லோக குருவாகியும் சகல பிராதுகளுடன் சிஷ்யரக்ஷணார்த்தம் லோகசஞ்சாரமும் தர்ம்மபரிபாலனமும் முதலானதுகளும் செய்துகொண்டிருக்கும்படி அனுக்கிரகம் செய்து 32-வது வயசில் காஞ்சீபுரத்தில் சித்தி அடைந்தார்கள். அந்தப்படி மேற்படி பீடத்தில் பரம்பரையாக மடம் முதலானதுகளை அனுபவித்துக்கொண்டு வருகையில் ஸ்ரீ அகிலாண்டேசுவரி அம்மனுடைய ஸ்ரீ செக்கிரதாடங்கங்கள் ஜீர்ணமாயிருந்த சமாசாரம்

தெரிந்து இதற்கு 158-வருஷத்துக்கு முன்னான அட்சயவருஷத்திலும் 85-வருஷத்திற்கு முன்வந்த ஈசுவர வருஷத்திலும் அப்போதிருந்த காமகோடி பீடாதிபதி அவர்களான ஸ்ரீ செங்கராசாரிய சுவாமியளவர்கள் ஜீர்ணோத்தாரணம் செய்து முன்போல் அம்மனுக்கு சாத்திவைத்தார்களே தவிர வாதி பிராதில் சொல்லுகிறபடி அபிநவ ஸச்சிதானந்தபாரதி என்கிறவர் சேதுயாத்திரை நிமித்தியமாய் மேற்படி கோவிலுக்கு வந்ததில்லை; மேற்படி தாடங்கங்களை ஜீர்ணோத்தாரணம் செய்ததுமில்லை.

2-வது. ஷை 1-வது கலத்தில் காட்டியபடி காமகோடி பீடாதிபதிகளே லோக குருவும் சங்கராசாரியரும் முக்கியமான மடாதிபதியுமே தவிர பிராதில் கண்டபடி வாதியின் எஜமானர் லோககுருவல்ல. காமகோடி பீடாதிபதியாகிய செங்கராசாரிய சுவாமியார் அவர்களாயும் மடாதிபதியாயும் லோக குருவாயும் ஸ்ரீ சக்கிர பிரதிஷ்டாபனாசாரியார் என்கிற பிருதுள்ளவராயுமிருக்கிற முதல்பிரதிவாதி அவர்களே ஸ்ரீசக்கிர தாடங்க பிரதிஷ்டைசெய்யப் பாத்தியஸ்தாளாயுமிருக்கச்சே வாதி தெரியாத்தனமாய் சில துஷ்டஜனங்களுடைய துர்ப்போதனையினாலே முதல் பிரதிவாதி அவர்களுடைய பீடாதிகாரமான பிருதாவளியுடன் இருக்கிற எதார்த்தமானபேரைக் காட்டாமல் மறைத்து ஸ்ரீங்கேரியிலிருக்கிற தன்னுடைய எஜமானரே மடாதிபதி என்றும் சகல பிருதுகள் உள்ளவரென்றும் பெரிதாய்க்காட்டி எழுதினத்தினால் அவருக்கு ஸ்ரீசக்கிர தாடங்க பிரதிஷ்டை பாத்தியம் ஒருபோதும் உண்டாகமாட்டாது.

3-வது. ஷை காமகோடி பீடாதிபதியாகிய சங்கராசாரிய சுவாமி அவர்களுக்கு கர்னாடக துரைத்தனத்தாராலே இந்த சுபா முதலானவிடங்களில் இனாம் கிராமம் பூமிகளும் ரொக்கவருமானங்களும் மேற்படி காமகோடி பீடாதிபதிகள் பேரால் ஏற்பட்டிருக்கிறதும் தவிர ஹிந்துக்களில் விபூதி ருத்திராக்ஷம் தரிக்கப்பட்ட பிர்ம்ம க்ஷத்திரிய வைசியர்கள் சூத்திராள் முதலானவர்களின் சுப சோபனங்களில் அக்கிரசம்பாவனைகளும் நாளதுவரையில் முதல் பிரதிவாதி அவர்களுக்கு நடந்துவருகிறது.

4-வது. இக்கன்னியில் விவாதப்படுகிற தாடங்கம் சாத்திக் கொள்ளுகிற அகிலாண்டேசுவரி அம்மன் தேவஸ்தானத்து ஆலயத்துக்குள் முதல் பிரதிவாதி அவர்களுக்கு யிருக்கிற ஆதி சங்கராசாரியரவர்களாலே முதலாவது கலத்தில் காட்டியபடி நிர்மாணம் பண்ணப்பட்ட மடத்துக்கு ஷை செம்புகேசுவரம் தேவஸ்தானம் வரும்படியிலிருந்து வெகுகாலமாயும் கும்பினி ஜப்தி ஆனத்துக்கும் பிறகு நாளதுவரையிலும் ஷை முதல் பிரதிவாதி அவர்கள் மடத்துக்கு வருமானங்களும் ஷை தேவஸ்தானத்து தர்ம்மகர்த்துவ அதிகாரமும் நடந்துவருகிறது. ஷை ஸ்ரீ சக்கிறதாடங்க பாத்தியம் ஷை காமகோடி பீடாதிபதி அவர்களாகிய ஸ்ரீ சங்கராசாரியசுவாமியளு தானத்துனுலே அந்தந்த தேவஸ்தானங்களில் ஷை பீடத்துக்கு மடங்களும் வருமானங்களும் ஏர்ப்பட்டு நடந்துவருகிற அனுயோகமே ஸ்ரீசக்கிறதாடங்க ஜீர்ணோத்தாரண பாத்தியம் முதல்பிரதிவாதிகளுது என்பதற்கும் வைத்தவர்களுக்கு பாத்தியமில்லை என்பதற்கும் போதுமான ருஜுவாகயிருக்கிறது.

5-வது. காஞ்சீபுரம் ஸ்ரீ காமாக்ஷி அம்மன் தேவஸ்தானத்தில் ஸ்ரீசக்கிற ஜீர்ணோத்தாரணம் செய்யவேண்டியதாக நேரிட்டு அதற்காக முதல்பிரதிவாதி அவர்கள் மேலெழுதிய பாத்தியப்படிக்கே 1839-௵த்துக்கு முன் விகாரி வருஷத்தில் காஞ்சீபுறத்துக்கு விஜயம்பண்ணி சர்க்காரார் ஷை தேவஸ்தானம் அயிவேஜியிலிருந்து ரூ 4000-ம் குடுத்ததும் தவிற பக்கங்களிலும் ரூ 4000-வரையில் சேகரித்து சிலவுசெய்து ஷை ஸ்ரீசக்கிற ஜீர்ணோத்தாரணம் வெகு பிரசித்தமாய் செய்து ஸகல மரியாதைகளும் பெத்திருக்கிறார்கள் ஸ்ரீ அகிலாண்டேசுவரி ஸ்ரீ சக்கிறதாடங்க ஜீர்ணோத்தாரணமும் செய்யவேணுமென்றும் ஷை தாடங்கம் வெகு மலினமாயிருக்குதென்றும் ஜெம்புகேசுவரம் ஸ்தலத்தார் அர்ச்சகாள் முதலானவர்கள் முதல் பிரதிவாதி அவர்களுடைய ஸந்நிதானத்துக்கு மன்மத௵ தை௴ 15௳யில் விக்கியாபன பத்திரிகை முதல் பிரதிவாதி அவர்களுடைய ஜெம்புகேசுவரமடம் காரியம் றெங்காவதானியவர்கள் மூலமாய் எழுதிக்கொண்டதற்கு ஷை றெங்காவதானி அவர்கள்பேருக்கு

ஷை தாடங்க ஜீர்ணோத்தாரணம் செய்யவேண்டிய சிலவு சங்கதி விவ றம் தெரியவில்லையென்றும் அதற்காக காரியஸ்தாளை அனுப்புகிறே மென்றும் அதுசங்கதி அப்போது இந்தசீமையில் ஹேட்டுசிரஸ்தா வாயிருந்த பாபுறாயர் அவர்களுக்கும் ஸ்தலத்தாருக்கும் தெரியப் படுத்தச்சொல்லி ஷை றங்காவதானி அவர்கள் பேருக்கு 1836௵ மார்ச்சி௴ 13உயில் போஸ்டாபீஸ் மூலமாய் கடுதாசி எழுதிருக் கிறதுமல்லாமல் பிறகு விளம்பி௵த்தில் ஷை தாடங்க ஜீர்ணோத் தாரண நிமித்தியமாய் முதல் பிறதிவாதி அவர்கள் ஜெம்புகேஸ் வரத்துக்கு வந்ததின்பேரில் ஷை ஜெம்புகேசுவரம் ஸ்தலத்தாரும் அர்ச்சகாள் அண்ணாத்துறை பண்டிதரென்கிற அனந்த பண்டிதர் முதலானவர்களும் இந்த சுபா கலெக்ட்டர் துரையவர்களுக்கு ஷை ஸ்ரீ சக்கிறதாடங்கம் ஜீர்ணோத்தாரணம் செய்யவேண்டியது காஞ்சீ காமகோடி பீடாதிபதி அவர்களாகிய முதல் பிரதிவாதி அவர்களே செய்யவேணுமென்று அவர்கள் அதற்காக இவடம் வந்து 4-மாசகால மானத்துனாலேயும் ஷை தாடங்கம் வெகுஜீர்ணமா யிருக்கிறத்து னாலே சீக்கிரமாய் ஜீர்ணோத்தாரணம் செப்விக்கும்படி வுத்திரவாக வேணுமென்று அர்ஜி குடுத்து இருக்கிறார்கள்.

6-வது. ஸ்ரீ சக்கிறதாடங்க ஜீர்ணோத்தாரணம் செய்யவேண் டிய பாத்தியம் வாதியின் எஜமானருதாயிருந்தால் ஷை ஸ்தலத்தார் அர்ச்சகாள் முதலானவர்கள் முதலில்தானே ஷை சங்கதியைக்குரி த்து வாதியின் எஜமானருக்கு விஞ்ஞாபன பத்திரிகை சிரிங்கேரிக்கி எழுதிருக்கவேணுமே அப்படிக்கில்லாமல் ஹேவிளம்பி வருஷத்தில் வாதியின் எஜமானர் சேதுயாத்திரையாக இந்த மார்க்கமாய் வந்த தில் முதல் பிரதிவாதி அவர்களிட சிஷியார்ஜினம் முதலான சிலகாரி யங்களில் மாமூல் வழக்கத்துக்கு விரோதமாய் பிரவேசித்ததைத் தடங்கல்செய்து அது சங்கதியைப்பற்றி அப்போதிருந்த இந்த சுபா ஹெ. அ. மேஜஸ்திரேட்டு துரையவர்களும் விளம்பரப்படுத்தி இவ டம் விட்டு அப்புறப்பட்டு போனபிறகு ஜெம்புகேஸ்வரத்தில் இருக் கிற சிலதுஷ்டர்களை அர்த்தமூலமாய் சுவாதீனப்படுத்திக்கொண்டு தாடங்க பிரதிஷ்டை வாதியின் எஜமானர் செய்யவேண்டியதுபோல்

1836ளு மேஜீ 20உயில் கலெக்டர் துரையவர்களுக்கு அர்ஜி எழுதும்படி செய்வித்து யிருந்தபோதிலும் இன்னும் யாருக்கு எவ் விதமான மார்பாடுகளாய் எழுதப்பட்டிருந்தபோதிலும் அதுகள் வாதி கொண்டுவந்திருக்கிற நிராதரவான பிராதுக்கு ஒருபோதும் பாத்தியம் செய்யப்படமாட்டாது.

7-வது. சாலிவாகனா சகாப்தம் 1719-ம் வருஷமாகிய பிங்கள வருஷத்தில் அப்னவோத்தண்ட வித்தியாரண்ணிய பாரதீ என்கிற ஒரு எதிதான் ஸ்ரீங்கேறி மடாதிபதி என்றும் ராமேஸ்வர யாத்திரைக்காக இந்த தேசத்து மார்க்கமாய் போகையில் காமகோடிபீடாதிபதி அவர்களுடைய மடத்து சிஷியர்களை தங்களுக்கும் சிஷியார்ஜிதம் குடுக்கவேணுமென்று தொந்திரவுசெய்ய எத்தனப்பட்டதில் முதல் பிரதிவாதி அவர்களுக்குமுன் காமகோடி பீடாதிபதிகளாயிருந்த சங்கராச்சாரிய சுவாமியவர்களுக்கு தெரிந்து காரியஸ்தரை அனுப்பி ஆக்ஷேபம் செய்ததில் ஷை வித்தியாரண்ணிய பாரதீசுவாமியள் தனக்கு தெரியாமலிப்படிக்கி நடந்ததாயும் தமக்கு இந்த பிரதேசங்களில் யாதொரு சுதந்தரமும் இல்லையென்றும் இன்னும் சில விவரங்களும் காமகோடி பீடாதிபதி அவர்களுடைய பிருதாவளிகளையும் கண்டு ஷை பிங்களஞு ஆசுவிஜபஹுள தசமி தினத்தில் ஒடம்படிக்கையும் எழுதி குடுத்திருக்கிறார்கள்.

8-வது. பின்னும் வாதி எஜமான் ஹேவிளம்பி வருஷத்தில் சேதுயாத்திரைக்காக வரும்போது மகா மகத்துக்காக தஞ்சாவூர் சீமைக்கிவர எத்தனப்பட்டு அவருடைய முக்கிய காரியஸ்தரான அனந்தாவதானி வசத்தில் தஞ்சாவூர் மகாராஜா அவர்களுடைய அறமனைக்கி முதல் பிரதிவாதி அவர்களுடைய மடம் மத்தியஸ்தராயிருக்கிற ராஜம்பட்டர் என்கிற ராமசெந்திர தீக்ஷிதர் பேருக்கு ஸ்ரீமுகங்கள் குடுத்து அனுப்பிவித்ததை ஷை ராஜம்பட்டர் மகாராஜா அவர்களுக்கு தெரியப்படுத்தினதில் வாதியின் எஜமானருக்கு இந்தப் பிரதேசங்களில் யாதொரு சம்மந்தமும் இல்லாத்தினாலேயும் முதல்பிரதிவாதி அவர்களே லோக குருவானத்தினாலேயும் அந்த ஸ்ரீமுகத்தை அங்கீகரிக்கிறது இல்லை என்று திருப்பிவிட்டதை

ஷை அனந்தாவதானி வாதியின் எஜமானருக்கு தெரியப்படுத்தி வுத்திரவின்பேரில் மேற்படியார் சேதுயாத்திரைக்கி போகிறதாயும் அவருக்கு அக்கிறதாம்பூலம் முதலான யாதொரு சுதந்திரமும் இந்த பிரதேசஙகளில் இல்லே என்றும் முதல்பிரதிவாதி அவர்களுடைய மடத்துவாசல் வழியாய் வருகிறதில்லேயென்றும் முதல் பிரதிவாதி அவர்களுடைய பிருதாவளிகளேயும் கண்டு ஹேவிளம்பிஹு புஷிய பஹுள திருதியை தினத்தில் ஷை ராஜம்பட்டர் பேருக்கு ஷை அனந்தாவதானி பத்திரிகையும் எழுதிக் குடுத்திருக்கிருர்.

9-வது. பிறகு வாதியின் எஜமான் கும்பகோணம் சமீபத்துக்கு வருகையில் முதல்பிரதிவாதி அவர்களுடைய மடத்துவாசல் வழியாய் வர எத்தனப்பட்டு தடங்கலாய் அதுசஙகதி அந்த ஜில்லா சப்கலெக்டர் மேஸ்டர் ஸ்காட் துரையவர்களுக்கு தாசீல்தார் அரிக்கை செய்ததில் ஷை வாதியின் எஜமானருக்கு இந்த பிரதேசஙகளில் யாதொரு பாத்தியமும் இல்லாத்துனலே ஷை மடத்தின் வாசல் வழியாய் போகக்கூடாதென்று 1838ஹு மார்ச்சிமீ 13உயில் கும்பகோணம் தாலூகா தாசீல்தாரருக்கு சன்னது புறந்து அப்படியே வாதியின் எஜமான் அந்தமார்க்கமாய் வரக்கூடாதென்றும் தடஙகலாய் போய்விட்டுது.

10-வது. பின்னும் முன்னிருந்த காமகோடி பீடாதிபதி அவர்கள் கர்னுடக துரைத்தனத்திலும் நவாப்பு ஸாகேப் துரைத்தனத்திலும் கும்பினி துரைத்தனத்திலும் சிஷிய பிரதேசஙகளுக்கு விஜயம் செய்த முன்னுக்கு அவர்களுக்கு அதிகாரஸ்தர்கள் செய்யவேண்டிய சகாயஙகளேக்குறித்தும் இந்துக்கள் செய்யவேண்டிய மரியாதைகளே குறித்தும் கூடப்போகப்பட்ட ரூனுக்களுக்கும் குடுத்திருக்கப் பட்ட ரகதாரி முதலானதுகளிலும் முதல் பிரதிவாதி அவர்களுடைய பிருதாவளிகளேயும் கண்டிருக்கிறது.

11-வது. இதுவும்தவிர முதல் பிரதிவாதி அவர்கள் அநேக மகாராஜாக்களுக்கும் ஜமீன்தார் பாளேயக்காரர்முதலான பிரபுக்களுக்கும் லோக குருவானத்தினலே அவர்களுடைய பிருதாவளிகளேக் கண்டு ஷை பிரபுக்கள் விக்கியாபன பத்திரிகைகள் அவர்களுடைய

முகருடன் எழுதிக்கொண்டு மிருக்கிறுர்கள். இத்தியாதி ஆதிரவு அனுபோகம் முதலானதுகளை கோரட்டாரவர்கள் பார்வையிட்டு யோசித்தால் காமகோடி பீடாதிபதி அவர்களாகியமுதல்பிரதிவாதி அவர்களே லோககுருவான சங்கராசாரியாரென்றும் ஸ்ரீசக்கிர தாடங்க பிரதிஷ்டை செய்யவேண்டிய பாத்தியம் அவாளுக்கே இருக்கிறதென்றும் மைத்தயாருக்கும் அது பாத்தியமில்லை என்றும் விசிதமாகும். மேல்கண்டபடிக்கு வெகு மகிமையும் மரியாதைகளும் யோக்கியதாம்சமும் உடைத்தான ஸ்ரீ காமகோடி பீடாதிபதி அவர்களாகிய ஸ்ரீ சங்கராசாரியசுவாமி அவர்களான முதல்பிரதிவாதி அவர்களை பிராதில் அந்தஸ்து குறைச்சலாய் மரியாதை தாழ்வாயும் எழுதியிருப்பதை கோரட்டாரவர்கள் யோசித்தால் வாதிக்கு சிக்ஷை செய்யவேண்டியது. நியாயமென்றும் வாதி பிராது விசாரணைக்கே தகுந்ததல்லவென்றும் கோரட்டாருக்கு விசிதமாகும்.

12-வது. முதல் பிரதிவாதி அவர்கள் 1837 ௵த்தில் சிஷிய பிறதேசங்களுக்கும் ஸ்ரீ சக்கிர ஜீர்ணோத்தாரணம் செய்யவேண்டியதற்கும் கும்பகோணத்திலிருந்து காஞ்சிபுரத்துக்கு விஜயம் செய்கிற முன்னுக்கு தஞ்சாவூர் மகாராஜா அவர்கள் மூலமாய் ரெவிடெண்டு துரையவர்களுக்கு திரிக்கைசெய்து அவர்கள் கெவுனர்மெண்டாரவர்களுக்கு தெரியப்படுத்தினதில் ஸ்ரீங்கேரி மடத்துக்கும் முதல்பிரதிவாதி அவர்களே குருவென்றும் அப்பேர்க்கொற்ற இவர்களுக்கு இந்துக்கள் அனைவர்களும் வணக்கமும் மரியாதையும் செய்வார்களென்பதில் கவர்ன்மெண்டாரவர்களுக்கு சந்தேகமில்லை என்று அபிப்பிராயங்கண்டு 8 ஜில்லாக்களுக்கு ஆர்டர் அனுப்பிவித்து இருக்கிற சங்கதியைக் குறித்து ஷை ரெவிடெண்டு துரையவர்களுக்கு லெட்டர் அனுப்புவித்திருக்கிறுர்கள். ஷ்அதப்படியே முதல்பிரதிவாதியவர்கள் யாத்திரைசெய்த தேசங்களில் சர்க்கார் மனுஷியாளாலே இஸ்திதபால் முதலான சகல மரியாதைகளும் நடந்திருக்கிறது. அப்பேர்க்கொற்ற முதல் பிரதிவாதியவர்களை சுவல்ப அந்தஸ்துள்ள வாதி மரியாதை தாழ்வாய் பிராதில் பேசியிருப்பதை கோரட்டாரவர்களே யோசிக்கவேணும்.

13-வது. இந்த விவாதப்படுகிற ஸ்ரீ சக்கிரதாடங்கம் ரொம்ப வும் ஜீர்ணமாய் இருப்பதினலே அதற்கு ஒருவேளை அபாயம் சம்பவித்தால் ஆகம சாஸ்திரப்படிக்கு ஷை அகிலாண்டேசுவரி அம்மனுக்கு பூஜை முதலான காரியங்கள் நடவாமல் குந்தகப் படுமென்று ஷை ஜெம்புகேசுவரம் கோவிலுடைய சகல காரியங் களுக்கும் கோரட்டாரவர்களுடைய உத்திரவுப்படி முக்தியாராய் நேமித்திருக்கிற தர்மகர்த்தாவாகிய 2-வது பிரதிவாதி அவர்கள் யோசித்து இந்த பிரதேசங்களில் இருக்கிற இந்து மதஸ்தாளாகிய பாரிசாவுகார் வர்த்தகாள் பெரியமனுஷியாள் உத்தியோகஸ்தாள் முதலானவர்களையும் ஷை தேவஸ்தானத்திலுள்ள அநந்தகொத்து சகல பரிஜனங்களையும் ஜெம்புகேசுவரத்துக்கு சமீபமான ஸ்ரீரங்க தேவஸ்தானத்து ஸ்தானிகாள் ஸ்தலத்தார் முதலான அந்தஸ்துள் ளவர்களையும் வரவழைத்து ஷை கோவில் சுவாமி சந்நிதியில் வைத் துக்கொண்டு மேல்கலங்களில் சொல்லிய ஆதிரவுகளையும் கோவில் கணக்கு முதலான அனுபோகங்களையும் செம்மையாய் விசாரித்து நியாயப்படிக்கும் மேல்கண்ட சகல ஜனங்களுடைய அனுமதிப்படிக் கும் ஷை ஸ்ரீ சக்கிரதாடங்கம் ஜீர்ணோத்தாரம் செய்யவேண்டிய பாத்தியமுள்ள காமகோடி பீடாதிபதி அவர்களாகிய முதல் பிரதி வாதி அவர்களாலேதானே ஷை தாடங்க பிரதிஷ்டை செய்வித்து அம்மனுக்கு சாத்திவைக்கும்படியாய் ஷை ஜெம்புகேசுவரம் தேவஸ் தானம் பேஷ்காருக்கு சன்னதுபண்ணி அந்தப்படி ஷை தாடங்கங் களை முதல் பிரதிவாதி அவர்கள் ரூ 4000வரையில் செலவுசெய்து முன் நடந்த வழக்கப்படிக்கும் மாந்திர சாஸ்திரப்படிக்கும் ஷை அம் மனுடைய பூஜை நைவேத்தியம் முதலானதற்கு யாதொரு குந்தக மன்னியில் பூஜாருகமாயும் தேவதா சான்னித்தியமாயுமுள்ள ஸ்ரீ சக்கிரதாடங்கங்களை அம்மனுக்குச் சமர்ப்பித்து அதைப்பற்றி ஷை ஸ்தலத்தில் முதல் பிரதிவாதி அவர்கள் மரியாதைகளும் பெற்று இவ்வித கிரமப்படிக்கு நிறைவேற்றியிருக்கிற ஸ்ரீ சக்கிரதாடங்கத் தைக் குறித்து யாதொரு பாத்தியமில்லாத வாதி சில பொய்யான முகாந்திரங்களைக்கொண்டு துர் அகங்காரத்தினலே வாதி மனுக்கள்

முதலானதுகள் கொடுத்து வழக்காடுவது செல்லாதென்று விசிதமா கும். ஆகையால் நியாயஙகளையும் ஆதிரவு ருசுக்களையும் கோர்ட் டாரவர்கள் பார்வையிட்டு விசாரித்து யோசித்து வாதி பிராதை தள்ளி நியாயமான தீர்ப்பு செய்து தரவேணுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

1844ஹு
நவம்பர்மீ 16உ } (ஒப்பம்) வக்கீல் **சுப்பய்யர்.**

பேஷ்கார் முகுந்தானந்த பிள்ளை எழுதிக்கொண்ட அர்ஜி

என்னவென்றால்.

இப்போதும் ஸ்ரீ அகிலாண்டேசுவரி அம்மன் தாடங்கம் ஜீர்ண மாகி பூணல் நூலினாலே கட்டி வெகு ஜாக்கிரதையின்பேரில் தினம் பிரதி சாத்திக்கொண்டு வருகிறார்கள். நாளுக்குநாள் வெகு ஜீர்ணத் தை அடைகிறது. எந்தவேளையில் நூல் அறுந்துபோய் அபாயம் வருமோ தெரியவில்லை. அப்படி நேரிட்டால் பிறகு பழுதுபார்த்து சாத்துகிறவரையில் கோவிலுக்கே பூசை நைவேத்தியம் செய்யக் கூடாதென்றும் சீமைகளுக்கும் மகாராஜாக்களுக்கும் கோவில் தர்ம காரியத்துக்கு பிரவேசிக்கிறவர்களுக்கும் வெகு குறைச்சல் நேரிடு மென்றும் ஸ்தலத்தார் அர்ச்சகாள் முதலானபேர்கள் சொல்லுகிறார் கள். கும்பகோணத்திலிருந்து வந்திருக்கிற சங்கராசாரியசுவாமிய ளவர்கள் கும்பகோணத்துக்கு விஜயஞ் செய்யப்போகிறதாய் கேழ் வைப்படுகிறேன். அப்படிக்கவாள் புறப்பட்டுப் போய்விட்டால் பிறகு தாடங்க ஜீர்ணோத்தாரணம் ஆகிறது ரொம்பவும் வருத்தமா யிருக்கும்.

ஆகையால் சீக்கிரமாய்த்தானே ஷை தாடங்கத்துக்கு ஜீர்ணோத் தாரணம் செய்விக்கும்படி உத்திரவாகவேண்டிய சங்கதி தெரியலாவ தாய் எழுதிக்கொண்டேன்.

குரோதிஹு
ஆனிமீ 32உ }

R. 18.

திருச்சினுப்பள்ளி ஜில்லா பிறன்சீபல் சதர்மீன் கோர்ட்டா ரவர்கள் சமுகத்துக்கு.

1844௵ த்திய அசல் 95-நம்பரின் 2-வது பிரதிவாதியாகிய ஜெம்புகேசுவரம் தேவஸ்தானம் தர்ம்மகர்த்தரான சந்திரசேகரம் பிள்ளைக்காக பிளீடர் கிருஷ்ணராவு வெங்கிட்டராமய்யர் நாங்களிருவரும் சலாம்செய்து எழுதிக்கொண்ட ஆன்சர் என்னவென்றால் வாதி பிராது சரியல்ல. பிராதிலிருக்கிற ஸ்ரீ அகிலாண்டேசுவரி அம்மனுக்குசாத்தப்பட்டிருக்கிற ஸ்ரீசக்கிரதாடங்கம் துறஸ்துசெய்விக்க வேண்டிய பாத்தியம் வாதியின் எஜமானருதல்ல. அடியில் காணுகிற முகாந்திரங்களால் வாதி பிராது விசாரணைக்கே யோக்கியமல்லவென்று விசிதமாகும். அது எப்படி என்றால்: முதலாவது விவாத ஸ்ரீ சக்கிரதாடங்கங்களை ஸ்ரீ ஆதி ஸ்ரீ பகவத்பாதாசாரியரான சங்கராசாரிய சுவாமியவர்களாலே செய்யப்பட்டு அதுகளை ஸ்ரீ அகிலாண்டேசுவரி அம்மனுக்கு சாத்தப்பட்டதென்பதையும் அதுகள் பூஜாருகம் என்பதையும் தேவதாசாந்நியத்தியமுள்ள தென்பதையும் அதுகள் அம்மனுக்கு சாத்தாமல் பூஜை நைவேத்தியமுதலானதுகள் செய்யக்கூடாதென்பதையும் வாதியும் முதல் பிரதிவாதியவர்ளாகிய காஞ்சீ காமகோடி பீடாதிபதியவர்களான சஙகராசாரியளவர்களும் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

2-வது. ஸ்ரீ சக்கிரதாடங்கங்களை செய்வித்து எப்போது அதுகள் ஷை அம்மனுக்கு சாத்தப்பட்டதோ அப்பவே அதுகள் ஷை கோவிலைச் சேர்ந்த ஆபரணமாய்விட்டது. பின்பு அதுகளுக்கு யாதொரு அபாயங்களும் வராமல் துறஸ்துசெய்வித்து கார்ப்பாத்தி கொண்டுவரவேண்டியது. ஷை கோவில் விசாரணைக் கர்த்தரான அதிகாரஸ்தாளுடைய கடமையாயிருக்கிறது.

3-வது. அப்படிக்கு துறஸ்து செய்விக்கிறதில் ஷை தாடங்கங்களை கம்மாளர்கள் தொடும்படி நேரிடுமானதினால் அது ஸ்ரீ சக்கிரரூபமாயும் தேவதா சான்னித்தியமுள்ளதானத்தினாலே அந்ததோஷ

நிவாரண கிரித்தியமாய் அதற்கு பிரதிஷ்டையும் சம்பிரோக்ஷணை யும் மந்திர சாஸ்திர மூலமாய் முன்பின் செய்வித்தவர்களைக்கொண்டு செய்விக்கவேண்டியது முக்கியமான காரியம்.

4-வது. கௌரம்பொருந்திய போரட்டாரவர்களுடைய உத்திரவுப்படி இந்த ஜில்லா கலெக்டர்துரையவர்கள் மேற்படி கோவிலுக்கு தர்ம்மகர்த்தாவாகவும் கோவில் காரியங்களை சுதந்திரமாய் செலுத்திவரும்படியாயும் யாதொரு குந்தகமும்வராமல் நிறவேற்றி வரும்படியாயும் 1842௵ நவம்பர்௴ 12உயில் ஹுக்கும்நாமா கொடுத்து மேற்படி ஸ்ரீ சக்கிரதாடங்கமுதலான கோவில் ஆபரணம் வகைறாக்களை 2-வது பிரதிவாதி வசம் ஒப்புவித்து ரசீது பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள். அதுமுதல் 2-வருஷகாலமாய் 2-வது பிரதிவாதி மேற்படி கோவில் காரியங்களை வெகு செம்மையாயும் விமர்சையாய் நடப்பிவித்து வருகையில் ஷை கோவில் காரியங்கள் வெகு செம்மையாயும் விமர்சையாய் நடப்பிவித்து வருகையில் ஷை ஸ்ரீ சக்கிற தாடங்கங்களை வெகு வருஷத்துக்குமுன் துறஸ்து செய்வித்ததானத்தினாலே ரொம்பவும் மலினமாகி நூல்களினாலே கட்டப்பட்டு ஜாக்கிரதையின்பேரில் தினப்பிறதி சாத்திவந்ததில் ஷை ஜெம்புகேசுவரம் கோவில் முக்கிய ஸ்தலத்தாராகிய 3-வது பிரதிவாதியும் பூசை செய்கிற அர்ச்சகாளாகிய 4, 5, 6, 7, 8, இந்தப் பிரதிவாதிகளும் ஸ்தானீகாளாகிய 9, 10, 11, இந்தப் பிரதிவாதிகளும் பின்னும் பிரதிவாதிகளில் சேறாத அர்ச்சகாள் ஸ்தானீகள் முதலானவர்களும் ஷை தாடங்கம் அம்மனுக்கு சாத்துகிறதற்கு ரொம்பவும் வர்த்தமாயிருப்பதினாலே காஞ்சீ காமகோடி பீடாதிபதி யவர்களாகிய சங்கறாசாரியசுவாமியளவர்கள் அதற்கு பாத்தியஸ்தாளென்றும் அவர்களால் ஜீர்ணோத்தாரணம் செய்விக்க வேணுமென்றும் அதற்காகவே தாங்களனைவரும் விக்கியாபன பத்திரிகை மூலமாயும் ரூபுரூபிலும் அரிவித்துக்கொண்டு ஷை சுவாமியவர்கள் ஜம்புகேஸ்வரத்துக்கு வந்திருப்பதினாலே அவர்களைக்கொண்டு ஷை தாடங்க ஜீர்ணோத்தாரணம் செய்விக்கவேணுமென்று ருசோபகிருது௵ கார்த்திகை௴ 29உ 2-ம் பிரதிவாதிபேருக்கு

அர்ஜி குடுத்தது அல்லாமல் ஷை தேவஸ்தானம் பேஷ்க்கார் அதின் பிறகு நாளது குரோதன௵ ஆனிமீ 32-ம் தேதியில் 2-ம் பிரதிவாதி பேருக்கு ஸ்ரீ சக்கிரதாடங்கம் ஜீர்ணமாயிருக்கிறது. பூணநூல் கட்டி சாத்திக்கொண்டு வருகிறதினலே நாளுக்குநாள் வெகு ஜீர்ணத்தை அடைகிறதென்றும் அதற்கு அபாயம் நேரிட்டால் பிறகு பழுதுபார்த்து பிரதிஷ்டைசெய்து சாத்துகிறவரையில் அம்மனுக்கு பூஜைமுதலானது செய்யக்கூடாதென்று ஸ்தலத்தார் அர்ச்சகாள் முதலானவர்கள் சொல்லுகிறதாயும் அதற்கு பிரதிஷ்டை செய்யவேண்டிய பாத்தியஸ்தரான முதல் பிரதிவாதியவர்கள் கும்பகோணத்துக்குப் போக பயணமாயிருப்பதுனலே சீக்கிரமாய் ஜீர்ணோத்தாரணம் செய்விக்கவேணுமென்றும் கண்டெழுதிக் கொண்டார் அதின்பேரில் பூஜை முதலான காரியங்களுக்கு யாதொரு அபாயமும் சம்பவிக்காமல் நிறவேத்திக்கொண்டு வரவேண்டிய 2-வது பிரதிவாதியானவர் ஷை தாடங்கத்தைப் பத்தி விசாரணை செய்ததில் காஞ்சீகாமகோடி பீடாதிபதியாகிய ஆதி சங்கராசாரிய சுவாமியார் அவர்கள் ஸ்ரீ சக்கிற தாடங்க பிரதிஷ்டை செய்யும்போது ஷை அம்மன் சன்னிதிக்கி சமீபத்தில் 2 தோட்டம் ரூ 5000 பொருமான மடம் நிர்மாணம் பண்ணிருப்பதுமல்லாமல் ஷை மடத்துக்கு ஷை கோவில் வருமானத்தில் வெகுகாலமாய் கும்பினி ஜப்தியானது முதல் நாளது வரையிலும் அரிசி எண்ணை முதலானதுகள் ஷை தேவஸ்தானம் சர்க்கார் கணக்குகளில் தாக்கலாயி குடுபட்டுக்கொண்டு அதை முதல்பிரதிவாதி யவர்களுடைய ஷை மடத்து காரியஸ்தர்கள் பத்திக்கொண்டு மடத்துக்குள்ள சகல மரியாதைகளையும் பெத்துக்கொண்டு வருகிறதினலேயும் முதல்பிரதிவாதி யவர்களைக்கொண்டே ஷை ஸ்ரீசக்கிரதாடங்கம் ஜீர்ணோத்தாரணம் செய்வித்து பிரதிஷ்டை செய்விக்க வேண்டியது நியாயமென்று வெகுவித ஆதிறவு அனுபோகங்களால் தெரியவந்தபோதிலும் ஷை தேவஸ்தானம் இந்துமதஸ்தருக்கு முக்கியமுள்ளதாகையால் இந்த சுபாவிலிருக்கிற பாரிசர்வுகார் வர்த்தகாள் பாரி மிறுசுதார்கள் பெரியமனுஷியாள் ஷை ஜெம்புகேஸ்வரத்துக்கு அடுத்த தேவஸ்

தானங்களிலுள்ள ஸ்தாலத்தார் ஸ்தானிகாள் முதலான அநேகம் பேர்களை ஷை ஜெம்புகேஸ்வரம் கோவில் சன்னிதியில் கூட்டி வைத்து ஷை கோவில் ஸ்தலத்தார் ஸ்தானிகாள் அர்ச்சகாள் மிருசு கணக்கு முதலான பேர்களை வரவழைத்து விசாரணை செய்ததில் ஷை தாடங்க ஜீர்ணோத்தாரணம் ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி யவர்களாகிய முதல்பிரதிவாதியவர்களைக்கொண்டே செய்து பிரதிஷ்டை செய்விக்கவேண்டியது நியாயமென்றும் அப்படிக்கி செய்யாமல் காலவிளம்பமாய் அபாயம் நேரிட்டால் பிறகு ஷை கோவிலுக்கு வெகு திரவியம் செலவுசெய்து சம்பிரோக்ஷணை முதலானதுகள் செய்யவேண்டியதாய் நேரிடுமென்றும் தெரியவந்ததினாலே முதல்பிரதிவாதியவர்களை மந்திர சாஸ்திரமூலமாய் ஷை ஸ்ரீசக்கிறதாடங்கம் ஜீர்ணோத்தாரணம் செய்வித்து ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அம்மனுடைய பூஜை நைவேத்தியம் முதலானதுகளுக்கு யாதொரு குந்தகமும் மன்னியில் தர்மபரிபாலனமும் செய்வித்து இருக்கச்சே ஷை கோவிலில் யாதொரு மிருசு காணியாக்ஷி முதலான அனுபோகங்களுமில்லாத இந்தவாதியின் யெஜமானர் அவர்களுக்கு சிலபேருடைய துர்போதனையின்பேரில் வாதி நூதனமாய் ஷை கோவிலில் ஒருபாத்தியதையை ஏர்ப்பாடுசெய்வித்துக்கொள்ள வேணுமென்றும் ஷை கோவில் காரியங்களுக்கு குந்தகமும் 2-வது பிரதிவாதி முதல்பிரதிவாதிகளுக்கு நஷ்டமும் நேரிடும்படி செய்ய வேணுமென்று யோஜித்து சர்க்காராலே பூவிராகன் 220-720-கிறயம் ஏர்ப்படுத்தி 2-வது பிரதிவாதி வசம் ஒப்பிவிக்கப்பட்டிருக்கிற ஷை ஸ்ரீசக்கிற தாடங்களுக்கு ரூ 2000 பொருமானம் ஏர்ப்படுத்தி வாதி கொண்டுவந்திருக்கிற இந்த வியாஜியம் சகலவிதத்திலும் செல்லாதென்றும் நீதிக்கொத்ததல்லவென்றும் விசிதமாகும் இதுவே தவிற வாதி பிறுதில் யெழுதிய மைத்த வீணை சங்கதிகளுக்கு 2-வது பிரதிவாதிவுத்திரவு யெழுதவேண்டிய அகத்தியமில்லே.

5-வது. 3-வது பிரதிவாதி முதல் 16-வது பிரதிவாதிவரையில் உள்ள பிரதிவாதிகளுக்காக யெழுதிக்கொண்ட ஆன்சர் என்ன

வென்றால். விவாதப்படுகிற ஸ்ரீ சக்கிறதாடங்கம் ஜீர்ணோத்தாறணம் செய்யவேண்டிய பாத்தியம் முதல்பிரதிவாதி யவர்களாகிய ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி யவர்களான ஸ்ரீசங்கராசாரிய சுவாமியவர்களுடைய பாத்தியமே தவிர வாதியின் எஜமானரவர்களுக்கு பாத்தியமில்லை யென்பதற்கு உள்ள ஆதிரவு அனுபோகங்கள் முதலானதுகளை முதல்பிரதிவாதி யவர்களுடைய ஆன்சரில் விவரமாய் கண்டிருப்பதினாலேயும் ஷை தாடங்கங்கள் ரொம்பவும் ...ரணமாயிருப்பதினாலே அதற்கு யாதொரு அபாயங்கள் நேரிடாமலும் ஸ்ரீ அகிலாண்டேசுவரி அம்மனுடைய பூஜை நைவேத்தியம் முதலான காரியங்களுக்கு யாதொரு குந்தகமன்னியில் ஷை ஸ்ரீசக்கிறதாடங்கங்களை நியாயமான பாத்தியஸ்தாளான முதல்பிரதிவாதி யவர்களைக்கொண்டே ஜீர்ணோத்தாரண பிரதிஷ்டையும் செய்வித்து இருப்பதை தர்மகர்த்தாவாகிய 2-வது பிரதிவாதியவர்களிட ஆன்சரில் விவரமாய் கண்டிருப்பதினாலேயும் அது சங்கதிகளுக்கு இந்த பிரதிவாதிகள் சாக்ஷி சொல்லுவாரென்கிற யெண்ணத்தினாலே வாதி அவர்களை வீணாய் பிரதிவாதிகளில்சேர்த்து சிலர்களுக்கு நஷ்டமும் சிலவும் நேரிடும்படி இந்த வியாஜியம் செய்திருக்கிறாரே தவிர வாதி பிராதில் கண்டிருக்கிற சங்கதி யெவ்வளவும் சரியல்ல ஆகையால் இதுகளுக்காக இருக்கிற ஆதிரவு ருசுக்களை விசாரித்து யோஜித்து வாதி பிறாதுதள்ளி நியாயம் தீர்ப்புசெய்துக் குடுக்க வேணுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

1844-ம் ௵
நவம்பர்௴ 19௨ }

திருச்சிறாப்பள்ளி ஜில்லா பிறன்சுபால் சதர்மீன் கோர்ட்டாரவர்கள் சமுகத்துக்கு 1844-ம் வருஷத்திய அசல் 95-ம் நெ. வாதி சேஷ ஜோசியருக்காக கோர்ட்டு வக்கீல் கிருஷ்ண சாஸ்திரியள் ஸலாம்செய்து யெழுதிக்கொண்ட ரிப்பளை.

பிராதில்கண்ட ஜகத்குருவாகிய சங்கற பகவத் பாதாசாரியாரவர்கள் விவாத ஸ்ரீசக்கிரதாடங்கம் செய்துவைத்ததையும் ஷையார்

பரம்பரையில் சேர்ந்த பீடஸ்தர்களாலேயே ஜீர்ணோத்தாரணம் செய்யவேணுமென்பதையும் பிரதிவாதிகள் ஆன்சரில் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் அதுதவிர மைத்த ஆன்சர் சங்கதி சரியல்லா ஸ்ரீங கேரியிலிருக்கும் ஸ்ரீசுவாமியளவாளே ஜகத்குருவென்பதும் சங்கராசாரியரென்பதும் சரஸ்வதி பீடாதிபதியென்றும் பேருள்ளவர்கள் அவரேயன்னியில் மைத்த ஒருவரும் அல்லா ஆசேது ஹிமாசல தேசங்களில் ஆதி சங்கர பகவத் பாதராலே செய்விக்கப்பட்டிருக்கிற விளாத ஸ்ரீசக்கிரதாடங்கம் முதலானதுகளை ஜீர்ணோத்தாரணம் செய்ய சிரிங்கேரி சுவாமியளவாளே பாத்தியஸ்தாளே தவிர முதல் பிரதிவாதிக்கு யெவ்வளவும் ஸம்பந்தமில்லை. ஆதி சங்கர பகவத் பாதரவர்களால் காஞ்சீபுரத்தில் பீடம் ஸ்தாபித்தும் அதில் சிஷியாளை வைத்ததுமில்லை அப்படியிருக்க அதில் யேதோ பரம்பரையாய் சிஷியர்களிருந்ததுபோலும் அதில் முதல்பிரதிவாதி சேர்ந்தவர்போலும் சொல்வதும் முழுபொட்டு சாஸ்திர புராணோக்தமாயும் லோகப்பிரசித்தமாயும் ஆன்சரில் கண்டபடி முதல் பிரதிவாதிக்கி யாதொரு பிருதாவளியும் பேரும் கிடையாது அது எப்படியென்றால்.

1-வது. விந்திய பருவதத்துக்கும் ஹிமவத் பருவதத்துக்கும் நடுவாகிய ஆரியவர்த்த தேசங்களில் சார்வசுதாள கெவுடாள மிசிராள் முதலானவர்கள் வேதசாஸ்திர புராணங்களுக்கு விருத்தமான நாணாவித மதத்தில் பிரவேசித்து இருந்ததும் தவிர தக்ஷிணதேசத்திலும் சில சனங்கள் இருந்தார்கள். அப்படிப்பட்டவர்களை ஜயிச்சி அதுவைத மதத்தை ஸ்தாபனம் செய்கிறதற்காக இந்துக்களுக்கெல்லாம் தெய்வமாகிய ஈசுவராம்சத்தில் இருந்து சங்கராசாரியாரென்கிற பேருள்ளவராய் கலியுகம்பிறந்து 3000 வருஷத்துக்கு பின் விக்கிரமாதித்தன் ராஜரீகத்தில் ஆதி சங்கர பகவத்பாதர் கேரளதேசத்தில் அவதாரம்செய்து ஸந்நியாசி ஆசிரமத்துடன் காசிக்கிபோயிருந்தவிடத்தில் விசுவநாதசுவாமி பிரத்தியக்ஷமாய் வந்து 5 லிங்கம் கொடுத்து அதுவைதபாஷியம் செய்யும்படியாய் அனுக்கிரகம்செய்தார் என்றும் அந்தப்படியே பாஷியம் செய்து அந்த கிரந்தத்தை

வேதவியாஸ மகாரிஷியினலே ஒப்புக்கொள்ளும்படி வாதத்தினல் ஸ்தாபனம்செய்தது முதலான சித்திகள்யெல்லாம் காசிக்ஷேத்திரத்தில் தானே கிடைத்ததென்றும் அவடத்திலிருந்து பிரயாகை முதலான யெக்ஞதேசத்துக்குப்போய் மாகிஷபதி பட்டணத்திலிருந்த பிர்ம்மாவதார மண்டனமிசிரரையும் தூர்வாஸ மகாரிஷி சாபத்துனலே அவதரித்த சரஸ்வதி அம்மனேயும் வாதத்தினல் ஜெயிச்சி உடனே ஷை சாபநிவர்த்தியாய் நிஜரூபத்துடன் ஸரஸ்வதி பிரத்தியக்ஷமானதில் தம்மால் ஸ்தாபிக்கப்பட்ட மடம் பிரசித்தமாயிருக்க வேணுமென்று கேட்டுக்கொண்டபடி ஷை சரஸ்வதி அம்மன் வரங்கொடுத்ததாகவும் ஷை அம்மனே அழைத்துக்கொண்டு துங்கபத்திருதீரமாயும் ரிஷ்ய ஸ்ருங்காசிரமமாயும் மகா க்ஷேத்திரமாயும் இருக்கிற சிரிங்கேரியில் ஷை சரஸ்வதி அம்மனுடைய அபிஷ்டப்பிரதாரம் ஸ்ரீசக்கிர எந்திர ரூபமாயும் விக்கிரக ரூபமாயும் ஸரஸ்வதி பீடம் ஸ்தாபித்து கோவிலும் மடமும் நிர்மானம் பண்ணிவைத்ததாகவும் ஷை மண்டனமிசிரருக்கு சந்நியாசமும்கொடுத்து அவருக்கு சுரேசுவராசாரியா என்கிற பெயர்வைத்து ஸரஸ்வதி பீடாதிபதியாக நேமித்து ஷை இலிங்கத்தில் போகலிங்கமென்கிற சந்திரமௌளீசுவர சுவாமியை கொடுத்து அதையும் பூஜைபண்ணிக்கொண்டு தம்மைப்போலவே சகல லோகத்துக்கும் குருவாயிருந்துக்கொண்டு ஸமஸ்தபிருதுகளுடனே சிஷியரக்ஷணம் தர்ம்மபரிபாலனம் லோகசஞ்சாரம் முதலானதுகள் செய்துவரும்படி ஆக்ஞாபித்துப்போட்டு மைத்த மூன்று சிஷியாளுடன் திராவிடதேசங்களுக்கு வரும்போது ஜெம்புகேசுவரம் அகிலாண்டேசுவரி அம்மனுக்கு விவாத ஸ்ரீசக்கிர தாடங்கம் செய்துவைத்தும் சிதம்பரத்துக்கு போய் மோக்ஷலிங்கத்தைக் கொடுத்துப்போட்டு காஞ்சிபுரத்தில் ஸ்ரீசக்கிர பிரதிஷ்டை செய்து பின்பு துவாரகை ஜகன்னாதம் பதரிகாசிரமம் முதலான இடங்களில் மடம் ஸ்தாபித்து காஸ்மீரதேசத்தில் சர்வக்ஞபீடாரோகணமும் ஷண்மதஸ்தாபனமும் செய்து பதரிகேதாரத்துக்குப் போய் அவடத்தில் இருந்து, தானே ஸ்வசரீரத்துடனே தானே ஆதி சங்கரபகவத்பாதர் கைலாசத்துக்கு போனதாக சிவரகசியம்

பவிஷியோத்தரபுராணம் சங்கரவிஜயம் முதலான கிரந்தங்களில் சொல்லி இருக்கிறது. ஷை கிரந்தங்களினாலேயே முதல்பிரதிவாதி ஆன்சரில் 2000 வருஷத்துக்குப் பின் ஜகத்குரு ஸ்வாமியளவாள் அவதாரஞ்செய்தாரென்றும் காஞ்சீபுரத்தில் காமகோடிபீடம் ஸ்தாபித்து சுரேசுவராசாரியரை நேமித்ததுபோலும் அவ்விடத்தில்தானே ஆதி சங்கரபகவத்பாதர் சித்தி அடைந்ததுபோல் சொல்வது, ஆதாரமற்ற பொய்யென்று விசிதமாகும்.

2-வது. ஆதி சங்கரபகவத்பாதர் தக்ஷணதேசத்தில் ஸ்ரீங்கேரியில் ஸரசுவதிபீடம் ஸ்தாபித்து, பிர்ம்மாவதாரமாயும் தம்மைப்போலவே எஜுர்வேதியாயும் வார்தீகம்முதலான கிரந்தங்கள் செய்தவருமான சுரேசுவராசாரியரை ஷை பீடத்தில் சகல ஜகத்குருவாக நேமித்ததையும், அவர் நடக்கவேண்டிய சம்பிரதாயம், க்ஷேத்திரம், தேவதைதீர்த்தம், வேதநாமதேயம் இதுகளைக்கண்டு பின்னும் மைத்த ஷை 3 மடத்தில் ஸ்ரீங்கேரிமடம் மேன்மையானது என்றும் மேற்கு தேசத்தில் துவாரகையில் சாரதாபீடத்தில் பத்மபாதர் என்கிற சிஷியரை நேமித்து அவர் நடக்கவேண்டிய சம்பிரதாயம் முதலானதுகளையும் கிழக்கு தேசத்தில் ஜகன்னாதத்தில் கோவர்த்தனபீடமென்றும் அதில் ஹஸ்தாமலகரென்கிற சிஷியரை நேமித்து அவர் நடக்கவேண்டிய சம்பிரதாயம் முதலானதற்கு உத்தர தேசத்தில் பதரீகேதாரத்தில் ஜ்யோதிஷபீடம் ஸ்தாபித்து அதில் தோடகாசாரியார் என்கிற சிஷியரை நேமித்து அவர் நடக்கவேண்டிய சம்பிரதாயங்களையுங்கண்டு மடாமீனாய கிரந்தத்தில் சொல்லியிருக்கிறது. முதல் பிரதிவாதி ஆன்சரில் சொல்லுகிறபடி காஞ்சீபுரத்தில் மடம் உண்டாயிருந்தால் ஷை மடாமீநியாய கிரந்தத்தில் சொல்லியிருக்கவேணும். அப்படிக்கில்லை. நீர் எழுதிய கிரந்தபாகங்களினாலே ஆதிசங்கர பகவத்பாதருடைய சிஷிய பரம்பரையில் முதல் பிரதிவாதி சேர்ந்தவரல்லவென்று வியக்த்தமாய் தெரியவருகிறபடியினாலே விவாததாடங்கத்தை ஜீர்ணோத்தாரணம் செய்ய முதல் பிரதிவாதிக்கு எவ்வளவும் பாத்தியமில்லையென்று விசிதமாகும்.

3-வது. இந்த சுபாவில் காவேரிக்கு வடபுறம் ஜெம்புகேசுவரம்முதலான பிரதேசங்களில் இராஜரீகம் செய்துவந்த ஸ்ரீமது நஞ்சராஜய்யரவர்களால் ஷை தாடங்க ஜீர்ணோத்தாரணம் செய்ய ஸ்ரீங்கேரி ஸரஸ்வதி பீடாதிபதிகளாய் அப்போதிருந்த ஸ்ரீ சுவாமியளவாள் உத்திரவுப்படி ஷை மடத்திலிருந்து அகோபல சோமயாஜியை அனுப்பிவைத்து அவன் வருகிறதையும் ஷை மனுஷியனை கொண்டு ஷை தாடங்கம் துரஸ்து செய்குறதென்று கண்டு ஷை ஜம்புகேசுவரம் ஸ்தலத்தில் காரியஸ்தனாயிருந்த சிக்க அய்யனுக்கு 148-ம் வருஷத்துக்கு முன் வந்த தாது வருஷ மார்க்கசீரஷ சுத்த தெசமியில் ஷை ராஜநீகத்தாரவளால் உத்திரவு அனுப்பப்பட்டிருக்குறது இதுதவிர பிராதில்கண்டபடி ஸ்ரீங்கேரி ஸரசுவதிபீடத்தில் முன்னிருந்த அபினவஸச்சிதானந்த பாரதிசுவாமியளவாள் ஸன்னிதானத்துக்கு விவாததாடங்கம் ரொம்பவும் மலினமாயிருக்கிறதென்றும் அதை ஜீர்ணோத்தாரணம் செய்யவேணுமென்பதைப்பற்றியும் ஜம்புகேசுரம் ஸ்தளத்திலிருந்த அரச்சகாள் முதலான ஸமஸ்தபரிஜனங்களும் பிரமாதி வருஷம் சித்திரை மீ 16உயில் விக்ஞாபனபத்திரிகை யெழுதிக்கொண்டிருக்குறார்கள் ஷை சுவாமியளவாள் ஷை தாடங்கம் ஜீர்ணோத்தாரணம் செய்யவும் ராமேசுரயாத்திரை நிமித்தியார்த்தமும் வாதிபிராதில் கண்டபடி 80 வருஷத்துக்கு முன் இந்த பிரதேசத்துக்கு வந்து ஷை தாடங்கம் துரஸ்து செய்யவேண்டியதைப் பற்றி இவடம் ராஜரீகம் செய்து வந்த நவாபு வாலாஜா சாகேப் அவர்களுக்கு ஷை சுவாமியளவாள் ஸ்ரீமுகம் யெழுதிக் கொண்டதின்பேரில் அந்தப்படியே ஷை தாடங்கத்தை துரஸ்து செய்யும்படியாயும் அது சங்கதிக்கி சர்க்காரில் நடக்கவேண்டிய சகாயத்துக்கும் தேவஸ்தானங்களில் நடக்கவேண்டிய மரியாதைகளுக்கும் ஷை தேவஸ்தானங்களின் அதிகாரிகளுக்கு உத்திரவு அனுப்பியிருக்கிறதையும் கண்டு ஷை ஸ்ரீசுவாமியளவாளுக்கு ஷை நவாபு வாலாஜா சாஹேப் அவர்கள் ஸயன் முகருடன் யினாயித்துனமாவும் அனுப்பியிருக்குறார் அந்தப்படியே ஷை தாடங்கம் ஜீர்ணோத்தாரணம் செய்ததற்கு மடத்தில் கணக்குமிருக்கிறது

முதல்பிரதிவாதி ஆன்சர் முதல் கலத்தில் சொல்லுகிறபடி அக்ஷய ஈசுவர இந்த இரண்டுவருஷத்திலும் விவாததாடங்கத்தை துறஸ்து செய்ததுபோல் சொல்வது நிஜமானல் அப்படி துறஸ்து செய்த வர்களுடைய பெயரை முக்கியமாய் ஆன்சரில் கண்டிருக்கவேணும் அல்லது மேல் கண்டிருக்கிற தெஸ்தாவேஜிகள் ஒப்பந்தம் முதல் பிரதிவாதிக்கி தெஸ்தாவேஜி யிருக்கலாம் அப்படிக்கிருப்பதாய் ஆன்சரில் சொல்லவுமில்லே இதின் முதலாவது கலத்தில் கண் டிருக்கிற கிரந்தங்களினுலும் இதனடியில் காணுகுற முகாந்திரங் களினுலும் முதல் பிரதிவாதிக்கி ஒரு பீடமும் அதுகளின் பரம்பரையாய் ஸன்னியாசிகளும் இருந்தது யில்லேயென்று தெரிய வரச்சே தமக்கு முன்னிருந்த சன்னியாசிகளால் ரெண்டு தடவை யில் விவாத தாடங்கத்தை ஜீர்ணோத்தாரணம் செய்ததுபோல் நிரூதிரவாய் ஆன்சரில் சொல்லுகிறது மாறுபாடென்றும் கும்ப கோணம் மடத்திலிருந்து இந்தப் பிரதேசங்களில் ஒருவரும் வந்ததில்லே யென்றும் ஷை தாடங்கத்தை ஜீர்ணோத்தாரணம் செய்ய ஸ்ரீங்கேரி சுவாமியளவாளே பாத்தியஸதாளென்றும் விசித மாகும்.

4-வது. இதன் முதலாவது கலத்தில் காட்டிய லோகபிரசித் தமாயும் வேதசாஸ்திர பிராணோத்தமாயும் ஸ்ரீங்கேரி ஸ்ரீ சரசுவதி பீடாதிபதிவர்களே லோக குருவென்றும் ஸ்ரீமந்தர ராஜராஜகுரு பூமண்டலசாரியாரென்றும் கர்ணுடக ஸிம்மாஸன பிறதிஷ்டாபனு சாரியாரென்றும் பிருதுள்ளவராய் மைத்த மடங்களுக்கும் ஆதி பீடாதிபதியாயிருக்குற ஸ்ரீங்கேரி சுவாமியளவாள்தானே விவாத தாடங்கத்தை ஜீர்ணோர்த்தாரணம் செய்ய பாத்தியஸ்தாளாயும் அவ ருக்கே ஸ்ரீசக்கிரபிரதிஷ்டாபனு சாரியாரென்குற பிருதுள்ளவருயு மிருக்கச்சே ஷை குரு பரம்பறையில் சேராதவராயும் சுவல்ப்ப காலமாயி ஒரு மடாதிபதி யென்கிற பேரிட்டுக் கொண்டிருக்கிற முதல் பிரதிவாதிக்கி ஆன்சரில்கண்ட பிருதாவளியும் ஸ்ரீசக்கரபிர திஷ்டாபனு சாரியாரென்குற பேரும் கிடையாது ஷை தாடங்கத்தை ஜீர்ணோத்தாரணம் செய்ய அவருக்கு யெவ்வளவும் பாத்தியமில்லே

அதைக்குறித்து ஆன்சரில் ரெண்டாங் கலத்தில் சொல்லுவது உபயோகமைத்தது.

5-வது. இந்த சுபாமுதலான இடங்களில் கர்னூடக துறைத்தனத்தாருல் இனும் கிராமம் பூமிகளும் ரொக்கவருமானங்களும் அக்கிரசம்பாவனையும் முதல் பிரதிவாதிக்கி நடக்குறதுபோல் ஆன்சரில் 3-வது கலத்தில் சொல்லப்பட்டிருக்குறது அப்படிக்கில்லே யாணியம்போல் சொல்வது நிஜமானுல் இன்ன கிராமத்தை இன்ன பேருள்ள சுவாமியளுக்கு குடுபட்டுதென்று ஆனசரில் யெழுதவும் அதற்குத்தகுந்ததே தஸ்தாவேஜிகள் யிருக்கவும் வேணும் ரொக்க வருமானமென்பது இன்ன இடத்தில் யிவ்வளவு ரூ வருகுறதென்று ஆன்சரில் சொல்லவுமில்லே இன்னும் இந்த சுபாவிலும் மைத்ததேசங்களிலும் பரம்ம க்ஷதிரிய வைசிய ஜாதிகள் செய்யப்பட்ட கல்லியாணங்களில அக்கிறசம்பாவனே முதலான மரியாதைகள் ஸ்ரீங்கேரி சுவாமியவர்கள் மடத்துக்கே நடப்பி வைத்துக்கொண்டு வருகுருர்கள் ஷை சம்பாவனேயைக் குறித்தும் தீபாருதனே காணிக்கையைப் பத்தியும் ஷை மடத்துக்கு தெஸ்தாவேஜிகள் யெழுதிக்கொடுக்கப்பட்டிருப்பதை பார்வையிடும்போது அதைக் குறித்து ஆன்சரில் சொல்லுவது வீணுனதென்று விசிதமாகும் பின்னும் ஷை சம்பாவனேகள் ஸ்ரீ சங்கராசாரிசுவாமியவர்கள் மடத்துக்கு யென்பது பிரசித்தமா யிருக்கிற ஸ்ரீ ஆதிகுரு சங்கரபகவத்பாதாசாரியரவர்களுடைய பரம்பறையில் சேருமலும் சங்கராசாரியாரென்குற பேரில்லாத முதல் பிரதிவாதிக்கி ஷை சம்பாவனேக் கிடைக்க நிமித்தியமில்லே.

6-வது. ஸ்ரீங்கேரிமடத்துக்கு அநேக ராஜாக்கள் மான்னியம் கொடுத்திருக்குருர்கள் அப்படிபோலவே இந்த சுபாவில் கர்னூடக துரைத்தனத்தாருல் அரியமங்கலம் மாகந்திரமங்கலம் இந்த கிராமங்கள் விடப்பட்டும் நிலங்களுக்கு ஸ்ரீசங்கராசாரியசுவாமிகள் மான்னியமென்றும் பேரும் அதற்கு சர்க்கார்கணக்கு முதலான ஆதிரவுகள் யிருக்குறது ஷை ஜம்புகேசுவரம் ஆலயத்துக்குள் ஷை யூர் ஸ்தலப்புராணத்தில் கண்டிருக்கிறபடி 18 மடம் அதில்

ஆகோர சிவாசார்ியாரென்குற ஒருயோகீசுரர்மடமான ஆன்சரில் கண்ட மடத்தை ஷெ ஸ்தலத்தாருல் ஸ்ரீங்கேரிமடத்துக்கு இதற்கு 148-வருஷத்துக்கு முன் இனாமாகொடுப்பட்டு சிலமடத்தார் அவர்கள் சிலவுசெய்து ஷெ மடத்தை பழுதுபார்த்தும் அதில் சில சொந்தமனுஷியாளைக் குடிவைத்திருந்ததும் தவிர மகாதேவ பட்டன் குப்பாபட்டன்யென்பவனும் ஸ்ரீமடத்தார் உத்திரவுபடி மடத்தில் குடியிருந்துக்கொண்டு ஷெ மான்னிய வருமானங்கள் அனுபவித்துவந்து அவர்கள் யெறந்துபோன பிறகு பொட்டி ஸோமயாஜி என்பவன் அனுபவித்து வந்ததற்கு தகுந்தபடி வாதிருஜுப்படுத்த சித்தமாயிருக்குறார் முதல் பிரதிவாதி ஆன்சரில் கண்டபடி ஜெகத்குரு சங்கரபகவத் பாதாசாரிய சுவாமியவர்களால் ஜம்புகேசுவரத்தில் மடம் கட்டினதுபோல் சொல்வது நிஜமாயிருந்தாலதுவிவரம் ஷெ ஸ்தலபுராணம் சங்கரவிஜயம் முதலான கிரந்தங்களில் சொல்லியிருக்கலாம் மான்னியம் தனக்காக கிடைத்திருப்பது போலவும் அதுகளை தான் நெடுநாளாய் அனுபவித்து வருவதுபோலவும் சொல்வதுக்கு தகுந்த தஸ்தாவேஜிகள் இருக்கவும் அதுகளை ஆன்சரில் கண்டெழுதவும் வேணும் அப்படிக்குமில்லை இதுனாலேயே மடமும் மான்னியமும் தமக்கு சொந்தம்போலும் நெடுநாளாய் தம்முடைய ஸ்சுவாதீனத்திலிருப்பதுபோலவும் முதல் பிரதிவாதி சொல்வது ஆதாரமத்த பொய்யாயிருக்கச்சே அதை முதல் பிரதிவாதிக்கு ஒரு அனுபோகம் போலும் 2-ம் பிரதிவாதி ஆன்சரில் சொல்வது பிறட்டென்று விசதமாகும்.

7-வது. ஜம்புகேசுவரம் தேவஸ்தானம் வரும்படியிலிருந்து ஷெ மடத்தில் யேதோ அரிது எண்ணை தோசை இதுகள் வருகுறது போலும் அதே தமக்கு அனுபோகமென்று அதினால் ஸ்ரீசக்கரதாடங்கம் ஜீர்ணோத்தாரண பாத்தியஸ்தர்போல் முதல் பிரதிவாதி ஆன்சரில் சொல்லப்பட்டிருக்குறது ஷெ தேவஸ்தான ஆலயத்துக்குள் இருக்குற சுற்றுக்கோவிலுகளாகிய பிள்ளையார், ஐய்யனார், பிடாரி முதலான தேவதைகளுக்கு ஷெ கோவில் வரும்படியிலிருந்து நடந்துவருகுற வழக்கம் அப்படியே வடக்கு மடத்து

பிள்ளையாருகிய ஷை மடத்திலிருக்குற பிள்ளையாருக்கும் தினம் 1-க்கு அரைபடி அரிசியும் ஒரு தோசையும் வீசம்படி எண்ணெயும் ஷை பிள்ளையாரை பூஜைபண்ணுகுற பேயரே வாங்கிவருகுறார்களே தவிர ஷை மடத்துகாக ஷை வருமானம் நடந்துவரவுமில்லை அந்த முதல் பிரதிவாதி மனுஷியாள் வாங்கிவந்ததுமில்லை அப்படி வாங்கி வந்த மனுஷியன் பெயரை ஆன்சரில் காணவுமில்லை ஷை கோவில் தர்மகர்த்தாவான 2-ம் பிரதிவாதியும் ஸ்தலத்தாருன மைத்த பிரதிவாதிகளும் ஒன்று சேர்ந்திருப்பதால் ஷை வருமானம் நமக்கு நடந்ததுபோல் செய்விக்கலாமென்குற யெண்ணங்கொண்டு ஷை வருமானம் நமக்கு நடந்ததுபோல் முதல் பிரதிவாதியும் அதற்குத் தனுசாரமாய் மைத்தப் பிரதிவாதிகளும் ஆன்சரில் சொல்வது பொய்யென்றும் அதினுல் விவாத தாடங்கத்தை ஜீர்ணோத்தாரணம் செய்ய முதல் பிரதிவாதிக்கி யெவ்வளவும் சம்மந்தமில்லை யென்று விசிதமாகும்.

8-வது. காஞ்சிபுரத்தில் காமாக்ஷியம்மன் சந்நிதில் ஸருவஞ பீடமென்குற காமகோடி பீடமும் முக்கியமான மடமும் ஆதி சங்கரபகவத் பாதாசாரியருல் நிர்மாணமாயிருப்பதாக முதல் பிரதிவாதி ஆன்சரில் சொல்லப்படுகுறது அப்படிக்கி நிர்மாணம் செய்திருப்பதுபோல் சொல்வது முதலாவது கலத்தில் கண்ட சாஸ்திரத்தில் சொல்லவுமில்லை அவ்விடத்தில் மடம் கிடையாது ஸருவஞ பீடமென்குற பேர் காசி பிரதேசத்திலேயே தவிர காஞ்சிபுரத்தில் இல்லை ஸ்ரீ காமாக்ஷியம்மனுக்கு புராணோத்தமாயும் மூக பஞ்சாசதி யென்குற கிரந்தப்படிக்கும் காமகோடி யென்று பேரும் அந்த அம்மன் இருக்கிற யிடத்துக்கு காமகோடி பீடமென்றும் அனுதியாய் பேர் இருக்குறதே தவிர ஆதி சங்கரபவத்பாத் சுவாமியளவாளால் ஷை பெயர் குடுக்கபட்டதுமில்லை ஷை அம்மனுக்கு ஆதியில் தாந்திரீக பூஜையாயிருந்ததை வைதீகபூசை பண்ணும்படி பிராம்மணுளை நேமித்து ஷை ஸ்தலத்துக்கு ஒரு மகிமை உண்டாக்கும் படியாய் கண்டகசிலையில் யெந்திரம் ஸ்தாபித்து அதை நாளது வரையில் ஷை அம்மனை பூசை பண்ணுகுறவர்களால்

பூஜிக்கப்படுகுறதேதவிர முதல் பிரதிவாதியால் பூசை பண்ணப் படவுமில்லே அவருல் உத்தாரம் செய்யக்கூடாது அப்படிக் கல் லில் ஸ்தாபிக்கப்பட்ட யெந்திரத்துக்கு யாதொரு ஜீர்ணமுமில்லே அப்படிக்கிருக்க ஸர்வஞை பீடமென்குற ஒரு பீடம் காஞ்சிபுரத் தில் இருப்பது போலவும் அதைதாம் ஜீர்ணோத்தாரணம் செய்தது போலவும் முதல் பிரதிவாதி ஆன்சரில் சொல்வது ஆச்சரியமா யிருக்குறதே தவிர அது லெவ்வளவும் நிஜமல்ல.

9-வது. காஞ்சிபுரம் ஸ்ரீ காமாட்சியம்மன் தேவஸ்தானத்தில் 1839ம்-ஹு த்தில் சம்பிரோக்ஷணை நடந்திருக்குறது அதற்கு முன் னும் இந்த வியாஜியம் ஆரம்பத்துக்கு பின்னும் காஞ்சிபுரம் சென் னபட்டணம் முதலான இடஙகளுக்கு போயிருந்த முதல் பிரதி வாதி தாம் காமக்கோடி பீடாதிபதிபோல் சொல்வதற்கு ஒரு ஆதாரம் உண்டுபண்ணிக்கொள்ள வேண்டியநிமித்தம் ஷை தேவஸ் தானத்திலிருக்குறவாளேயும் அவடத்திலுள்ள மைத்த உத்தியோ கஸ்தர்களேயும் கைவசப்படுத்திக்கொண்டு தான் சங்கராசாரியா ரென்றும் ஸ்ரீ சக்கர ஜீர்ணோத்தாரணம் செய்யவேண்டியது போல வும் ஷை கோவிலுக்கு தர்மகர்த்தா அதிகாரம் தம்முடைய பேரால் நடக்கவேண்டியதுபோலவும் கலெக்டர் முதலானவர்களு க்கு எவ்வித மார்பாடுகளாய் முதல் பிரதிவாதி தெரிவித்து அதைப் பற்றி யெவ்வித யேற்பாடுகள் செய்துக்கொண்டது போல் சொன்ன போதிலும் அதை இந்த வியாஜியத்தில் இணையிட்டுச்சொல்வது சரியல்ல வென்றும் ஷை கோவிலில் நடந்த ஸம்பிரோக்ஷணை தரி சனத்திற்காக அனேக ஜனங்கள் போயிருந்ததுபோலவே இந்த முதல் பிரதிவாதிகளும் போயிருந்தார்களே தவிர அவருல் ஷை கோவிலில் யாதொன்றும் நடக்கப்படவில்லே யென்று விசிதமாகும்.

10-வது. ஜம்புகேசுவரம் ஸ்தலத்தார் அர்ச்சகாள் மன் மதஹு தைமீ 15உயில் விக்ஞாபனம் யெழுதிக்கொண்டிருப்பது போலவும் அதைப்பற்றி தன் மனுஷன் பேருக்கு கடுதாசியெழுதி ருப்பது போலவும் அண்ணுத்துறை பண்டிதன் தாடங்க சங்கதி யைக்குறித்து ஆசூரில் அர்ஜி கொடுத்திருப்பதுபோலவும் முதல்

பிரதிவாதி ஆன்சரில் 5-வது கலத்தில் சொல்லிருக்குறது அதுகள் நிஜமாயிருந்தால் மன்மத௵த்திலாவது அல்லது பிரகாவது ஷை பிரதிவாதி ஷை தாடங்க ஜீர்ணோத்தாரணம் செய்திருக்கலாம் அல்லது விளம்பி௵த்தில் இந்தசுபாவுக்கு வந்திருந்த முதல்பிரதிவாதி அப்போவாவது செய்திருக்கவேணும் அப்படிக்கி யாதொன்றும் செய்யப்படாமலும் 158௵த்துக்கு முன்னும் 85௵த்துக்கு பின்னும் தனக்கு முன் பரம்பரையைச்சேர்ந்த சன்னியாசிகளால் ஷை தாடங்கம் ஜீர்ணோத்தாரணம் செய்ததுபோல் சொல்வதற்கு யாதொரு விக்ஞாபனபத்திரிகை முதலான தெஸ்தாவேஜிகள் இருப்பதாக ஆன்சரில் சொல்லப்படாமல் இப்போ மன்மத௵த்தில் விக்ஞாபனபத்திரிகை இருப்பதுபோல் சொல்வதைமாத்திரம் கோரட்டார் யோசித்தால் ஷை கோவில் ஸ்தலத்தாரான மைத்த பிரதிவாதிகளுடைய குமுக்கின்பேரில் விக்ஞாபன பத்திரிகைபோலவும் அதில் ஒருவனை அண்ணாத்துரைப் பண்டிதனைக்கொண்டு வாக்குமூலம் கொடுக்கும்படி செய்வித்திருக்கலாமென்றும் அதுகள் நம்புதலத்ததென்றும் விசிதமாகும்.

11-வது. மேல்கண்டபடி சிஷியார்ஜினை முதலான வருமானங்களைக் குறித்து இந்த சுபாவிலும் அனேக கிராமத்தார்கள் ஸ்ரீங்கேரி மடத்துக்கு தெஸ்தாவேஜிகள் யெழுதிக் கொடுத்திருப்பதையும் விவாத தாடங்கம் ஜீர்ணோர்த்தாரணம்செய்ய ஷை சுவாமியளவாளே பாத்தியஸ்தாளென்றும் முதல் பிரதிவாதிக்கி யாதொரு சம்மந்தமில்லையென்றும் கண்டு ஷை ஜம்புகேசுவரம் ஸ்தலத்தார்களனைவரும் 1836௵ மேஸ்ரீ 20௳யில் இந்த சுபா கலெக்டர்துரையவர்களுக்கு அர்ஜி யெழுதிக் கொடுத்திருப்பதையும் முதல்பிரதிவாதி ஆன்சர் 6-வது கலத்தில் ஒப்புக்கொண்டு ஷை ஸ்தலத்தார் அர்ச்சகாள் முதலானவர்களுடைய விக்ஞாபனபத்திரிகை இல்லையென்றும் மாமூல்வழக்கத்துக்கு விரோதமாயும் சிஷியார்ஜினையில் பிறவேசித்ததை தடங்கல்செய்து அஸிஸ்டாண்டு மேஜஸ்திரேட்டு துரையவர்கள் விளம்பரப்படுத்திருப்பது போலவும் சொல்வது சரியல்ல. இதின் 3-வது கலத்தில் கண்டபடி அபிநவசச்சிதாநந்த

பாரதிசுவாமிகளவர்களுக்கு ஷை நாடங்க ஜீர்ணோத்தாரண சங்கதியைக்குறித்து ஷை ஸ்தலத்தாருடைய விக்ஞாபன பத்திரிகையும் நவாபு சாஹேப் அவர்களுடைய யினாயித்து நாமாவும் இருக்கிறது சிஷியார்ஜினைகள் அவரவர்கள் மனமொப்பி குடுக்கிறதை வாங்கிக் கொள்ள வேணுமென்றும் அவர்களை நிர்ப்பந்தப்படுத்தி வாங்கக் கூடாதென்றும் விளம்பரம் இருக்கிறதே தவிர ஆன்சரில் கண்டபடி இல்லை.

12-வது. ஸ்ரீங்கேரி ஸரசுவதிபீடத்தில் அபினவோத்தண்ட வித்தியாரண்ணியபாரதி என்கிற பெயருள்ள சுவாமிகள் இருந்ததுமில்லை அவர் பிங்கள வருஷத்தில் ராமேசுவர யாத்திரைக்கி வந்ததுமில்லை யாரோ ஒருவர் வித்தியாரண்ணியபாரதி என்று சன்னியாசி வந்ததுபோலவும் அந்த சன்னியாசிக்கி இந்த பிரதேசங்களில் தனக்கு எவ்வித சுதந்தரமும் இல்லையென்றும் ஒடம்படிக்கை யெழுதிக் கொடுத்ததுபோல் ஆன்சர் 7-வது கலத்தில் சொல்வது மார்பாடே தவிர ஸ்ரீங்கேரி சுவாமியவாளுடைய பாத்தியதை ஷை ஆதரவு போல் சொல்வதினால் யாதொரு கொறைச்சலும் இல்லை.

13-வது. ஸ்ரீங்கேரி சுவாமியவாளுடைய காரியக்காரர் அனந்தாவதானி யென்பவன் ஹேவிளம்பி வருஷ புஷியபகுள திருத்தியை தினத்தில் மடம் பத்தியஸ்தனாகிய ராமசந்திர தீக்ஷிதனுக்கு ஸ்ரீ சுவாமியவாளுக்கு தெரியப்படுத்தி அந்த பிரதேசங்களில் அக்கிர தாம்பூலம் முதலான சுவந்தரமில்லை யென்றும் பத்திரிகை யெழுதி கொடுத்ததுபோல ஆன்சர் 8-வது கலத்தில் சொல்லியிருக்கிறது அது நிஜமாயிருந்தால் ஷை மடத்து முத்திரையுடன் தெஸ்தாவேஜு வாங்கியிருக்கலாம் அப்படிக்கி தெஸ்தாவேஜி யெழுதிக் கொடுக்கவேண்டியதாய் ஸ்ரீமடத்தாருக்கு யாதொரு அகத்தியமும் நிர்பந்தமுமில்லை ஷை அனந்தாவதானி யென்பவன் ஸ்ரீ சுவாமியளவாள் மடத்துக்கு முக்கியகாரியஸ்தனுமல்ல ஷை மடத்தில் சுவல்ப ஜீவனத்திலிருந்த அனந்தாவதானிபேரில் தப்பிதம்நேரிட்டு அவனை தள்ளும்படி செய்து இருக்கிறார்கள் அந்த அனந்தாவதானியோ அல்லது ஷை பெயரை ஒடைத்தான மத்த யாரையோ உள்கைப்

படுத்திக்கொண்டு இவ்வித வக்கணையைக்கண்டு ஆதிரவு வாங்கினது போல் சொல்வது இந்தவியாச்சியத்துக்கு யெவ்வளவும் ஒத்தாகாது ஷை ஸ்ரீமடத்தில் ஸ்ரீ சுவாமியளவாள் உத்திரவுபடி யிருக்கப்பட்ட தெஸ்தாவேஜுகள் யாவற்றுக்கும் ஷைமடம் முத்திரையுடன் பிறக்குற வழக்கம் ஷை அனந்தாவதானி ஸ்ரீசுவாமியவர்களுக்கு தெரியப் படுத்தி ஷை தெஸ்தாவேஜி யெழுதிக்கொடுத்ததுபோல் சொல்வது நிஜமானல் மடம் முத்திறை சகிதம் வாங்கியிருக்கலாம் இதை யோசிக்கவேணும் பின்னும் தாமே ஜகத்குரு சங்கராசாரியார்போலவும் ஸம்பாவனை நடந்துவந்ததாகவும் முதல்பிரதிவாதி சொல்வது நிஜமாயிருந்தால் அவர்களுக்கு சுவயசித்தமாய் நடக்கப்பட்ட சம்பாவனையை குரித்தும் அவர் சொல்குற பீடாதிபத்தியத்தையும் கண்டு ஷை காரியக்காரனிடத்தில் ஆதிரவு வாங்கவேண்டிய நிமித்தியமில்லேயே அப்படிக்கி வாங்கினதுபோல் சொல்வதை யோசித்தால் ஷை தெஸ்தாவேஜி பிறந்ததுபோல் சொல்லுகிற முதல் பிரதிவாதிக்கி சம்பாவனை நடக்கவில்லையென்றும் அந்த சம்பாவனையும் தமக்கு பீடம்போல் சொல்வதையும் ஸ்ரீசுவாமியளவாளுடைய மஹுஷியனை கொண்டாவது ஸ்தாபித்துகெள்ளலாம் யென்குற எண்ணம் கொண்டு தஸ்தாவேஜி வாங்கினதுபோல் சொல்லுகிறர்களே தவிர அது நிஜமல்லவென்று விசிதமாகும்.

14-வது. தஞ்சாவூர் சுபா கலெக்ட்டர் துரையவர்களால் முதல் பிரதிவாதி மடத்துவாசல் வழியாய் போகக்கூடாதென்று உத்திரவு பிரப்பிவித்திருப்பதுபோலும் பின்னும் கர்ணுடக துறைத்தனத்திலும் கும்பினி துறைத்தனத்திலும் ருதாரி பிறந்திருப்பது போலும் ஆன்சர் 9-வது 10-வது கலத்தில் சொல்லியிருக்குறது சாஸ்தறத்தைப்பத்தின இந்த வழக்கில் இதில் முதலாவது கலத்தில் கிரந்தபாகப்படி முதல் பிரதிவாதிக்கி மடாதி பத்தியமும் சங்கராசாரியார் யென்குற பேரும் ஸ்தாபிக்கப்படாமல் இருக்கச்சேசச்சரவு நடவாமல் இருக்கும்பொருட்டு பிறப்பிவித்த உத்தரவினுலும் மார்க்கங்களில் தடங்கல் செய்யாமல் இருக்கும்படியாய் அனேகம் பேர்களுக்கு சர்க்காரில் கொடுத்திருக்குற ருதாரிகள் ஒப்பந்

தம் இந்த முதல் பிரதிவாதிக்கி கொடுத்ததுபோல் செல்லுகுற ருதாரிகளினாலும் முதல் பிரதிவாதிக்கி ஒரு மடாதிபத்தயம் ஸ்தாபிக்கமாட்டாது அதை குரித்து ஆன்சரில் சொல்வது வீணனது.

15-வது. அடியில் குரித்தப்படி தஞ்சாவூர் மகாராஜா அவர்களால் மடாதிபதியாக பேர் கல்ப்பிவித்துக் கொண்டிருக்கிற முதல் பிறதிவாதிக்கி ஷை மகாராஜா அவர்களாலும் அவர்களைச்சேர்ந்த சில ஜமீன்தார்களாலும் விக்ஞாபன பத்திரிகை யெழுதிக்கொண்டிருப்பார்களே தவிற மைத்த யெந்த தேசாதிபதிகள் ஜமீன்தார்களும் விக்ஞாபன பத்திரிகைகளை யெழுதிருக்கமாட்டார்கள் அதினல் முதல் பிரதிவாதிக்கி ஒரு பாத்தியதையும் உண்டாகமாட்டாது. ஆசேது ஹிமாசல தேசங்களிலும் இருக்கப்பட்ட ஜனங்களிலும் றணசிங்கு சீமந்தபேசுவே அனந்தசயனம் மைசூர்முதலான தேசங்களின் ராஜாக்களினலும் அனேக ஜமீன்தார்களாலும் ஸமஸ்தான பிருதாவளிகளைக் கண்டு ஸ்ரீங்கேரி ஸ்ரீமடத்துக்கு விக்கியாபன பத்திரிகை யெழுதிக்கொள்ளப்பட்டும் வேத சாஸ்திர புருஷோத்தமாயும் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கிற சரஸ்வதீ பீடாதிபதியவர்களான ஸ்ரீ சுவாமியளவாளே மரியாதை கொறச்சலாய் பிரதிவாதிகள் ஆன்சரில் சொல்லுவதைப்பத்தி ஷை பிரதிவாதிகள் தண்டனைக்கி பாத்தியஸ்தர்களென்றும் பிரதிவாதிகள் யெதிர்வழக்கு மாறுபாடுயென்றும் விசிதமாகும்.

16-வது. முதல் பிரதிவாதி ஆன்சர் 12-ம் கலத்தில் சொல்லுகிற கெவர்மெண்டார் அவர்களுடைய அபிப்பிராயமானது ஸ்ரீங்கேரியில் மடம் இருப்பது யென்பதை ஒப்புக்கொண்டு இருப்பதாய் ஆன்சரினல் தெரியவருகிறது. அந்தமடத்துக்கு முதல்பிரதிவாதி குருவென்று ரிசிடெண்டு மூலமாய் அனுப்பிவித்த லெட்டர்களில் கண்டிருப்பதாகவும் அப்படி குருவாயிருந்தால் இந்துக்கள் தானே மரியாதை செய்வார்களென்றும் அபிப்பிராயப்பட்டதாக தெரியவருகிறது அந்த அபிப்பிராயமானது முதல்பிரதிவாதிக்கி யாதொரு பலனுமல்ல யார் யெவ்விதமாய் யெழுதிக்கொள்ளுகிறார்களோ அந்தப்படி யாதொரு விசாரணை யில்லாமல் ருதாரி குடுக்கிறதும்

அதைப்பத்தி உத்திரவு பிரப்பிவிக்கிறதும் வழக்கம் அதை பெரிசாய் ஆன்சரில் சொல்வது சரியல்ல.

17-வது. விவாத ஸ்ரீ சக்கிர தாடங்கம் ஜீர்ணோத்தாரணம் செய்ய பாத்தியம் இன்னூர்தென்று சீவில் கோர்ட்டில் பிறுது செய்து நியாயம் பெத்துக்கொண்டபின் ஜீர்ணோத்தாரணம் செய்ய வேணுமென்று இந்த சுபா கலேக்டர் துரையவர்களால் 2 தடவை விளம்பரப்படுத்தியும் வாதியும் ஷை முதல்பிரதிவாதி மனுஷியாளும் குடுத்த அர்ஜிகளிலும் அந்தப்படியே இண்டார்சு செய்யப்பட்டு யிருக்கிறது ஷை பாத்தியம் ஸ்ரீங்கேரி சுவாமிய ளவாளதென்று இந்த நெம்பர் பிறுதுசெய்து அரிக்கைபிரந்தும் ஷை தாடங்கத்தை யாதொருவரும் துரஸ்து செய்யக்கூடாதென்று இந்த கோர்ட்டில் இஸ்தியார் புரந்துயிருக்க பிரதிவாதிகளும் சில சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் ஒண்ணுகூடி மந்திர சாஸ்திரத்துக்கும் ரிக்கிலீஷனுக்கும் விரோதமாக ஒரு ராத்திரியில் தானே ஜீர்ணோத்தாரணம் செய்வதாக பேரிட்டு தட்டானைக்கொண்டு தகடு அடிச்சி போட்டிருப்பது மேற்படி பிரதிவாதிகள்பேரில் தப்பிதமென்றும் அதைக்குறித்து மேற்படி பிரதிவாதிகளை விசாரணைகாலத்தில் சட்டப்படி நடப்பிவிக்கிறதாகவும் டைரி உத்திரவு பிறந்தும் இருக்கிறது சாஸ்திரப்படிக்கி மேற்படி தாடங்கம் துரஸ்து செய்யப்படாத்துனாலே அது பூஜைக்கி யோக்கியமில்லாம லிருக்கிறது மார்பாடாய் செய்திருக்கிறதை தானே ஒருபலனை ஆன்சரில் சொல்வது உபயோகமில்லை மேல்கண்டபடி திருட்டுத்தனமாய் செய்துயிருக்கிறதை யோசித்தால் மேற்படி தாடங்கத்தை துரஸ்துசெய்ய முதல் பிரதிவாதிக்கி யெவ்வளவும் பாத்தியமில்லையென்றும் அதைப்பத்தி இந்தவியாச்சியம் நடந்தபின் யெவ்வித தெஸ்தாவேஜ்களுண்டுபண்ணிக் கொண்டிருந்தபோதிலும் அது செல்லாதென்று விசிதமாகும்.

18-வது. மாமூல் வழக்கத்துக்கு விரோதமன்னியில் தேவஸ்தானங்களில் அதிகாரம் செலுத்திவரும்படியாயும் அதற்கு விரோதமாயிருந்தால் சீவில்கோர்ட்டுக்கு பாத்தியப்படதக்கதென்றும் தர்மகர்த்தாவான 2-ம் பிரதிவாதிக்கி சர்க்காரில் உக்கும்னுமா குடுத்து

யிருக்கிறார்கள் முதல் பிரதிவாதியாவது அவருக்குமுன் பரம்பரை போல் சொல்லுகிறவர்களாவது விவாத தாடங்கத்தை துரஸ்து செய்ததாய் சொல்லுவதை நம்பி அவர்களிடத்தில் யாதொரு தஸ்தாவேஜுகள் இல்லாமலும் மேற்படி துரஸ்து செய்யவேண்டிய பாத்தியதையைக்குறித்து சிவலுக்குபோகும்படியாய் சர்க்காரில் உத்திரவுகளும் விளம்பரங்களும் பிரந்துயிருக்கிறது 2-ம் பிரதிவாதியும் அறிந்திருக்கிறார். 23 வருஷகாலமாய் மலினமாயிருக்கிற விவாத தாடங்கத்தை துரஸ்துசெய்ய முதல் பிரதிவாதிக்கி பாத்தியமிருந்தால் 5 காதவழி தூரமான கும்பகோணத்திலிருக்கிற முதல் பிரதிவாதி இதுவரையில் செய்திருக்கலாம். மேற்படி தாடங்கத்தை துரஸ்து செய்யவேண்டியதற்காகவே விளம்பி வருஷத்துக்குப் பின் 2 தடவை இந்த முதல் பிரதிவாதி ஜெம்புகேசுவரத்துக்கு வந்தும் மேற்படி ஸ்தலத்தார் முதல் பிரதிவாதிக்கி மேற்படி தாடங்கத்தை துரஸ்துசெய்ய பாத்தியமில்லையென்று சொல்லிப்போட்டதின்பேரில் மேற்படி பிரதிவாதி கும்பகோணத்துக்குப் போய்விட்டார். 2-ம் பிரதிவாதி ஜெம்புகேஸ்வரம் தர்மகர்த்தா அதிகாரமான பின்பு அவனைக்கொண்டு மேற்படி வேலைசெய்விச்சிக் கொள்ளலாமென்கிற யெண்ணத்தைப்பத்தி முதல்பிரதிவாதி ஜெம்புகேஸ்வரத்துக்கு வந்தும் அந்தப்படியே 2-ம் பிரதிவாதியும் அவர் போதனைக்குள்பட்டு தனக்குள் வேலைக்காரர்களாகிய மைத்த பிரதிவாதிகள் முதலான ஸ்தலத்தாருக்கும் பயம் கல்ப்பித்து அவர்களையும் வசப்படுத்திக் கொண்டு வழக்கத்துக்கும் சர்க்கார் வுத்திரவுகளுக்கும் விரோதமாக மேற்படி தாடங்கத்தை மேற்படி முதல் பிரதிவாயைக்கொண்டு திருட்டுத்தனமாய் துரஸ்து செய்வித்து இருப்பது 2-ம் பிரதிவாதியின் செய்கையென்பதற்கு சந்தேகமன்னியில் ருஜுப்படுகிற மேற்படி தப்பிதம் தன்னைசேராதிருக்கும்படி ஸ்தலத்தார் முதலானவர்களைக் கொண்டு தெஸ்தாவேஜீ உண்டுபண்ணிக்கொள்ளலா மென்கிற தைரியத்தினால் இவ்விதமாய் ஆன்சர் குடுத்திருந்தபோதிலும் இந்த வியாஜியத்துக்கு மேற்படி சங்கதியைப்பத்தியும் ஸ்ரீங்கேரி ஸ்ரீ சுவாமியளவாளுக்கும் நேரிட்டு இருக்கிற மரியாதை தாழ்வுக்கு

2-ம் பிரதிவாதியுள்பட மைத்த பிரதிவாதிகளும் பாத்தியப்படத் தக்கதென்று விசிதமாகும்.

19-வது. கலியுகம் பிறந்து 2000-வஷ-த்துக்கு பின் ஜகத் குருவாகிய ஸ்ரீசங்கரபகவத் பாதாசாரியாரவர்கள் அவாதரம் செய்த தாகவும் அவரால் காஞ்சீபுறத்தில் காமகோடி பீடம் ஸ்தாபித்தது போலவும் அதில் சுரேசுவராசாரியாரை நேமித்தாரென்றும் பிறகு அவடத்தில்தானே சித்தி அடைஞ்சதுபோலும் ஆன்சரில் சொல்லப்படுகிறது. அதுவும் நிஜமல்ல அப்படிக்கி சுரேசுவரா சாரியாரை பிறம்மாம்ச மானதால் அவருக்கு ஈசுவராம்சமாயும் சதுஷஷ்ட்டி கலா வித்தைகளும் தெரிந்தவருமான ஸ்ரீ சங்கர பக வத் பாதாசாரியாரவர்களுக்கு பிரபலமாய் காஞ்சீபுறத்தில் அதிஷ்டானமிருக்கலாம் முதல்பிரதிவாதி ஆன்சரில் சொல்லுகிறபடிக்கி ஸ்ரீ சங்கர பகவத் பாதாசாரியார் அவதாரம்செய்து 2900 சொச்சம் வருஷமாகிறது சன்னியாசிகள் ஒண்ணுக்கு சுமார் 100 வயசு இருக்கலாமென்று யெண்ணினபோதிலும் சுமார் 40, 50 சன்னியாசிகள் வரைக்கும் கைபீடம்போல் சொல்வதில் இருந்து இருக்கவும் அவர்களுடைய பேர்கள் யாவத்தும் முதல் பிரதிவாதிக்கி தெரிந்திருக்கவும் மேற்படியார்களுக்கெல்லாம் காஞ்சீபுரம் மடம் போல் சொல்லுகிற சமீபங்களில் சன்னியாசிகள் யாவத்துப்பேருக்கும் அதிஷ்டானம் இருக்கவும் அதுகளுக்கெல்லாம் பூஜை நடந்துகொண்டு வரவேணும் காஞ்சீபுரத்தில் யாதொரு அதிஷ்டானமும் கிடையாது அதில் பூஜையுமில்லை மடாதிபதிகளுக்கு குரு பறம்பரையினுடைய கிரமங்கள் தெரியவேண்டியது அவாளுடைய அதிஷ்டானங்களை பூசிக்கவேண்டியது முக்கியமான விஷயம் இது யோசித்து காஞ்சீபுரத்தில் அதிஷ்டானம் இருக்கிறதாயென்பதை ருஜூப்பார்த்தாலும் காஞ்சீபுரத்தில் மடமும் காமகோடி பீடாதிபதியென்று பிருதும் இருப்பதுபோலும் முதல்பிரதிவாதி ஆன்சரில் சொல்வது மாறுபாடு என்று தெரியவரும்.

20-வது. காஞ்சீபுரத்தில் காமகோடி பீடமும் ஜகத்குரு சங்கரபகவத் பாதாசாரியா ரவர்களால் நேமகம்செய்து அதில் ஒரு

சிஷியனை வைத்ததுபோல் சொல்வது நிஜமாகில் அவடத்தில் தானே முதல் பிரதிவாதி யிருக்கவேணுமேதவிர சுமார் 100 வருஷ காலமாய் கும்பகோணத்திலி ருக்கவேண்டியதில்லை அப்படிக்கி கும்பகோணத்தி லிருப்பதைக்குரித்து காஞ்சீபுரம் மடாதிபதி போல் சொல்லுகிற முதல்பிரதிவாதி கும்பகோணத்துக்கு வந்த காரணத்தையும் ஆன்சரில் சொல்லவில்லையென்று காஞ்சீபுற பிர தேசத்தில் மான்னியம் முதலான வருமானங்களும் அதற்கு ஆர்க் காடு சுபா நவாபு சாஹேப் அவர்களால் தகுந்த தஸ்தாவேஜிகளும் எழுதிக்குடுக்கவேணும் அப்படிக்கிருப்பதாய் ஆன்சரில் சொல்ல வில்லை. இதுகளை யோசிக்கும்போது காஞ்சீபுரத்தில் ஸ்ரீசங்கர பகவத்பாதாசாரியாரவர்களால் ஙேமிக்கப்பட்டதாக முதல் பிரதி வாதி சொல்லுகிற மடம் இல்லையென்று விசிதமாகும்.

21-வது. சுமார் 1000 ஷூ இருக்கும் வைஷ்ணவ மத கர்த் தாவான ராமாநுஜர் இருந்த ஸ்தலம் ஷை காஞ்சீபுரம் அவடத்தி லிருந்து விசிஸ்டாதுவைதம் தாம் உண்டுபண்ணுகிறதற்காக ஸ்ரீங் கேரி சரவஸ்வதீ பீடத்துக்குப்போய் ஸ்தாபித்துக்கொண்டு வந்தா ரென்றும் ராமாநுஜ சரித்திரமென்கிற கிரந்தத்திலும் உத்தேசம் 700 ஷூத்துக்கு முன் துவயிதம்செய்த மத்வாசாரியார் ஸ்ரீங்கேரி சரஸ்வதீ பீடத்துக்குப்போய் பிறசங்கம் பண்ணினுரென்றும் மத்வ விஜய மணி மஞ்சரீபோதனி என்கிற கிருந்தத்திலும் சொல்லியிருக் கிறது முதல் பிரதிவாதி ஆன்சரில் சொல்லியபடிக்கி ஜகத்குரு ஸ்ரீசங்கறபகவத்பாதாசாரியாரவர்கள் காஞ்சீபுரத்கில் மடம் ஸ்தா பித்து சுரேசுவருசாரியாரை ஙேமித்திருந்தால் காஞ்சீபுரத்தில் தானேயிருந்த ஷை ராமாநுஜரும் மத்வாசாரியாரும் காஞ்சீபுரத் தில்தானே பிரசங்கம் செய்து உறுப்படுத்திக் கொண்டிருக்கலாம் இதற்கு மதகிரந்தங்களினுலே கூட ஸ்ரீங்கேரி ஸ்ரீசங்கருசாரிசுவாமி மடத்துக்கு போனதாக தெரியவருகிறதைமாத்திரம் கோர்ட்டார் யோசித்தால் ஷை ஸ்ரீமடத்துக்கு தான் ஸ்ரீசங்கருசாரிய சுவாமிய ளவாள் மடமென்றும் அதுவே பெரிதான மடமென்றும் முதல் பிரதிவாதி சொல்லுகிறபடி காஞ்சீபுரத்தில் மடமில்லை என்

பதற்கும் மேற்படி கிருத்தங்களே போதுமான ருசுவென்று தெரிய வரும்.

22-வது. ஸ்ரீங்கேரி ஸ்ரீ சுவாமியளவாளுக்கு அட்டபல்லக்கு பஞ்சகலசம் அம்பாரியின்பேரில் பஞ்சகலசம் நவரத்தின கிரீடங்களும் பின்னும் மகரதோரணம் முதலான அனேக பிருதாவளிகளுடன் ஷை சுவாமியளவாள் பரம்பரையாய் தேசசஞ்சாரம் செய்து வருவதும் தவிர சமஸ்த தேசங்களுக்கும் ஏகசத்திருதிபதியாயிருந்த டில்லிபாச்சா சாகேப் பாதர் அவர்களால் ஸ்ரீங்கேறி ஸரஸ்வதீ பீடாதிபதியவர்களே ஜகத்குரு சுவாமியளவாளென்று சகலமான மகா பிருதுள்ளவர்களென்று தேசசஞ்சார சிக்ஷாரக்ஷணை தர்மபரிபாலனம் முதலானதும் ஸ்ரீங்கேரி சுவாமிய ளவாளுக்கே உண்டென்றும் தங்களுடைய பிருதான பச்சை சாமரம் சரிபுடி காகி சரூ தாசாமறப்பு ஷை கிரீடத்தில் கட்டுகிற கலசமிதுகளும்குடுத்து பிரவாணவும் குடுபட்டுமிருக்கிறது. முதல் பிரதிவாதி ஆன்சரில் சொல்லுகிறபடி ஸ்ரீசங்கர பகவத் பாதாசாரியாரவர்களுடைய பரம்பரையில் சேர்ந்தவருயிருந்தால் ஷை பிரதிவாதிக்கும் மேலெழுதிய பிருதுமுதலான கிரீடம் முதலிருக்கவேணும் அப்படிக்கில்லே.

23-வது. ஆதி குரு சங்கரபகவத் பாதாசாரியாரவர்கள் சரஸ்வதீ பீடம் ஸ்தாபித்து சுரேஸ்வருசாரிய சுவாமியளே பீடாதிபதிகாரமாய் நேமித்தபின் 10-வது பரம்பரையில் பீடாதிபதிகாரமாயிருந்து ஸ்ரீ வித்தியாரண்ணிய பாரதி சுவாமியளவாளால் விஜயநகரமென்கிற பட்டணம் நிர்மாணம்செய்து புக்காராயர் என்பவரை ராஜவாக நேமித்து சுவர்னவருஷம் வருஷிக்கும்படி செய்திருக்கிருரென்பது முதலான சரித்திரங்களே வெகு பிரசித்தமாக ஜனங்கள் சொல்லுகிறது தவிர, கும்பினியாரவர்களுடைய இங்கிலீஷ் புஸ்தகங்களிலும் தாக்கலாயிருக்கிறது. அதின்பிறகு கர்னுடக சிம்மாசன பிரதிஷ்டாபனுசாரியார் என்கிற பிருதும் ஆதி பீடாதிபதியாயும் ஆசேது ஹிமாசல தேசங்களுக்கு குருவாக இருப்பதுந் தவிர, ஸ்ரீங்கேரியில் பிரசித்தமாய் சரஸ்வதிபீடமிருக்கிற தென்பதை ஆன்சரில் காணுமலிருப்பதையும் யோசிக்கவேணும்.

24-வது. ஸ்ரீரங்கப்பட்டணம் சீமையைச்சேர்ந்த ஸ்ரீங்கேரி 1, அரிகெழி 2, விளாவடி 3, செருக்கறடி 4, கெமுகூர் 5, அந்தமல்லி 6, ஆலடி 7 இந்த கிராமங்கள் ஸ்ரீங்ககிரி மடத்தைச் சேர்ந்தது. ஷை கிராமங்களிலிருக்கப்பட்ட மேஜிஸ்திரேட்டு, சீவில், விவசாயம் முதலான அதிகாரங்களை ஷை ஸ்ரீமடத்தார் செலுத்திவருகிறார்கள். ஷை ராஜியத்துக்கு விசாரணைக்கு கும்பினியாரவர்கள் வந்தபின் ஷை மடத்தைச் சேர்ந்த மேஜிஸ்திரேட்டு முதலான அதிகாரத்தை சர்க்காரில் சேர்த்துக்கொள்ளவேணுமென்று கம்மீஷனராயிருந்த கப்பூன் சாயேப் அவர்கள் கவர்ன்மெண்டாரவர்களாலும் சீமைக்கு எழுதிக்கொண்டதில் ஷை மடத்தாரே ஷை அதிகாரங்களை செலுத்தத் தக்கதென்றும் கண்டுவந்த உத்திரவுப்பிரகாரம் ஷை சுவாமியளவாள் சொந்த மனுஷியாளைக்கொண்டே பார்த்து வருகிறார்கள்.

25-வது. கூடலி, கோலார், சிவகங்கை, புஷ்பகிரி, கருவீறம், ராமச்சந்திரபுரம் இதுமுதலான சிலதுண்டு மடத்தார்கள் ஒவ்வொரு ராஜாக்களுடைய பிரீதுசம்பாதித்து அந்த ராஜாக்களால் சுவல்ப பிருதுகளும் அல்ப வருமானங்களும் பெற்றுக்கொண்டு ஸ்ரீஆதிகுரு சங்கர பகவத்பாதாளாகிய சிஷியர்கள் போலவும் தங்கள் பெயரும் சங்கராசாரிய சுவாமிகள் என்றும் பெயரிட்டுக்கொண்டு தேசாடனம் செய்கிறார்கள். அப்படிப்போலவே முதல்பிரதிவாதிக்கு முன்னிருந்த 2-ம் சந்நியாசி தஞ்சாவூர் மகாராஜாவினுடைய பிரீதியைச் சம்பாதித்து அந்த ராஜாவினுடைய அவலம்பனத்தினாலே சுவல்ப காலத்துக்குமுன் கும்பகோணத்தில் ஒரு மடம் சம்பாதித்து கட்டிக்கொண்டு ஆன்சரில் சொல்லுகிறபடி சங்கராசாரியார் என்கிற பெயரை வைத்துக்கொண்டு யிருக்கிற மடத்துக்கு முதல் பிரதிவாதி அதிகாரியே தவிர ஜகத்குரு சங்கர பகவத்பாதாளவர்களால் காஞ்சீபுரத்தில் காமகோடிபீடம் ஸ்தாபித்ததுமில்லை. அதில் முதல் பிரதிவாதி சேர்ந்தவருமல்ல. அப்படி ராஜாவினுடைய அவலம்பனத்தினாலுண்டான மடமென்பதற்கு ஷை ராஜாக்களால் கொஞ்ச நாள் சுவல்ப நெல்லு சம்பளமாயும் பிறகு சரபோஜி மகாராஜா நாளையில் தம்முடைய வருமானம் 5-ல்,

1-ல் ஸ்ரீ 1-க்கு சிலதுகை சம்பளமாகக்கொடுத்து வருகிறதே திர்ஷ்டாந்திரமான ருசுவாயிருக்கிறது. இப்படிப்பட்ட முதல் பிரதிவாதிக்கு விவாத தாடங்கத்தை ஜீர்ணோத்தாரணம் செய்ய என்ன பாத்தியமிருக்கிறது.

26-வது ஷை துண்டுமடங்களில் கூடலி மடத்து சந்நியாசி என்பவர், தானே சங்கராசாரியசுவாமியளவாள் சிஷ்யரென்று தனக்கும் மகா பிருதுகளும் தேச சஞ்சாரமே தவிர ஸ்ரீங்கேரி மடத்துக்கு யாதொரு சம்பந்தமும் இல்லையென்றும் ஹைதராபாத்து அதாலத்து கோர்ட்டு வக்கீல் மூலமாய் வியாச்சியஞ்செய்தார். அவடத்திலிருக்கிற அதிகாரஸ்தாள் ஷை சமஸ்தானத்திலிருக்கிற 4 வர்ண ஜாதிகளையும் வித்துவாம்ஸாள் முதலான பண்டிதர்களையும் பஞ்சாயத்திலிருந்து சாஸ்திரம் தஸ்தாவேஜி முதலானதுகளை பார்த்து தீர்ப்புசெய்து அது சங்கதியை தெரியப்படுத்தும்படி அவடத்திய அதாலத்து கோர்ட்டார் கொடுத்த உத்திரவுப்படி ஷை பஞ்சாயத்தார் ஷை உபய கக்ஷிக்காரர்களுடைய வாய்மொழிகளைக்கேட்டு தஸ்தாவேஜிகளைப் பார்த்து சங்கரவிஜயம் முதலான கிரந்தங்கள் படிக்கும் ஆதிரவுகள் அநுபோகப்படிக்கும் ஸ்ரீங்கேரி ஸ்ரீசரஸ்வதிபீடம் ஆதிகுரு ஸ்ரீ சங்கர பகவத்பாதாசாரியார் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டதென்றும் அதுவே சாஸ்திரோக்தமாயும் லோகபிரசித்தமும் உள்ள மடமென்றும், கூடலீ கும்பகோணம் முதலான இதின் 25-வது கலத்திற்கண்ட மடஙகள்யாவற்றும் ஒவ்வொரு கண்ட தேசாதிபதி அவர்களுடைய அவலம்பனத்தினால் உண்டாயிருக்கிற துண்டுமடங்கள் என்றும், அவர்களுக்கு சங்கராசாரியாரென்கிற பெயரும் பிருதுகளும் கிடையாதென்றும் தீர்ப்புசெய்து, ஷை அதாலத்து கோர்ட்டு ஷை தீர்ப்பை அனுப்புவித்ததில் ஷை தீர்ப்பைத்தானே ஷைகோர்ட்டிலும் காயப்படுத்தியும் ஸ்ரீங்கேரிமடமே ஆதிபீடமென்றும் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து மற்ற மடத்தார்கள் வேணுமென்றும் ஸ்ரீங்கேரி ஸ்ரீசுவாமியளவாள் தவிர, யார் ஸ்ரீசங்கராசாரியாரென்று பெயர் இட்டுக்கொண்டுவந்தபோதிலும் அவர்களுக்கு மரியாதை செய்யவும்கூடாதென்று விளம்பரப்படுத்தியும் இருக்கிறார்கள்.

27-வது. ஸ்ரீங்கேரி ஸ்ரீசுவாமியளவர்களுக்கு ௸ கோலார் மடம் வித்தியாரண்ணி பாரதி என்பவர் விஜய௵ மாகசுத்த பூர்ணமாவாஸை திதியில் ஸ்ரீங்கேரி ஸ்ரீமடத்து பீடாதிபத்தியத்தையும் ஸ்ரீ சுவாமியளவாளுடைய அநேக பிருதாவளிகளையும் கண்டு அவருடைய பாதத்துக்கு வந்தனம் பண்ணுகிறதாகவும் தாம் சிஷியராயிருந்துகொண்டு ஸ்ரீ சுவாமியளவாளுடைய ஆக்ஞானுசாரப் பிரகாரம் நடக்கிறதாகவும் கண்டு விக்ஞாபனப்பத்திரிகை எழுதிக் கொண்டிருக்கிறார்கள். பின்னும் புஷ்பகிரி மடம் வித்தியா சங்கர பாரதி என்கிறவர் மேல்கண்டபடி ஸ்ரீமடத்துக்கு விக்ஞாபனப்பத்திரிகை எழுதிக்கொண்டிருக்கிறார். சிவகங்கை மடம் கங்காதரபாரதி என்கிறவரும் கருவீறம் ராமச்சந்திரபுரம் முதலான சில மடத்தார்களும் ஸ்ரீங்கேரி ஸ்ரீ அவாள் மடத்துக்கு மேல்கண்டபடி விக்ஞாபனம் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். கூடலீமடம் சந்நியாசி ஸ்ரீங்கேரிக்கு ஸ்ரீ சுவாமியளவாளுடைய கிராமங்களை ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறதை விட்டுவிடுகிறதாகவும் ஸ்ரீ சுவாமியளவாள் உத்திரவுக்கு கீழ்படிந்து நடக்கிறதாகவும் ஸ்ரீங்கேரி ஸ்ரீ சுவாமியளவாளுடைய பிருதாவளிகளையும் பீடாதிபத்தியத்தையும்கண்டு விண்ணப்பப்பத்திரிக்கையும் எழுதிக்கொடுத்திருக்கிறார். முதல் பிரதிவாதியைப்பார்க்கிலும் அதிக பிருதுகளுடனிருக்கிற ௸ 2 மடத்தார்கள் எழுதிக்கொண்டிருக்கிற விக்ஞாபனப்பத்திரிக்கையும் பார்த்து யோசிக்கவேணும்.

28-வது. ஸ்ரீமந்தபண்டித பிரதான பேசுவாய் பகதூர் அவர்களாலும் ஹைதிராபாத் நவாப்பு நிஜாமல்லி பகதூர் சாகேப் அவர்களாலும், மைசூர், நாஞ்சநாடு, சிவகங்கைமுதலான ராஜாக்களாலும் மற்ற அநேகமான ஜெமீன்தாரர்களாலும் ஸ்ரீங்கேரி ஸ்ரீ சுவாமியளவாளே சரஸ்வதி பீடாதிபதியளான ஜகத்குருஸ்வாமியளவாளென்றும், பின்னும் அவர்களுடைய அநேக பிருதாவளிகளையும் கண்டு தங்கள் தங்கள் சயன் முகருடன் விக்ஞாபனப்பத்திரிகை எழுதிக் கொள்ளப்பட்டிருக்கிறது. மேலும் சென்னப்பட்டணம் பங்காளா பம்பாய் இந்த கவர்னர் அவர்களால் கொடுக்கப்பட்டிருக்கிற ராதாரி

களில் ஸ்ரீங்கேரி ஸ்ரீசுவாமியளவாள்தான் ஜகத்குருவென்றும் அவர்களுக்கு இஸ்தி தாபால் போய் சகல மரியாதைகளும் செய்து அவர்களுத்திரவுப்படி கலெக்டர் முதலான கும்பினி இலாகா உத்தியோகஸ்தர் எல்லாரும் நடந்துக்கொள்ளுகிற தென்று கண்டிருக்கிறதுந்தவிர, அந்தந்த கவர்ன்மெண்டார்ர சேர்ந்த ஜில்லாக்களுக்கும் ஆர்டர் பிறந்து இருக்கிறது.

29-வது. 1837-ம்௵த்தில் இந்த தேசங்களுக்கு ஸ்ரீங்கேரி ஸ்ரீசுவாமியளவாள் விஜயஞ்செய்யவேண்டியதைக் குரித்து ஆஜ்விஜ சுத்ததெசமியில் மைசூர் ருசா அவர்களுடைய சீர்மைக்கு கமிஷனர் அதிகாரமாயிருக்கிற துரையவர்களுக்கு பத்திரிகை அனுப்புவித்ததில் அவர்கள் கவர்ன்மெண்டாருக்கு எழுதி உத்திரவு தருவித்துக்கொண்டு சுவஜர்பார்கந்தாசார் முதலானதுகளும் ஸ்ரீ சுவாமியளவாளுடன் சஞ்சாரம் செய்யும்படி கொடுத்தும் அதுசங்கதியைக்கண்டு ஸ்ரீங்கேரி ஸ்ரீ சுவாமியளவர்கள் ஸ்ரீசந்நிதானத்துக்கு அநேகம் பிருதாவளிகளை கண்டு 1837௵ நவம்பர்௴ 21உயில் ஷை கமிஷன் துரையவர்கள் விக்ஞாபனப்பத்திரிகையை எழுதிக்கொண்டிருக்கிருர். இது தவிர, ஸ்ரீங்கேரி மடத்து சிஷியாளை ஷை மடத்தினுடைய வர்ஞசிரமம் ஆசார விசாரணைக்குள்பட்டு பாதகாணிக்கை அக்கிரதாம்பூலம் முதலானமரியாதைகளைக் கொடாமல் ஷை மடம் முத்திரையை அதிக்கிரமத்தால் அப்படிப்பட்ட பேர்களை சர்க்காரில் வரவழைத்து தாகீது செய்து பந்தோபஸ்து செய்து கொடுக்கும்படி மாமூல் தார்களுக்கு 1832௵ செப்டம்பர்௴ 5உயில் ஷை மைசூர் கமிஷனர் அவர்களாலும் உத்திரவுகள் அனுப்பப்பட்டிருக்கிறது.

30-வது. துண்டு மடத்தைச்சேர்ந்த ராமச்சந்திரபுரம் ஹொளேஹள்ளி, தீர்த்தஹள்ளி, ஹரிஹரபுரம் முள்ளுபாகில் இந்த மடத்தார்களுக்கும் பின்னும் சில துண்டு மடத்தார்களுக்கும் சுவேதசத்திரம் மகாதோரண முதலான பிருதுகள் பிடிக்கக் கூடாதென்றும், ஷை பிருதுகள் யாவற்றும் ஸ்ரீங்கேரி மடத்துக்கே செல்லுமென்றும், ராமச்சந்திரபுரம் மடத்து பிருதுகளை பிடுங்கி ஸ்ரீங்கேரி

மடத்துக்கு சேர்க்கிறது நியாயமானதென்று மைசூர் சமஸ்தானுதிபதிகள் தீர்ப்பு செய்தும் துண்டு மடத்தார் அப்பேர்க்கொற்ற பிருதுகள் பிடிக்கக் கூடாதென்றும், பிடித்தால் அதுகளை ஸ்ரீங்கேரிமடத்துக்கு சேர்ப்பிக்கிறதென்றும், 1828வரு த்தில் அவர்களுடைய சமஸ்தானத்திலிருக்கிற உத்தியோகஸ்தர்களுக்கு உத்திரவு அனுப்பி இருக்கிறுர்கள். இது தவிர, கூடலீமடத்தாருக்கு அதிக பிருது கூடாதென்றும் அவர்களுடைய சமஸ்தானத்திலிருக்கிற உத்தியோகஸ்தர்களுக்கு உத்திரவு அனுப்பி இருக்கிறுர்கள். இது தவிர கூடலீ மடத்தாருக்கு அதிக பிருதுகள் கூடாதென்றும், அவர்களுடைய பிருதுகளை ஸ்ரீரங்கப்பட்டணம் மகாஜனங்கள் பிடுங்கிக்கொண்டது நியாய மென்றும், ஸ்ரீங்கேரி மடத்துக்கே ஜகத்குருவென்று பெரும் சகலமானபிருதுகள் உண்டென்றும், ஸ்ரீ ஸ்ரீரங்கப்பட்டணம் கம்மிட்டி துரையவர்கள் தீர்மானம் செய்திருக்கிறதாக ஆங்கிரசவரு அற்பிசி பௌரணேமாவாசை திதியில் ஷை ஸ்ரீரங்கப்பட்டணம் மகா ஜனங்கள் விக்ஞாபனப்பத்திரிகை எழுதிக்கொண்டிருக்கிறுர்கள்.

31-வது. குத்தி பல்லாரியைச்சேர்ந்த சம்பூ சத்திரபதி என்கிற ராஜா அவர்களால் ஸ்ரீங்கேரிமடத்துக்கு கிடைத்திருக்கிற மான்னிய கிராமங்களை கூடலீ மடத்தார் ஆக்கிரமித்துக்கொண்டதைக் குரித்து நடந்த வியாச்சியத்தில் ஷை மடத்தாருக்கு எவ்வளவும் சம்மந்தமில்லை என்றும் ஸ்ரீங்கேரி ஸ்ரீமடத்துக்கே பாத்தியமென்றும், அவாளுடைய பிருதாவளியை ஸ்தாபித்து தீர்ப்பாயிருக்கிறது பின்னும் தொண்டிராஜ சூரத்திராண் என்பவன் சங்கராசாரிய சுவாமியளவாளுடைய பெயரை அதிகாரம் இதுகளை சொல்லிக்கொண்டு தேசாடனம் செய்துவந்ததைப்பற்றி ஸ்ரீங்கேரி மடம் காரியஸ்தரான காளம்பட்ஜீ என்பவர் ராசிக்காதுக்குடி சப்கலெக்டர் துரையவர்களிடத்தில் பிராதுசெய்ததில் அவர் பஞ்சாயத்தாரை நேமித்து விசாரணைசெய்து நிஜம்தெரிந்து ஸ்ரீங்ககிரி சுவாமியளவாளே லோக குருவென்றும் ஷை தொண்டிபுரம் சூறத்திருண துண்டு மடத்தார்கள் ஒப்பந்தம் பெயர்வைத்துக்கொண்டு இருக்

கிறார்களென்றும், 1841ஷு செப்டம்பர்மீ 21வ தீர்ப்பாயிருக்கிறது.

32. ராமேசுவரம் ஸ்தலத்திலிருக்கும் ஆரியஜாதியார்களுக்கு பிராமணத்துவமில்லையென்று ஷை ஸ்தலம் பிராம்மணாள் விவாதப்பட்டு ஸ்ரீங்கேரி ஸ்ரீஜகத்குரு சுவாமியளவாளிடத்தில் வியாச்சியம் சொல்லிக்கொண்டதை ஸ்ரீ சுவாமியளவாள் கேட்டு சாஸ்திரப்படி ஆரியாளுக்கு பிராமமணத்துவமில்லை யென்றும், அவாளிடத்தில் உதகஸ்பரிசம் செய்யக்கூடாதென்றும், ஸ்ரீமுகமனுப்பினதற்கு ஷை ஆரியாள் சம்மதிப்படாமல் வருஷம் தேதியாதி இல்லை. மதுரை ஜில்லா கோர்ட்டில் வியாச்சியம் செய்ததில் ஷை சுவாமியளவாள் கொடுத்த ஸ்ரீமுகத்தை தானே உறுதிப்படுத்தி ஸ்ரீ சுவாமியளவாளுடைய அநேக பிருதாவளிகளையும் கண்டு அசல் அப்பீல் பெஷலிலும் தீர்மானமாயிருக்கிறது.

33-வது. காஞ்சீபுரத்தில் ஸ்ரீ சக்கர யந்திரம் ஸ்தாபித்தது போலவே 18 தேவஸ்தானங்களில் ஸ்ரீ ஆதிகுரு சங்கரபகவத்பாதாசாரியாரவர்களால் எந்திரம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதாக கிரந்தங்களினால் தெரியவருகிறது. முதல் பிரதிவாதி ஆன்சரில் சொல்லுகிறபடி காஞ்சீபுரத்தில் மடங்கட்டி சிஷியாளை நேமித்ததுபோல சொல்லுவது நிஜமாயிருந்தால் ஷை 18 ஸ்தலங்களிலும் ஒவ்வொரு மடமும் சிஷியரும் இருக்கவேணுமே? அப்படிக்கில்லை. ஆதிகுரு சங்கரபகவத்பாதாசாரியரவர்களால் ஜெம்புகேசுவரத்தில் ஒரு மடமும் நிர்மாணம் செய்ததுபோல் ஆன்சரில் சொல்வது நிஜமாயிருந்தால் காஞ்சீபுரம் க்ஷேத்திரத்தைப்பார்க்கிலும் அதிகமுக்கியமுள்ளதான க்ஷேத்திரமாயிருக்கிற ஷை ஜெம்புகேசுவரத்திலும் ஒரு சிஷியாளை நேமித்திருக்கலாமே? அப்படிக்கில்லாமலிருக்கிறதையும் யோசிக்கவேணும்.

34-வது. ஜெம்புகேசுவரம் ஸ்தலத்தாரனைவரும் பிலவஷு தைமீ 5வ-யில் ஸ்ரீங்கேரி ஸ்ரீசுவாமியாளவாள் சந்நிதானத்துக்கு அக்கிர தாம்பூலம் சம்பாவனை முதலானதுகளைக் குறித்து எழுதிக்கொண்ட விக்ஞாபனப் பத்திரிகையில் கும்பகோணம் சுவாமிகள்

நூதனமாய் ஷெ தாடங்கத்தை ஜீர்ணோத்தாரணம் செய்யவேணு மென்றும், கலெக்டர் துரையவர்களிடத்தில் அர்ஜிகொடுத்தும் அவருக்கு உத்திரவாகவில்லை என்றும் ஸ்ரீங்கேரி ஸ்ரீசுவாமியளவாள் பரம்பரையில் ஜீர்ணோத்தாரணம் செய்திருப்பதையும் இப்பவும் அவாளைக்கொண்டே நடப்பிவிக்கவேணுமென்றும் நாங்கள் அர்ஜி கொடுத்திருப்பதாகக் கண்டிருக்கிறார்கள். அந்த விக்ஞாபனப்பத்திரிகையில் 6, 7, 8, 9, 10, 11 இந்த பிரதிவாதிகளும் கையெழுத்து போட்டிருக்கிறார்கள். ஷெ தாடகம் துரஸ்துசெய்ய ஸ்ரீ சுவாமியளவாளே பாத்தியஸ்தாளென்பதைக் கண்டு 3-ம் பிரதிவாதி தஸ்தாவேஜி எழுதிக்கொடுத்திருக்கிறாள்.

35-வது. 1835ஹு மேமீ 20உ இந்த சுபா கலெக்டர்துரையவர்களிடத்தில் கொடுத்திருக்கிற அர்ஜிகளில் விவாத தாடங்கத்தை ஜீர்ணோத்தாரணம் செய்ய ஸ்ரீங்கேரி ஸ்ரீசுவாமியளவாளுக்கே பாத்தியமே தவிர முதல் பிரதிவாதிக்கு யாதொரு சம்மந்தமில்லையென்று கண்டிருக்கிறதிலும் 4, 6, 7, 11 இந்த பிரதிவாதிகளும் பின்னும் ஷெ ஸ்தலத்தார்களும் கையெழுத்து வைத்திருக்கிறார்கள். மேலும் ஷெ அகிலாண்டேசுவரியினுடைய தாடங்கத்தை துரஸ்து செய்ய உத்திரவாகவேண்டியதைக் குறித்து தாங்கள் கலெக்ட்டர் போர்ட்டு முதலான இடத்தில் பிட்டிஷன் கொடுத்திருக்கிறதாகவும் அது சங்கதியைப்பற்றி பேசவேண்டியதற்காக ஜெம்புகேஸ்வரம் முத்தியப்பிள்ளை என்பவனுக்கு 1839-ம்ஹு சூலைமீ 10உயில் ஒரு அதிகார பத்திரமும் ஷெ சங்கதியைக்குறித்து, தானே மலைக்கோட்டையிலிருக்கும் வாஞ்சி சாஸ்திரியளுக்கு 1841-ம்ஹு டிசம்பர்மீ 10உயில் ஒரு அதிகார பத்திரமும் ஷெ சங்கதியைக் குறித்துதானே கோவில் ஸ்தானத்தார் முதலான இடத்திலும் கச்சேரியிலும் பேசவேண்டியதற்காக மலைக்கோட்டை வெங்கிடராமய்யனுக்கு 1840-ம்ஹு சூன்மீ 15உயில் ஒரு அதிகார பத்திரமும் இப்படியாக 3 அதிகாரபத்திரங்களிலும் 4, 6, 7, 8, 9, 10, 11 இந்த பிரதிவாதிகளாலும் ஆன்சரில் சொல்லுகிற அண்ணாத்துரை பண்டிதன் முதலான அனேவர்களாலும் அச்சுக்கடுதாசிகளில் அதி

காரபத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்டிருக்கிறது. பின்னும் ஷை ஸ்தலத்தார்கள் மேஜிஸ்திரேட்டிலும் ரிவினியூவிலும் அர்ஜிகள் கொடுத்திருக்கிறார்கள். அதுகளிலும் ஷை அதிகாரப்பத்திரங்களிலும் விவாத தாடங்கத்தை ஜீர்ணோத்தாரணஞ்செய்ய ஸ்ரீங்கேரி ஸ்ரீ சுவாமியளவாளே பாத்தியஸ்தர்யென்று கண்டிருக்கிறது. இது தவிர, ஷை தாடங்க சங்கதியை விசாரணை செய்து தெரியப்படுத்தும்படி ஸ்ரீரங்கம் வகையரா தேவஸ்தானம் ஏட் பேஷ்காராயிருந்த வைத்திலிங்க முதலியார் கலெக்டர் துரையவர்களால் உத்திரவு அனுப்பப்பட்டு ஜெம்புகேசுவரம் ஸ்தலத்தாரை விசாரணை செய்ததில் ஷை விவாத தாடங்கத்தை ஜீர்ணோத்தாரணம் செய்ய மாமூல் வழக்கப்படி ஸ்ரீங்கேரி ஸ்ரீ மடத்தார் பாத்தியஸ்தர்யென்றும் முதல் பிரதிவாதிக்கு யாதொருசம்மந்தமில்லையென்று வாக்குமூலம் எழுதி வைத்திருக்கிறார்கள். ஷை வாக்குமுலம் முதலானதைக் கண்டு ஷை ஏட் பேஷ்கார் எழுதிக்கொண்ட ரிபோர்ட்டு முதலான வாக்கு மூலங்களை கலெக்டர்துரையவர்கள் பார்வையிட்டு ஷை தாடங்கம் துரஸ்து செய்ய ஸ்ரீங்கேரி ஸ்ரீ சுவாமியளவாளே பாத்தியஸ்தர் என்று கவர்ண்மெண்டு போர்டு இதுகளுக்கு லெட்டர் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். இத்தியாதி முகாந்திரங்களை கோர்ட்டார் யோசிக்கும்போது ஷை தாடங்கம் ஜீர்ணோத்தாரணம் செய்ய ஸ்ரீங்கேரி ஸ்ரீ சுவாமியளவாளே பாத்தியஸ்தரென்றும் பிரதிவாதிகள் மாறுபாடாய் துர்வழக்காடுகிறார்களென்றும் விசிதமாகும். பின்னும் இந்த சுபா ஏட் சிரஸ்ததார் முதலான சில உத்தியோகஸ்தர்களும் சாவுகார் பாலசுப்பிரமணிய முதலியார் முதலான சிலர்களும் ஸ்ரீ சுவாமியளவாள் பேருக்கு தனித்தனியே விக்ஞாபனப்பத்திரிகைகள் எழுதிக்கொண்டிருக்கிறார்கள்.

36-வது ஸ்ரீங்கேரி ஸ்ரீ சுவாமியளவாளுக்கு முன் பரம்பரையில் இருந்து ஸ்ரீங்கேரியிலிருந்து சித்தங்களாகி போனவர்களுக்கும் தேசசஞ்சாரம் போனவிடத்தில் காசீ பஞ்சவடிதீரம் இதுகளில் சித்தங்கதாளாய்ப் போனவர்களுக்கும் சுமார் (68) அதிஷ்டானம் வரையில் இருக்கிறது. அப்படி சித்தங்கதாளாகி போனவர்க

ளுடைய பெயரும் வம்சக்கிரமங்களும் வாதிக்கு தெரிந்திருக்கிறதுந் தவிர, நாளதுவரையில் ஷை அதிஷ்டானங்களுக்கு பூசை நடந்து வருகிறது. பின்னும் பிராதில் சொல்லுகிறபடி 80 வருஷத்துக்கு முன் அபிநவ சச்சிதானந்த பாரதி சுவாமியளவாள் விவாத தாடங்கத்தை துறஸ்துசெய்து அவ்விவரத்தை ஷை தாடங்கத்தில் எழுதி வைத்திருந்ததையும் அதை இப்போது பிரதிவாதிகள் எடுத்துப் போட்டு கும்பகோணம் சுவாமிகளால் துறஸ்து செய்யப்பட்டிருக் கிறதென்று ஒருநகட்டில் எழுதி ஷை தாடங்கத்து நடுவில் வைத் திருக்கிறார்கள். இது சங்கதிகளை வாதி ருஜுப்படுத்த சித்தமா யிருக்கிறார்.

37-வது. முதல் பிரதிவாதியினுடைய பெயர் "சந்திரசேக ரேந்திர சரசுவதி" என்றும் அவருடைய பெயரை வித்தியாசமாய் பிராதில் கண்டிருப்பது போலும் ஆன்சரில் சொல்லப்பட்டிருக் கிறது. நிஜமான பெயரின்பேரில் சரசுவதி என்றும், இந்திரா ளென்றும், தீர்த்தாளென்றும் இப்படியாக அவர்களுடைய குரு பரம்பரையின்பேரில் பெயர் வைத்துக்கொள்ளுகிறது வழக்கம். அந்தப்படி முதல் பிரதிவாதியினுடைய நிஜமான பெயரை பிரா தில் கண்டும் அதின்பேரில் பாரதி என்றும் பிராதிற் சொல்லப்பட் டிருக்கிறது. பாரதி என்கிற சொல்லுக்கும் சரசுவதி என்கிற சொல்லுக்கும் ஒரே அர்த்தமேதவிர வேறில்லை. தம்முடைய நிஜ மான பெயர் சந்திரசேகரர் என்பதை ஆன்சரில் ஒப்புக்கொண் டிருப்பதாகவும் சந்திரசேகரேர்ந்திரபாரதி என்று பிராதில் கண் டிருப்பதை வித்தியாசம்போல் சொல்லுவது உபயோகமற்றது போலும் சந்திரசேகரேந்திர சரசுவதி என்கிறது 3 பெயர் ஆகிறது. அதுகள் சந்நியாசி ஆசிரமத்துக்கு உண்டாகிய விசுவேசுவர சுருதி என்கிற கிரந்தத்துக்கு மடாதிபதிபோல சொல்வதற்கு விரோத மாக இருக்கிறது.

38-வது இந்த வியாச்சியத்தில் ரிப்ளையில் கண்ட தஸ்தா வேஜிகளைத் தவிர இன்னும் அநேக தஸ்தாவேஜுகள் தாக்கல் செய்யவேண்டிய அகத்தியமுள்ளதுகளாக இருக்கிறது. அந்த தஸ்

தாவேஜிகள் ஸ்ரீங்கேரி ஸ்ரீமடம் ரிகார்டில் இருப்பதைப் பரிசோதித்து பார்த்து எடுத்து அனுப்புகிறதற்கு ஸ்ரீ சுவாமிகளவர்கள் ஸ்ரீங்கேரியில் இல்லாமல் தூரதேசத்துக்கு யாத்திரை நிமித்தியம் விஜயம் செய்து இருப்பதினாலே அதுகள் சீக்கிரமாய்வர சரிப்படாமல் ஆஜராய் வந்த தஸ்தாவேஜுகளைக்கண்டு இந்த ரிப்ளை கொடுத்திருந்த போதிலும் மற்ற இந்த வழக்குக்கு உபயோகமுள்ள தஸ்தாவேஜுகளை மனுவின்பேரில் தாக்கல்செய்ய வாதி ஆஜராயிருக்கிறார்.

39-வது. இந்த வழக்கில் ஸ்ரீங்கேரி ஸ்ரீ சுவாமியளவாளுக்கு லோககுருவென்று சங்கராசாரியாரென்கிற பெயர் கிடையாதென்று ஸ்ரீங்கேரில் சரசுவதிபீடம் ஸ்தாபித்தாரென்றும் பிரதிவாதிகள் ஆன்சரில் சொல்லப்படாத்தினாலே ஷை ஸ்ரீங்கேரி ஸ்ரீ சுவாமியளவாளே லோககுருவும் சங்கராசாரியார் என்பதையும் மேல்கண்டபடி துண்டுமடத்தார்கள் எழுதிக்கொண்டிருக்கிற விக்ஞாபனப் பத்திரிகை முதலான தஸ்தாவேஜிகளினால் ருசுவாயிருந்தபோதிலும் ஸ்ரீ ஆதிகுரு சங்கர பகவத் பாதாசாரியார் பரம்பரையில் சேர்ந்தவர்களால் ஷை தாடங்கத்தை துறஸ்துசெய்யவேணுமென்று பிரதிவாதிகளால் ஒப்புக்கொண்டிருப்பதால் ஆதிகுரு சங்கராசாரியாரவர்களால் ஸ்ரீங்கேரியில் சரஸ்வதிபீடம் ஸ்தாபித்து அதில் நேமித்திருந்த சுரேசுவராசாரியாருடைய பரம்பரையில் ஷை சுவாமியளவாள் சேர்ந்தவர், அல்லது முதல் பிரதிவாதி சொல்லுகிறபடி காஞ்சீபுரம் காமகோடி பீடம்போல் சொல்வதை ஸ்தாபித்து அதில் சுரேசுவராசாரியாரை நேமித்ததுபோல் சொல்வதே நிஜமா என்பதைமாத்திரம் இதில் சாஸ்திரப்படி நீதியாயிருக்கவாகிலுந் தீர்மானிக்கவேண்டியதா யிருக்கிறது. ஆகையால் சாஸ்திரத்தைப் பற்றின இவ்வழிக்கில் இண்டியாவிலிருக்கிற பங்காளா, பொம்பாயி, சென்னபட்டணம் இந்த கவர்ன்மெண்டைச் சேர்ந்த சதர் கோர்ட்டு பண்டிதர்களுக்கு சவால் அனுப்பிவைத்து நிஜம் தெரிந்துகொண்டு விவாத தாடங்கத்தைக் குறித்து வாதியிட்டிருக்கிற தஸ்தாவேஜிகளை பார்வையிட்டு இந்த வியாச்சியத்துக்கு நடப்பட்ட காலத்தில்

பிரதிவாதிகள் மடாதிபதியாக இருக்கிற கும்பகோணத்தின் நடுவில் போட்டிருக்கிற நகட்டை எடுக்கும்படியாயும் முதல் பிரதிவாதி வகைராக்களுக்கு தகுந்த சிக்ஷை நடப்பிவிக்கும்படியாயும் வாதியவர்களான ஸ்ரீசங்கிரி சுவாமியவர்களாலே துரஸ்து செய்விக்கும்படியாயும் தீர்மானிக்க வேணுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

1845-ம் ஞூ }
ஜனவரிமீ 21உ }

திருச்சிராப்பள்ளி ஜில்லா பிரன்சிபல் சதர்மீன் கோர்ட்டாரவர்கள் சமுகத்திற்கு.

1844-ம்ஞூத்திய அசல் 95-ம் நம்பரின் முதல் பிரதிவாதியவர்களான கும்பகோணத்தில் வசித்தும் ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி அவர்களாகிய ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமியவர்களால் முக்தியார்நாமா பெற்ற ஸ்ரீமடம் ஸ்ரீகாரியம் கெணபதி சாஸ்திரிகளுக்காக கோர்ட்டு வக்கீல் சுப்பய்யர் எழுதிக்கொண்ட ரிஜாய்ண்டர் என்னவென்றல்.

* **வாதி ரிப்பிளை சங்கதி சரியல்ல.** 1-வது வாதியின் எஜமானரென்று சொல்லப்பட்ட எதி ஆதி சங்கரபகவத்பாதாசாரியருடைய சிஷிய பரம்பரையைச் சேர்ந்தவரல்ல. அவருக்கு ஸ்ரீசக்கிரதாடங்க ஜீர்ணோத்தாரண பாக்கியமும் இல்லை; எப்படியென்றால்: ரிப்பிளையின் 1-வது கலத்தில் ஆதிசங்கரபகவத்பாதாசாரியரவர்கள் 3000 ஞூத்துக்குப்பின் விக்கிரமாதித்தன் ராஜரீகத்தில் கேரளதேசத்தில் அவதாரம் செய்தாரென்றும் காஞ்சீபுரத்தில் காமகோடிபீடம் ஸ்தாபித்தது இல்லையென்றும் சுரேசுவராசாரியரை அந்தபீடாதியாக நேமித்தது இல்லை போலவும் ஆதிசங்கரபகவத்பாதாசாரியாரவர்களாலே செய்விக்கப்பட்டிருக்கிற ஸ்ரீசக்கிரதாடங்க ஜீர்ணோத்தாரணம் செய்விக்கிற பாக்கியம் காமகோடி பீடாதிபதியவர்களுதல்லவென்றும் அந்த பாக்கியம் தன் எஜமானதென்றும் சுரேசுவரா

சாரியரை ஸ்ரீங்கேரியில் நேமித்து 5 லிங்கங்களில் போக லிங்கத்தைக் கொடுத்தாரென்றும் இப்படியாக வாதி மனசுக்குத் தோணின படிக்கெல்லாம் அநேக சங்கதிகளை எழுதி அதுகளுக்கு சிவரகசியம் பவிஷியோத்தரபுராணம் சங்கரவிஜயம் முதலான கிரந்தங்கள் ஆதாரம் போலவும் மொத்தமாய்ச் சொல்லுகிறார்களே தவிர அதுகளில் இன்ன சங்கதிக்கு இன்ன கிரந்தத்தில் இன்ன பிரகரணத்தில் இவ்விதமாகச்சொல்லியிருக்கிறதென்று பிரித்து சொல்லவில்லை. காஞ்சீபுரத்தில் ஆதிசங்கரபகவத்பாதாசாரியாரவர்கள் சர்வக்ஞபீடமாகிய காமகோடிபீடமும் மடமும் நிர்மாணம்பண்ணி அவடத்தில் சுரேசுவராசாரியரை பீடாதிபதியாக நேமித்து ஸ்ரீகாஞ்சிபுரத்தில் முக்தியடைந்ததற்கு புராணம் ஆசாரியவிஜயம் முதலான கிரந்தங்கள் மூலமாய் விசிதப்படுத்தும்போது வாதியினுடைய பிராது ரிப்ளைகளில் சொல்லுகிற பாத்தியங்கள் அடியோடே எடுபட்டுப்போகிறது.

1-வது. ஆதி சங்கர பகவத் பாதாசாரியாரவர்கள் ஸ்ரீ சக்கிரரூபமாயும் விக்கிரகரூபமாயும் ஸ்ரீங்கேரியில் பீடமும் ஸ்தாபித்து கோவிலும் மடமும் நிர்மாணம்பண்ணினதாக சொல்லுகிறாள். அப்படிக்கு ஸ்ரீங்கேரியில் ஸ்ரீசக்கிரபிரதிஷ்டை செய்திருப்பது இல்லை. காஞ்சீபுரத்தில் ஆதிசங்கரபகவத் பாதாசாரியரவர்கள் கண்டகசிலையில் ஸ்ரீசக்கிரபிரதிஷ்டை செய்திருக்கிறதாய் மாத்திரத்தில் ரிப்ளை 1-வதுகலத்தில் ஒப்புக்கொண்டிருந்தபோதிலும் ஆன்சரில்காட்டியபடி சர்வக்ஞபீடமாகிய காமகோடிபீடம் ஸ்ரீ சக்கிரரூபமாக ஸ்தாபித்திருப்பது முதலான சங்கதிகள் நிஜமென்றும் ரிப்ளை சங்கதி சரியல்லவென்றும் கிரந்தரீதியாய் அறிவிக்கிறது எப்படியென்றால்:— ஆதி சங்கரபகவத் பாதாசாரியாரவர்கள் அவதாரம்பண்ணி காசீ, பதரீகேதாரம், ஜகன்னாதம் முதலான க்ஷேத்திரமார்க்கமாய் முக்திக்ஷேத்திரமாயிருக்கிற காஞ்சீபுரத்துக்குவந்து ஸ்ரீகாமாக்ஷி அம்மன் சந்நிதியில் வசின்யாதி யஷ்டாங்க வாக்தேவதையள் என்கிற சரசுவதிபிம்பங்களுடனே சகலலோகக்ஷேமகரமாயும் சர்வசித்தியாபிரதமாயுமிருக்கிற ஸ்ரீசக்கிர யந்திரத்தை கண்டகசிலேயில் உத்தாரணம்

பண்ணி சர்வக்ஞபீடமாகிய காமகோடிபீடம் ஸ்தாபித்து கோவிலும் மடமும் நிர்ம்மாணம் பண்ணினதுமல்லாமல் தம்முடைய முக்கிய சிஷியரான மண்டனமிசிரர் என்கிற சுரேசுவராசாரியாரவர்களை ஷெ சர்வக்ஞபீடமாகிய காமகோடிபீடத்துக்கு அதிபதியாய் நேமித்து கைலாசத்திலிருந்து கிடைத்த 5 லிங்கங்களில் தாம் பூசை பண்ணி வந்தமுதல் லிங்கமான யோகலிங்கமென்கிற சந்திரமௌளீசுவரசுவாமியை பூசை பண்ணிக்கொண்டு வரும்படி கொடுத்தாரென்றும் சிவரகசிய புராணத்தை அனுசரித்திருக்கிற ஆசாரிய விஜயமென்கிற கிரந்தத்தில் 65-வது பிரகரணத்தில் வியக்தமாய்ச சொல்லியிருக்கிறதுந்தவிர, ஷெ கிரந்தம் 67-வது பிரகரணத்தில் சுரேசுவராசாரியரவர்கள் ஆசேது ஹிமாசல தேசங்களிலுள்ள ஜனங்களுக்கு வர்ணாசிரமதர்ம்மங்களைப் பரிபாலனம் பண்ணும்படியாயும் அந்தந்த வர்ணானுகூலமான ஞானவித்தையை உபதேசம்பண்ணும்படியாய் ஜகத்குருவாக காஞ்சீபுரத்தில் நேமித்தாரென்றும் அவ்விடத்திலேயே ஷண்மத ஸ்தாபனமும் பண்ணினாரென்றும் ஸ்பஷ்டமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

இதுவும் தவிர ஷெ. சுரேசுவராசாரியார் ஆதி சங்கரபகவத்பாதாசாரியா ரவர்களுக்கு சமானமாயும் வார்த்தீககிரந்தங்கள் செய்தவராயுமிருக்கிறபடியினாலே காஞ்சீபுரத்தில் தம்முடைய அதிஷ்டானத்திலே ஸிம்மாஸனாபிஷிக்தராய் காமகோடி பீடாதிபதியாக நேமித்ததாய் ஆன்சரில் கண்டெழுதினதை வாதியோசித்து ஷெ சுரேசுவராசாரியார் இந்த பீடம் முக்கியபீடமும் அந்த பீடாதிபதி அவர்களே ஸ்ரீ சக்கிரதாடங்க பிரதிஷ்டை செய்யவேண்டிய பாத்தியமுள்ளவர்களானத்தினாலே அதை தான் ஒப்புக்கொள்ளக் கூடாதென்று ஷெ சுரேசுவராசாரியாரை ஸ்ரீங்கேரியில் சாரதாபீடஸ்தராக நேமித்ததாய் ஆன்சருக்குப் பிறகு ரிப்ளையில் சொல்வது சரியல்ல. அப்படிக்கிருந்தால் பிராதில்தானே அகத்தியமாய் எழுதியிருக்கலாம்; அப்படிக்கு இல்லை. இதுவுமல்லாமல் வாதி ரிப்ளையில் சொல்லுகிற சிவரகஸ்யமென்கிற கிரந்தத்தில் 9-வது அம்சம் 16-வது அத்தியாயத்தில் ஆதிசங்கரபகவத்பாதாசாரியரவர்கள் கலி

யுகம் பிறந்து 2000வருஷத்துக்கு பிற்பாடு அவதாரம்பண்ணி 32வருஷம் இருந்தாரென்றும் கைலாசத்திலிருந்து கிடைத்த யோகலிங்கம், போகலிங்கம், வரலிங்கம், முக்திலிங்கம் மோக்ஷலிங்கம் இந்த 5 லிங்கங்களை அடைந்து மிசிருஷிகளைஜெயித்து காஞ்சீபுரத்துக்குவந்து காமகோடி பீடஸ்தாபனம் செய்து சுரேசுவராசாரியாருக்கு பீடாதிபத்தியம் கொடுத்து அதின்பிறகு அவடத்திலேயே முக்தியடைந்தாரென்று சொல்லியிருக்கிறதே தவிர வாதி ரிப்ளையில் சொல்லுகிறபடி ஷை சிவரகசியத்தில் ஸ்ரீங்கேரி சங்கதி எவ்வளவும் சொல்லியிருக்கவில்லை.

ஆதி சங்கரபகவத் பாதாசாரியரவர்கள் பதரிகேதாரத்தில் சுவசரீரத்துடன் கைலாஸத்தை அடைந்தாரென்றும் ஷை சிவரகசயத்திலாவது ஆசாரிய விஜயத்திலாவது மார்க்கண்டேய சம்ஹிதை கிரந்தத்திலும் சொல்லிருப்பதில்லை.

ஆதி சங்கரபகவத்பாதாசாரியாரவர்களுக்கு 5 லிங்கம் கிடைத்ததாக ரிப்ளையில் ஒப்புக்கொள்ளுகிற வாதி அதுகள் சாரதாபீடத்துக்கு 2-வது ஆகிய போகலிங்கத்தை கொடுத்ததாயும், சிதம்பரம் கோவிலுக்கு 5-வது மோக்ஷலிங்கத்தை கொடுத்ததாய் மட்டும் சொல்லி மற்ற 3 இலிங்கங்களில் இன்னின்னதை இன்னின்னிடத்துக்கு கொடுத்தார் என்பதை சொல்லாமல் மறைத்திருந்தபோதிலும் ஆதிசங்கர பகவத் பாதாசாரியாரவர்கள் தாம் பூசைபண்ணி வந்த முதலாவது யோகலிங்கத்தை காமகோடி பீடாதிபதி அவர்களாகிய சுரேசுவராசாரியாரவர்களை பூசை பண்ணிக்கொண்டு வரும்படி கொடுத்தாரென்றும் ஆசாரியவிஜயம் 65-வது பிரகரணத்திலும் மற்ற 2 இலிங்களில் முக்திலிங்கத்தை கேதாரக்ஷேத்திரம் கோவிலுக்கும் வரலிங்கத்தை நீலகண்ட க்ஷேத்திரம் கோவிலுக்கும் கொடுத்தாரென்றும் மார்க்கண்டேய சம்ஹிதை 72-வது கண்டம் 7 - வது, 8 - வது பரிசுபந்தத்திலும் விவரமாய் சொல்லியிருக்கிறது.

சிஷியாளில் சுரேசுவராசாரியாரை காமகோடி பீடத்திலும் பத்மபாதரை சாரதா பீடத்திலும் மற்ற சிஷியாளை இதர மதோத்

தாரணம் பண்ணும்படியாயும் ஆக்கியாபித்தாரென்றும் ஷை ஆசாரிய விஜயத்திலும் மார்க்கண்டேய சம்ஹிதையிலும் சொல்லியிருக்கிறதினாலே இப்படிக்கு முக்கியமாயிருக்கிற சிவரகஸியம் புராணம் முதலான பிராசீனமாயிருக்கிற பிரவுட கிரந்தங்களுக்கு விருத்தமாயிருக்கிற மடாம்நியாயம் என்று ஒரு கிரந்தம்போல் வாதி ரிப்ளையில் 2-வது கலத்தில் காட்டி சிஷியனுடைய க்ஷேமத்தைக் குறித்துச் சொல்வது சரியல்லவென்றும் விசிதமாகும்.

பின்னும் வாதி போகலிங்கமென்கிற சந்திரமௌளீசுவர சுவாமியை ஸ்ரீங்கேரி சாரதாபீடத்துக்கு கொடுத்ததாக சொல்லுகிறவாள் அந்தவிஷயம் இன்ன கிரந்தத்தில் இன்ன இடத்தில் சொல்லியிருக்கிறதென்று காட்டாமல் மறைத்து இருந்தபோதிலும் ரிப்ளையில் சொல்லுகிற சிவரகசியம் பவிஷ்யோத்தரபுராணம் சங்கரவிஜயமென்கிற கிரந்தங்களில் அது சங்கதி சொல்லியிருப்பதுமில்லை. ஷை போகலிங்கத்தை கொடுத்ததற்கு சொல்லியிருக்கிற ஷை ஆசாரியவிஜயம் மார்க்கண்டேய சம்ஹிதையை ரிப்ளையில் காட்டினால் அதுகளில் சுரேசுவராசாரியரை காஞ்சீ காமகோடிபீடத்தில் அதிபதியாக நேமித்து போகலிங்கத்தை கொடுத்திருப்பது ருசு வெளியாய்விடுமென்று வாதி யோசித்து ஷை கிரந்தங்களை மறைத்து போகலிங்கத்தை ஸ்ரீங்கேரிக்கு கொடுத்தாரென்றுமட்டும் சொல்லியிருக்கிறார்களென்றும் ஷை கிரந்தங்களை பார்வையிடும்போது விசிதமாகும்.

ஆதி சங்கரபகவத் பாதாசாரியாரவர்கள் பதரீகேதாரத்தில் சுவசரீரத்துடனே கைலாசத்தை அடைந்தாரென்று ரிப்ளையில் சொல்லுகிறாள் அது சரியல்ல, காஞ்சீபுரத்தில் சித்தி அடைந்தாரென்று சிவரகசியத்தில் சொல்லியிருக்கிறதும் தவிர ஆசாரிய விஜயம் 74-வது பிரகரணத்தில் காஞ்சீ காமாக்ஷியம்மன் ஆலயத்திற்குள் மேல்புரத்தில் நிர்விகல்ப்ப சமாதியினாலே சர்வவியாபக சைதன்னியராயும் அகண்டானந்தசுரூபராயும் அவிடத்திலேயே அயக்கிமாயிருக்கிறாரென்று தத்காலத்தில் சிஷியராய் கூடயிருந்த அனந்தானந்தகிரி சுவாமியளாலே செய்யப்பட்டிருக்கிற ஆசாரியவிஜயம்

யென்குற கிரந்தத்தில் சவிஸ்தாரமாயும் சொல்லியிருக்கிறது. இது வும் தவிர ராஜசூடாமணிதீக்ஷியம் என்கிற சங்கராபியுதய கிரந்தம் 7-வது 8-வது சுவர்க்கத்தில் ஆதிசங்கரபகவத்பாதாசாரியாரவர்கள் காஞ்சீபுரத்தில் ஸரஸ்வதியை வாதத்திலே ஜெயித்து காமகோடி பீடமென்குற ஸ்ரீசக்கிர பிரதிஷ்டையும் செய்து ஆலயம் மடம் தம் முடைய வேதாந்தம் சித்தாந்தம் விளங்கும்படிக்கு சிஷியரை நேமித் தும் ஸ்ரீகாமாக்ஷி அம்மன் சரணங்களில் அய்க்கியமானதாக சொல்லி யிருக்குறது.

இப்படிக்கு மேல்காட்டியபடி நாலு கிரந்தங்களினாலேயும் இன் னும் பிரமாண்ட புராணம் ருத்திரகோடி சம்மிதைமுதலான அனேக கிரந்தங்களினாலேயும் ஆதிசங்கரபகவத்பாதாசாரியாரவர்கள் காஞ்சீ புரத்திலேயே முக்தி அடைந்தாரென்றும் அது சர்வஞ்நபீடமென் றும் சொல்லியிருக்குறதுந்தவிர அதற்கு ருசுவாக காஞ்சீ ஸ்ரீகா மாக்ஷி அம்மன் கோவிலில் ஆதி சங்கரபகவத் பாதாசாரியாரவர்க ளுடைய விக்கிரகம் பிரத்தியக்ஷமாயிருக்குறது ஆகையால் ஷை காஞ்சீயில் ஆதிசங்கரபகவத் பாதாசாரியாரவர்களுடைய அதிஷ் டானத்தில் சிம்மாசனாபிஷிக்தராயிருக்குற பரம்பரைகளுக்கே ஸ்ரீ சக்கிற பிரதிஷ்டாபகத்துவமே தவிர மத்தவர்களுக்கு இல்லை என் பது விசிதமாகும்.

2-வது. எந்த மடாதிபதிகளும் தங்கள் தங்கள் மடத்துக்கு உண்டாகிய பிருதாவளிகளுடன் சிஷியாளுக்கு முகருடன் ஸ்ரீமுக பத் திரிகைகள் எழுதி அனுப்பிவிக்குறது மாமூலவழக்கமாய் நடந்து வருகுறது அந்தபடியே காமகோடி பீடாதிபதிகளால் ராஜாக்கள் முதலான அனேக சிஷியாளுக்கு பீடம் உண்டான நாள் முதல் அனேக ஸ்ரீமுகங்கள் அனுப்பப்பட்டிருக்கிறதில் காஞ்சீபுர க்ஷேத் திரத்தினுடைய விசேஷமும் ஆதி சங்கர பகவத் பாதாசாரியா ரவர் களுடைய அதிஷ்டானத்தில் சிம்மாஸனாபிஷிக்தருயிருக்குற பரம் பரைகள் என்றும் சகல புவன சக்கிற பிரதிஷ்டாபக ஸ்ரீசக்கிர பிர திஷ்டாவிக்கியாத யசோலங்கிருதாளென்றும் கண்டிருக்குறது இது னலேயே ஸ்ரீ சக்கிரதாடங்க ஜீர்ணோத்தாரண பாத்தியம் முதல்

பிரதிவாதி அவர்களுக்கே தவிர மைத்தயாருக்கும் இல்லை என்று விசிதமாகும்.

ஸ்ரீங்கேரியிலிருந்த அபினவோத்தண்ட நரசிம்மபாரதி என்குற எதி இதற்கு 50 வருஷமாகுற ஆனந்தஞு சைத்திர சுத்த பஞ்சமியில் முதல் பிரதிவாதியவர்களுடைய மடத்து சிஷியாளுன சென்னப்பட்டணம் றேவு சீதாராமய்யனுக்கு தன் மடத்து சகல சொத்துகளையும் பரசுராமபாவ் சைன்னியர் வந்து அபகரித்துக்கொண்டு போனதாய்க்கண்டு ஒரு ஸ்ரீமுகமும்; அதின்பிறகு குரோதனஞு மார்க்கசிறசுத்த அஷ்டமியில் காஞ்சீ குருமூர்த்தி அய்யருக்கு ஸ்ரீங்கேரி சச்சிதானந்தபாரதி என்குற எதி காஞ்சீபுரம் அம்மன் சேவார்த்தமாய் வருகுறதாகக் கண்டு ஒரு ஸ்ரீமுகமும்; எவிளம்பிஞு மார்க்கசிறபகுள தெசிமியில் திருச்சிறுப்பள்ளி சவுகார் மாணிக்கமுதலியார் குமாரர் பாலசுப்பிரமணிய முதலியாருக்கு தாம் சேதுயாத்திரைக்காக இந்த மார்க்கமாய் வருகிறதாக வாதிக்கு எஜமானென்று சொல்லுகுற சன்னியாசியால் ஒரு ஸ்ரீமுகமும் மேற்படிஞு புஷியபகுள திருதியையில் ஆன்சரில் காட்டிய தஞ்சாவூர் மகாராஜா அவர்கள் அரண்மனேயில் முதல் பிரதிவாதியவர்களுடைய மடத்து மத்தியஸ்தர் அவர்களாகிய ராஜம்பட்டர் என்குற ராமசந்திர தீக்ஷிதருக்கு சேதுயாத்திரைக்காக தான் அவடமார்க்கமாய் வருகுறதாகவும் தன்னுடைய மடத்து காரியஸ்தரான அநந்தாவதானியை அனுப்பியிருக்குறதாகவும் கூடிய ஒத்தாசை செய்விக்கவேணுமென்றும் கண்டு ஒரு ஸ்ரீமுகமும் அனுப்பியிருக்குறூர்கள். அதின் தலைவில் வித்தியாசங்கரர் யென்குற முகர் வைக்கப்பட்டிருக்கிறது. அதுகளில் வியாக்கியான சிம்மாசனுதீசுரராயும் வித்தியாசங்கரபாதபத்மாறுதகாளென்றும் பிருதாவளி கண்டெழுதப்பட்டிருக்கிறதே தவிர, றிப்ளை 4-வது கலத்தில் சொல்லுகுறபடி ஸ்ரீ சக்கிரபிரதிஷ்டாபனுசாரியா ரென்குற பிருதாவளிகண்டு இருக்கவுமில்லை. இதனுலேயே வாதி றிப்ளை 4-வது கலத்தில் ஸ்ரீங்கேரி மடத்து சுவாமிகள் ஸ்ரீசக்கிறபிரதிஷ்டாபனுசாரியாளென்குற பிருதுள்ளவாளென்று கண்டு எழுதியிருப்பது சுத்த பெறட்

டென்றும் வாதி வழக்கை யாதொரு விசாரணையுமன்னியில் தள்ளு படி செய்யவேண்டியது நியாயமென்றும் விசிதமாகும்.

மேலும் ஆதிசங்கரபகவத்பாதாசாரியாரவர்கள் ஸ்ரீங்கேரியில் சாரதாபீடம் ஸ்தாபித்ததாய் பிராதிலும், துவாரகையில் சாரதா பீடம் ஸ்தாபித்ததாயும் அதில் பதுமபாதரைசிஷியராக நேமித்த தாய் ரிப்ளை 2-வது கலத்திலும் சொல்லியிருக்குருள். சாரதாபீடம் யென்பது ஒண்ணே தவிர வேறில்லே. அப்படியிருக்க சாரதாபீடத் தில் பதுமபாதரை பீடாதிபதியாக நேமித்ததாக ரிப்ளெயில் உறுதி யாய் சொல்லுகுறதைக்கொண்டு தானே ஸ்ரீங்கேரியில் சுரேசுவரா சாரியாரை நேமித்ததில்லேயென்பதற்கு அதுவே போதுமான ருசு வாயிருக்குறது.

இதுவுந்தவிர ஸ்ரீமுகங்களில் வியாக்கியான சிம்மசனுதீசுவரர் யென்குற பிருதாவளிகண்டு யெழுதப்பட்டிருக்குறது எதுனுலே யென்ருல் ஆதிபகவத் பாதாசாரியாரவர்கள் செய்த வேதாந்த சூத் திர பாஷியத்துக்கு பதுமபாதர் யென்குற சிஷியரை பஞ்சபாதிகை யென்குற வியாக்கியானம் செய்தவருனபடியினுலேயும் அவரை சாரதாபீடத்தில் நேமித்ததினுலேயும் வியாக்கியான சிம்மாசனுதீசு வரர் யென்று கண்டெழுதிக்கொண்டு வருகுருர்களென்றும் இதினு லேயும் சுரேசுவராசாரியாரை ஸ்ரீங்கேரியில் நேமித்ததுபோல் ரிப் ப்ளெயில் சொல்வது கல்ப்பனேயே தவிர அது சரியல்ல.

இதுவுமன்னியில் ரிப்ளை 1-வது கலத்தில் கண்டபடி ஆதிபக வத்பாதரவர்கள் ஸ்ரீங்கேரியில் ஸ்ரீசக்கிர பிரதிஷ்டை செய்ததாக சங்கரவிஜயம், ஆசாரியவிஜயம், மார்க்கண்டேய சம்ஹிதை முத லான பிரசித்த கிரந்தங்களில் சொல்லவில்லே. சரஸ்வதி முதலான சகலதேவதைகளுக்கும் அதிதேவதையா யிருக்கிற ஸ்ரீ காமாக்ஷி அம்மனுக்கு (சக்கிரராஜ நிகேதனே) என்கிற பெயர் இருக்கிறபடியி னுலே அந்த அம்மன்யிருக்கிற ஸ்தானத்திலேயே ஸ்ரீசக்கிரபிரதிஷ் டை செய்ய தகுமே தவிர அதற்குத் தாழ்மையாயிருக்கிற சரசுவதி பீடத்திலே ஸ்ரீசக்கிரபிரதிஷ்டை செய்ததாக சொல்வது லோக விருத்தமாயும் சாஸ்திரவிருத்தமாயும் இருக்கிறது.

3-வது. சாரதாபீடத்துக்கு நேமித்த பத்மபாதர் பல்லாக்கு முதலான பிருதுகள் யாதொன்றுமில்லாமல் சாத்வீகராயும் வேதாந்த பாடம் சொல்லிக்கொண்டு வருகையில் அவருடைய சிஷியபரம்பரையில் சிலநாளைக்குப் பிறகு அந்த பிரதேசங்களிலிருந்த இலிங்கதாரிகளுடைய துவேஷத்தினலே ஷை மடம் அடியோடே எடுபட்டுப்போய் வெகுகாலத்துக்குப் பிறகு கிருகஸ்தராயும் வித்துவாம்சராயுமிருந்த மாதவாசாரியார் என்பவர் சந்நியாச ஆசிர்மம் பெற்றுக்கொண்டு அரணிய சம்பிரதாயம் உடைத்தான எதிகளிடத்தில் உபதேசம் பண்ணிக்கொண்டு அந்த சிஷிய பரம்பரையில் சேர்ந்த வித்தியாரண்ணியர் என்கிற எதி விஜயநகர மகாராஜாவுக்கு குருவாக ஏற்பட்டு அந்த ராஜாவினல் சகல ஐஸ்வரியத்தையும் அடைந்து அவர் ஷை ராஜாவினுடைய அவலம்பனத்தினல் எடுபட்டுப்போன ஸ்ரீரிங்கேரி மடத்தை உத்தாரணம்பண்ணி வித்தியாரண்ணியபுரமென்கிற அக்கிரகாரத்தை பிரதிஷ்டை பண்ணி ஷை மடத்துக்கு ஷை ராஜாவினல் பல்லக்குமுதலான பிருதுகள் உண்டுசெய்த ஷை மடத்துக்கு அபிமானியாக இருந்துகொண்டு வித்தியாசங்கரர் என்கிற முகரும் ஏற்படுத்தி இவ்விதமாயிருந்த வித்தியாரண்ணியருடைய பரம்பரை என்பது ரிப்பளை 23-வது கலத்தில் சொல்வதினலே வாதி எஜமான் ஆதி சங்கரபகவத் பாதாளுடைய பரம்பரையைச் சேர்ந்தவரல்லவென்று தெளிவாயிருக்கிறதும் தவிர, மேல்கண்டபடி ஸ்ரீங்கேரிமடத்தை ஷை வித்தியாரண்ணியரால் உத்தாரணம் செய்த காலத்துக்குப்பின்பு ஆதிபீடாதிபதி என்றும் லோககுருவென்றும் பெயருண்டானதாக ரிப்பளை 23-வது கலத்திலேயே சொல்லி இருப்பதினலேயும், வித்தியாசங்கரபாதபத்மாராதகரென்று அவருடைய ஸ்ரீமுகத்தில் கண்டிருப்பதினலேயும் வாதி எஜமான் வித்தியாரண்ணியராலே உண்டுபண்ணின துண்டுமடத்தார் என்பதற்கு போதுமான ருசுவாகிருக்கிறது.

4-வது. ரிப்பளையில் ஆதிபகவத்பாதரவர்கள் 3000 வருஷத்துக்குப்பின் விக்கிரமாதித்தன் ராஜரீகத்தில் அவதாரம்பண்ணி ஸ்ரீ அகிலாண்டேசுவரி அம்மனுக்கு தாடங்கபிரதிஷ்டை பண்ணினதாக

சொல்லுகிறுள். இப்போ, கலியுகம் பிறந்து 4945 வருஷமாகிறது. இதில் சென்றது கலியுகம் பிறந்து 3044-ம்௵ யுதிஷ்டிரருடைய சகம், அதின்பிறகு 135௵ விக்கிரமாதித்தன் ராஜரீகம், ஆககலியுகத்தில் 3179௵ போக அதின்பிறகு சாலிவாகனசகத்தில் 1766 ௵ ஆகிறது. ஆதிசங்கர பகவத்பாதாசாரியாரவர்கள் அவதாரம் பண்ணி 32 வருஷமிருந்து காஞ்சீயில் சித்தங்கதராளுரென்று சிவரகசியத்தில் சொல்லியிருக்கிறதுந்தவிர, ஆன்சர் 3-வது கலத்தில் 32௵ அவதாரம்பண்ணி இருந்தாரென்று எழுதியிருப்பதை வாதி ரிப்ளையில் ஆக்ஷேபிக்காமல் ஒப்புக்கொண்டிருக்கிறுர். தமிழ் 1708௵த்துக்கு முன் ஸ்ரீ சக்கிரதாடங்களை ஆதி சங்கர பகவத்பாதாசாரியாரவர்கள் ஸ்ரீ அகிலாண்டேசுவரி அம்மனுக்கு பிரதிஷ்டை பண்ணினதாக பிருதில் சொல்வதினுலே அடுத்த 1709-ம்௵ முதல் 32௵ கூட்டி பார்த்தாலும் 1740௵த்துக்கு உள்பட்டகாலத்தில் ஆதி சங்கர பகவத்பாதாசாரியரவர்கள் இருந்து ஸ்ரீ சக்கிர தாடங்கம் செய்தல்லவோ யிருக்கவேணும்? அப்படிக்கில்லாமல் விக்கிரமாதித்தன் ராஜரீகத்தில்தானே அவதாரம்பண்ணி முக்தியடைந்தவர்கள் பின்பு இருக்கவும், தாடங்க பிரதிஷ்டை செய்யவும், எப்படிக்கு கூடும்? இதனுலேயே ஷை தாடங்கம் பண்ணினகாலமே வாதி சொல்லுகிற ஸ்ரீங்கேரி யாருக்கு தெரியாதென்றும் வீணை துர்வழக்காடுகிறுள் என்றும் விசிதமாகும்.

5-வது. தஞ்சாவூர் மகாராஜாவவர்களிடத்துக்கு அனந்தாவதானி இடத்தில் ஸ்ரீமுகம் கொடுத்து அனுப்பினதை ரிப்ளையில் ஆக்ஷேபிக்காமல் ஒப்புக்கொண்டு ஷை அனந்தாவதானி தங்கள் மடத்துக்கு முக்கிய காரியஸ்தன் அல்லவென்றும், அவன் ஹேவிளம்பி௵ பால்குணசுத்த பிரதமை தினத்தில் ஆன்சரில் கண்ட விவரப்படிக்கு எழுதிக்கொடுத்த ஆதிரவுக்கு வாதி எஜமானனுடைய முகர் இருக்கவேணுமென்றும் ஷையாரை தள்ளுபடி செய்து இருப்பதாயும் ரிப்ளை 13-வது கலத்தில் சொல்லியது வாதியினுடைய தெரியாத்தனமாகயிருக்கிறது.

எப்படியென்றால், வாதியின் எஜமானருடைய முத்திரை யுள்ள ஸ்ரீமுகத்தைக் குறித்து களம்பொருந்திய மகாராஜா அவர் களுக்கு எப்போ அனுப்பப்பட்டதோ அதனாலேயே அவர் போது மான முக்கிய காரியஸ்தரென்று சொல்லவும் அப்படிப்பட்ட அனந்தாவதானி எழுதிக்கொடுத்த ஆதிரவை வாதியின் எஜமான் நிராக்ஷேபமாய் தாம் எழுதிக்கொடுத்ததுபோல ஒப்புக்கொள்ள கடமையாயும் அதற்கு ஷை ஸ்ரீமுகமே ருசுவாயிருப்பதை யோசி யாமல் இப்போ சமயானுசாரமாய் அவரை தள்ளிப்போட்டது போல் சொல்லுகிற கல்பனை ஷை ஆதிரவை பலஹீனப்படுத்த மாட்டாது. இதற்குமுன் ஆன்சரில் கண்டபடி அபினவோத்தண்ட வித்தியாரண்யபாரதி வழக்கமில்லாத சில செய்கைகளை நடப்பி வைத்து அதைப்பற்றி முன்னமே அவர் உடம்படிக்கை எழுதிக் கொடுத்திருக்கிறபடியால் இந்த வாதியின் எஜமானரும் ஒருவேளை அப்பேர்க்கொத்த செய்கையில் பிரவேசிக்க இடமில்லாமல் ஷை அனந்தாவதானி இடத்தில் ஆதிரவு வாங்கப்பட்டதினாலே முதல் பிரதிவாதி அவர்களுடைய அக்கிரதாம்பூலம் முதலான சுதந்திரம் பலப்படத்தக்கதே தவிர, வேறில்லை. இவ்வளவு தாத்பரியம் தெரி யாமல் ரிப்ளை 5-வது கலத்தில் எழுதிய ஷை சங்கதிக்கு இதைப் பார்க்கிலும் விஸ்தாரித்து சொல்லவேண்டியதில்லை.

6-வது ஆன்சரில்கண்ட 9-வது, 10-வது கலத்தில் சொல்லிய கர்ணாடக தேஸ்தாவேஜிகளும் கும்பினி துரைத்தனத்தாரால் பிறந் திருக்கிற ரகதாரி முதலான ஆதிரவுகளும் மேஜிஸ்திரேட்டு உத்தி ரவுகளும் ஏதோ சாதாரணமான மனுஷியாளுக்கு பிறக்கப்பட்டது போல் ரிப்ளை 14-வது கலத்தில் சொல்லிருக்கிறது. அப்படிக் காணல் முன் சர்க்கார் தீர்மானப்படிக்கு வாதியின் எஜமான் எந்த மடத்து வாசல் வழியாயும் வரக்கூடாதென்று தடுத்து புறந்த மேஜிஸ்திரேட்டு உத்திரவை ஆக்ஷேபித்து ரத்துசெய்துக்கொள்ளா மல் அந்த உத்திரவுப்படிக்குள்பட்டு நடந்திருப்பதினாலே அது முக்கியமானதென்று அவர் ஆசேது ஹிமாசல தேசங்களுக்கும் ஜகத்குருவல்லவென்றும் வாதி சொல்லுகிறது கல்பனையென்றும்

நிச்சயிக்க அதுவும் போதுமான ருஜுவாக யிருக்கிறது. மேலும்
இந்த ரிஜாயிண்டரில் காட்டிய முக்கியமான அநேக கிரந்தங்களி
னாலே காஞ்சீ காமகோடி பீடாதிபதி அவர்களை சங்கராசாரிய
ரென்றும் அவர்களை ஆசேது ஹிமாசல தேசங்களுக்கு ஜகத்குரு
வென்றும் சொல்லியிருப்பதற்கு காமகோடி பீடாதிபதி என்கிற
பீடம் பரம்பரையக் கண்டு அதிக விசேஷமான மகிமை உடைத்தா
யிருக்கிற கர்ணாடக காலமுதலுண்டான ஆதிரவுகளும் ரதாரிகளும்
ஒத்ததாயிருக்கிறது. அப்படிக்கொற்ற ஆதிரவுகளை சாதாரண
மனுஷியாளுக்கு கொடுக்கிற தொப்பந்தம் புறந்ததென்று ரிப்ளை
14-வது கலத்தில் சொல்லியது சரியல்ல.

7-வது. ஸ்ரீ சக்கிர தாடங்கம் ஜீர்ணோத்தாரணம் செய்யவேண்
டிய பாத்தியம் முதல் பிரதிவாதி அவர்களதாயிருக்க அதைக்
குறித்து வாதி கலெக்டர் துரையவர்களிடத்தில் வீணாய் அர்ஜீ முத
லானதுகள் கொடுப்பித்து ஆக்ஷேபித்ததினாலே அதைப்பற்றி சீவில்
கோர்ட்டுக்குப போகும்படிக்கு அவர்களுக்கு உத்திரவு செய்திருந்த
போதிலும் பிறகு தேவஸ்தானங்களுக்கு சர்க்காரிலிருந்த அதிகாரத்
தை தர்மகர்த்தரவர்களுக்கு முக்தியார்நாமா கொடுத்துவிட்டதும்
தவிர; அதின்பிறகு ஷை தாடங்கம் முதலான சங்கதிகளைப்பற்றி
யாதொரு தவக்கமும் வராமல் நடப்பிக்கவேணுமென்றும் இஸ்தி
யார் முதலானதுகளை ரத்து செய்திருக்கிறதாயும் மேஜிஸ்திரேட்டு
துரையவர்களால் 1844௵ சூலை௴ 27௳ உத்திரவு அனுப்பினத்
தோடே, அதற்கு முன் பிறந்ததாய்ச் சொல்லுகிற கலெக்டர் துரை
யவர்களுடைய சகல உத்திரவுகளும் உபயோகமற்றதாய் இருக்
கச்சே அதை ஒரு ஆதாரமாக ரிப்ளையில் சொல்லுவது செல்லாது.
அதன்பிறகு ஸ்ரீ சக்கிரதாடங்கம் வெகு ஜீர்ணமாயிருந்ததினாலே
பூசைக்கு தவக்கம் நேரிடாமல் ஜீர்ணோத்தாரணம் செய்யவேண்
டியதாக அகத்தியம் நேரிட்டு 1844௵ டிசம்பர்௴ 17௳யுள்ள
மனுவில்கண்டபடிக்கும் ஆன்சர் 13-வது கலத்தில் கண்டபடிக்கும்
ஸ்ரீ சக்கிரதாடங்கங்களை ஜீர்ணோத்தாரணம்செய்ய ஆரம்பித்து கிரம
மாய் மந்திர சாஸ்திரப்படிக்கு கலச ஸ்தாபிதம் செய்து ஆகரிஷித்

துக்கொண்டு அதற்கு செய்யவேண்டிய நவரத்தினவேலைகளையும் தங்கவேலைகளையும் நடப்பித்து பலப்படுத்தி சம்யோரோக்ஷணை செய்து அம்மனுடைய பூஜைக்கு குந்தகமில்லாமல் சமர்ப்பித்து அதை பூரணகளையுடன் தேவதாசான்னிதியமாயும் இந்துஜனங்களனைவரும் அது சரியென்று மெச்சிக்கொண்டு இருக்கச்சே ரிப்ளை 17-வது கலத்தில் ஒரு இராத்திரியில் திருட்டுத்தனமாய் ஜீர்ணோர்த்தாரணம் செய்ததாக பெறட்டாயும் அது பூஜைக்கு யோக்கியமில்லையென்றும் சொல்லியதெல்லாம் உபயோகமற்றதாயும் கிரமமாயும் நடந்த இந்த காரியத்துக்கு விஞ்ஞன துர் ஆக்ஷேபனையாயுமிருக்கிறது. ஷை தாடங்கப்பிரதிஷ்டை - கிரமப்படிக்கும் மந்திர சாஸ்திரப்படிக்கும் சரியாய் நடவாமலிருந்தால் அதை சகலமான இந்துஜனங்களும் ஷை கோவில் ஸ்தளத்தார் பூசை செய்துவருகிற அர்ச்சகாள் முதலான சகலபரிஜனங்களும் ஒப்புக்கொள்ளுவார்களா? இது சங்கதிகளை வாதி கொஞ்சமேனும் யோசிக்காமல் தாடங்க ஜீர்ணோத்தாரணம் செய்திருப்பதைக் குறித்து தூஷணையாய் சொல்வதை யோசித்தால் துராங்காரத்தினாலே எழுதியிருக்கிறானென்பது ஸ்பஷ்டமாய் விசிதமாகும்.

8-வது. ரிப்ளை 3-வது கலத்தில் இதற்கு 148௵த்திற்கு முந்தின தாது௵த்தில் தாடங்கம் துரஸ்து செய்ய அகோபல சோமயாஜியை அனுப்புவித்திருக்கிறதாயும் அவரைக் கொண்டு செய்விக்கச்சொல்லி அப்போ அதிகாரம் செய்த நஞ்சராஜய்யர் ஜெம்புகேசுவரம் மடத்தில் சிக்க ஐய்யர் என்று யாரோ காரியஸ்தன் இருந்ததாயும் அவன்பேருக்கு மேற்படி௵ மார்க்கசீரிஷ தசமியில் உத்திரவு அனுப்பி இருக்கிறதாகவும் சொல்லுகிறார்கள். ஆன்சரில்கண்டபடி இதற்கு 159௵மான அக்ஷய௵த்தில் கர்னாடக ராஜரீகத்தில் ஷை தாடங்கம் ஜீர்ணோத்தாரணம் நடந்திருப்பதற்கு சர்க்காரில் தேவஸ்தானகணக்கில் இருக்கிறது. ஷை தாது௵மானது அக்ஷய௵த்திற்கு 11௵ பிற்பட்டதாக இருக்கச்சே, அந்த தாது௵த்தில் ஷை தாடங்கம் ஜீர்ணமாயிருப்பதுபோல் நஞ்சராஜய்யரால் எவ்விதமாய் உத்திரவு பிறப்பிக்கக்கூடும். இதை

யோசித்தால் ஷை உத்திரவு கல்பனேயென்று விசிதமாகும். பின்னும் இதற்கு 80ஹூத்துக்கு முன்னை பிரமாதிஹூ சித்திரைமீ 16உ ஜெம்புகேசுவரம் அர்ச்சகாள் முதலானவர்கள் ஸ்ரீங்கேரி அபிநவ சச்சிதானந்த பாரதி என்கிற எதிக்கு தாடங்கம் ஜீர்ணோத்தாரணம் செய்யவேணுமென்று விக்ஞாபனப்பத்திரிகை எழுதிக்கொண்டிருக்கிறதாகவும் அதற்காக ஷை எதி இவடம் வந்து நவாபு வாலாஜா அவர்களுக்கு அறிவித்துக்கொண்டதற்கு தாடங்கத்தை துறஸ்து செய்விக்கும்படி தேவஸ்தானம் அதிகாரிகளுக்கு உத்திரவு அனுப்பியிருக்கிறதாய்க் கண்டு சயன்முகருடனே ஷை வாலாஜா அவர்கள் இனயித்துநாமா அனுப்பியிருக்கிறதாக கண்டிருக்கிறுளே தவிர அந்த இனயித்துநாமாவின் ஹூ, மீ, உ இன்னதென்று ரிப்ளேயில் காண இல்லே. ஆன்சரில் குறித்தபடி ஷை பிரமாதிஹூத்துக்கு முன்னை இதற்கு 88ஹூமாகிற ஈசுவரஹூத்தில் ஸ்ரீசக்கிர தாடங்க ஜீர்ணோத்தாரணம் செய்ததற்கு சர்க்காரில் தேவஸ்தான கணக்கிருக்கச்சே அதற்கு பின் ஷை ஸ்தளத்தாரால் தாடங்க ஜீர்ணோத்தாரணம் செய்ய வரவேணுமென்று எவ்விதமாய் விக்ஞாபன பத்திரிகை எழுதிக்கொண்டிருக்கவும் ஷை எதி இவடம் வரவும் மேல்கண்டபடி இனயித்துநாமா பிறக்கவும் எப்படிக்கு நடந்திருக்கும் மேல்கண்ட வருஷங்களுடைய தேவஸ்தான கணக்கு சுருணேகளே கலெக்டர் அவர்கள் மூலமாய் கோரட்டாரவர்கள் வரவழைத்து பார்வையிட்டால் மேல்கண்ட விக்ஞாபன பத்திரிகை இனயித்துநாமா இதுகள் கல்பனே என்றும் அப்படிக்கு ஸ்ரீங்கேரி எதிகள் எப்பவும் ஜீர்ணோத்தாரணம்செய்ததே இல்லேயென்றும் மடத்தில்கணக்குமிருப்பதாக ரிப்ளேயில் சொல்வது கல்பனேயென்றும் விசிதமாகும். வெகு மகிமையாயும் தேவதாஸான்னித்தியம் உள்ளதென்று பிராதில் ஒப்புக்கொள்ளுகிற தாடங்கத்தை ஆதிசங்கரபகவத்பாதாசாரியாரவர்களுடைய பரம்பரையில் சேர்ந்த ஸ்ரீ சக்கிர பிரதிஷ்டாபனுசாரியாரான காமகோடி பீடாதிபதியவர்களாலே நடப்பிவிக்கப்பட்டிருப்பதை ஆரோ ஒரு சாதாரண மனுஷியாளில் சேர்ந்த அகோபல சோமயாஜியைக்கொண்டு ஷை ஸ்ரீசக்கிரதாடங்கத்தை துறஸ்து

செய்யும்படி அனுப்பவும் அவன் செய்யவேண்டிய காரியத்தைக் குறித்து அதிகாரிகளுக்கு நஞ்சராஜய்யரால் உத்திரவு அனுப்பவும் எப்படிக்கு கூடும்? ரிப்ளை 3-வது கலத்தில்கண்ட தாது௵த்தில் நஞ்சராஜய்யருடைய ராஜரீகமுமல்ல.

9-வது. ரிப்ளை 6-வது கலத்தில் காட்டிய முதல் பிரதிவாதி அவர்களுடைய இந்த சுபா அரியமங்கலம் மகேந்திரமங்கலம் இந்த 2 கிராமங்களில் மான்னியம் உண்டான நாள்முதல் கும்பினி ஜப்தி வரையிலும் அதன்பிறகு நாளதுவரையிலும் முதல் பிரதிவாதி அவர்களுடைய பாரம்பரையின் அனுபோகமும் சுவாதீனமாயும் இருக்கச்சே அதுகள் ஸ்ரீங்கேரி மடத்துக்கு விடப்பட்டதென்று ரிப்ளையில் சொல்வது பிரத்தியக்ஷமான பொய்யாயிருக்கிறது. அது நிஜமானால் ஷெ கிராமங்களை ஷெ ஸ்ரீங்கேரியார் சுவாதீனப்படுத்திக்கொண்டு அவர்கள் அனுபோகத்திலல்லவோ இருக்கவேணும்? அப்படியில்லாமல் முதல்பிரதிவாதி அவர்களுடைய அனுபோகத்திலிருப்பதினாலேயே ஷெ கிராமங்களுக்காக முதல்பிரதிவாதி அவர்களிடமிருக்கிற தஸ்தாவேஜிகளின் விபரத்தை இவ்வழக்கில் சொல்ல வேண்டியது அவசரமில்லை.

10-வது ஜெம்புகேசுவரம் ஸ்தளம் உண்டாகி 64 சதுர்யுகமாயிற்றென்று ஸ்தளபுராணத்தில் சொல்லியிருக்கிறது. ஆதிசங்கர பகவத்பாதாசாரியார் அவதாரம்செய்து இப்போதைக்கு 2000௵மாகிறது. அவர்களால்தானே ஸ்ரீ சக்கிரபிரதிஷ்டைகளும் மடங்களும் செய்ததே உபய கக்ஷியாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்க அதற்கு வெகு காலத்துக்குமுன் உண்டான ஸ்தளபுராணத்தில் 18 மடம் கட்டியிருக்கிறதாயும் அகோரசிவாசாரி என்கிற எதியினுடைய மடத்தை ஸ்தளத்தாரால் 148 ௵த்துக்கு முன்னே ஸ்ரீங்கேரி மடத்தாருக்கு கொடுத்ததாயும் அவர்கள் மராமத்து செய்திருப்பதுபோலவும் சிலரை குடி வைத்ததுபோலவும் நிராதரவாக ரிப்ளையில் சொல்வது முழுப்பொய்யே தவிர நிஜமல்ல. ஒரு எதியினுடைய மடத்தை மற்றொருவருக்கு கொடுத்துவிட ஸ்தளத்தாருக்கு எப்படி பாத்தியமிருக்கக்கூடுமோ அதை, கோர்ட்டாரே கவனிக்க

வேணும். ஷை ஜெம்புகேசுவரத்தில் முதல்பிரதிவாதி அவர்களு டைய அனுபோகத்திலிருக்கிற மடம் ஷை யோகீஸ்வரருடையது மல்ல.

11-வது. ஆன்சரில் கண்டபடி ஜெம்புகேசுவரத்திலிருக்கிற முதல் பிரதிவாதி அவர்களுடைய ஸ்ரீமடத்துக்கு ஷை கோவிலிலிரு ந்து அரிசி எண்ணெய் முதலான வருமானங்கள் நடந்து வருவதை யும் அதுகளை முதல் பிரதிவாதி அவர்களே அனுபவித்து வருவதை யும் வாதிக்கு மருதளிக்க வகையில்லாமல் ஷை ஜம்புகேசுவரம் கோவிலிலிருக்கிற சுத்துகோவிலுக்கு கொடுத்து வருகிறபடி வடக்கு மடத்து பிள்ளையாருக்கே ஷை வருமானங்கள் கொடுத்து வருவது போல் சொல்லுகிறார்கள். அப்படிக்கு ஷை மடம் சுத்துகோவிலைச் சேர்ந்ததுமல்ல. ஷை மடத்துக்கு வெகுகாலமாய் நடந்துவந்ததை இந்த சுபா கும்பினி ஜப்தியான ஆதியில் கலெக்டராயிருந்த வாலீஸ் துரையவர்கள் தேவஸ்தானங்களில் இனவழிக்காரர்களுக்கு கொடு த்துவந்த வருமானத்துக்காக ஏற்படுத்திய திட்ட கணக்கில் முதல் பிரதிவாதி அவர்களான ஸ்ரீசங்கராசாரிய சுவாமியவர்களுடைய மட த்துக்கு வருஷம் 1-க்கு நல்லெண்ணெய் அரிசி இதுகளின் கிரயம் பொன் 19, பணம் ஐந்தேவீச அரைவீசம் என்றும் ஏற்பாடுசெய்து அந்தப்படி கொடுத்து வருகிறதுந்தவிர 1233-ம் பசலியில் கலெக் டராயிருந்த பிரதிஷ்டன் துரையவர்கள் பின்பு ஏற்படுத்திய இனவழி கணக்கில் அரிசி எண்ணெய் இதுகளின் கிரயம் வருஷம் 1-க்கு பொன் 9, பணம் மூன்றேகாலே வீச அரைவீசம் என்று திட்டம் ஏற்படு த்தி அந்தப்படிக்கு முதல்பிரதிவாதி அவர்கள் மடத்துக்கு ஆன்ச ரில் கண்டபடி சேர்ந்துக்கொண்டு வருகிறது. இதை யோசித்தால் ஷை தாடங்க ஜீர்ணோத்தாரண பாத்தியம் முதல் பிரதிவாதி அவர் களுக்கே இருக்கிறதென்றும் அதற்காகவே அப்பேர்ப்பட்ட வருமா னங்கள் மிருசாக ஏற்பட்டு நடந்துவருகிறதென்பதை கோர்ட்டார வர்களே யோசித்துப் பார்த்தால் இப்பேர்க்கொற்ற மரியாதைகளை அடையாத வாதி எஜமானனுக்கு தாடங்க ஜீர்ணோத்தாரண பாத் தியம் எவ்விதமாக கிடைக்குமோ? அது சங்கதி விசிதமாகும்.

12-வது. இந்த ரிஜாயிண்டர் 1-வது கலத்தில் கண்ட கிரந்தப் படிக்கு காஞ்சீ காமாக்ஷி அம்மன் கோவில் ஆலயத்தில் ஸ்ரீ ஆதி சங்கரபகவத்பாதாசாரியாரவர்களால் ஜீர்ணோத்தாரணம் செய்வித்தும் குஹாவாவஸியாயும் ரகஸியமாயும் இருந்த ஸ்ரீகாமாக்ஷி அம்மனை பிரசித்தமுண்டாகும்படி ஸ்தாபித்தும் சர்வக்ஞபீடமென்கிற காமகோடி ஸ்ரீ சக்கிரபிரதிஷ்டையும் மடமும் நிர்மாணம் செய்ததினலே காமாக்ஷி அம்மனுக்கு காமகோடி என்று பெயரும் பிரசித்தமாய் உண்டாயிற்றே தவிர வேறில்லே. அதன்பிறகு மூகன் என்கிற ஊமையனுக்கு ஸ்ரீசங்கரபகவத்பாதாளுடைய அனுக்கிரகத்தினலே பேசும்படியான சக்தியுண்டானதின் பேரில் அவர் செய்த வேதாந்தத்தில் காமகோடி காமாக்ஷி என்று சொல்லியிருப்பது சகஜமாயிருக்கிறதே தவிர ரிப்ளை 8-வது கலத்தில் சொல்லியிருப்பது சரியல்ல.

13-வது. ஸ்ரீகாஞ்சியில் காமாக்ஷி அம்மன் சந்நிதியிலிருக்கிற ஸ்ரீசக்கிரம் கண்டகசிலேயிலிருந்தபோதிலும் அதுகளின் அஷ்டபந்தனம் சுத்து தளவரிசை விமானம் முதலானதுகள் ரொம்பவும் ஜீர்ணமாகயிருந்ததினலே ஷை ஸ்ரீசக்கிர ஜீர்ணோத்தாரணம்செய்ய வேண்டிய பாத்தியம் ஸ்ரீ காமகோடி பீடாதிபதியவர்களாகிய ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளவர்களுக்கே தவிர வேறே ஒருவரும் செய்யக்கூடாததானத்தினலே ஆன்சரில் கண்டபடிக்கு முதல் பிரதிவாதி அவர்கள் ஸ்ரீசக்கிரத்துக்கும் காமாக்ஷியம்மனுக்கும் களாகர்ஷணம் செய்து பாலஸ்தாபனம்பண்ணி ஷை விமானம் தளவரிசை முதலானதுகளுக்கு ஜீர்ணோத்தாரணம் செய்துவைத்து அஷ்டபந்தனம் முதலானதுகள் நடந்தபின் மந்திரோக்த்தமாயும் சாஸ்திரோக்த்தமாயும் ருத்துவிக்கள் அநேக பிராம்மணாள் வேதகோஷம் வாத்திய வாத்தியகோஷங்களுடன் காமகோடி பீடாதிபதியவர்களாகிய முதல் பிரதிவாதியவர்களே மகாபிஷேகம் செய்து ஸ்ரீசக்கிர ஜீர்ணோத்தாரணம் பண்ணியிருப்பதை வாதி இல்லேயென்று சொல்வதினலே அதற்காக சர்க்காரில் புறந்திருக்கிற தஸ்தாவேஜிகளேயும் தேவஸ்தானம் கணக்குகளேயும் கோர்ட்டார் பார்வையிடும்போது ஸ்ரீங்கேரி

யார் வீணான இந்த துர்வழக்கில் தங்களுக்கு ஹிம்சையை கல்ப்பித்துச் சொல்வது எடுபட்டுப்போகிறதென்று யோஜித்து காஞ்சீபுரத்தில் முதல் பிரதிவாதி அவர்களால் யாதொன்றும் நடந்ததில்லையென்று அனீதமான பொய்யை சொல்லுகிறுளென்றும் வாதியின் எஜமானருக்கு லோககுருத்துவ மிருந்தால் மேல்கண்டபடிக்கு லோகபிரசித்தமாய் காஞ்சீயில் ஸ்ரீசக்கிர ஜீர்ணோத்தாரணம் செய்வித்ததை அறிந்திருக்கிறவர்கள் ஆக்ஷேபிக்காமலிருந்ததைக்கொண்டே வாதியின் எஜமானர் நூதன துண்டுமடத்தை சேர்ந்தவரென்று ஒப்புக்கொண்டிருக்கிறுர்களென்பது கோர்ட்டாருக்கு ஸ்பஷ்டமாய்த் தெரிந்திருக்கலாம்.

14-வது. ஸ்ரீசக்கிரதாடங்கம் ஜீர்ணமாயிருப்பதை துரஸ்து செய்யவேணுமென்று மன்மதஹூ த்தில் ஜெம்புகேஸ்வரம் ஸ்தளத்தார் விக்ஞாபனம் எழுதிக்கொண்ட சங்கதியை ஆன்சரில் 5-வது கலத்தில் விவரித்திருக்கிறது. அதை வாதிக்கு மருதளிக்க வகையில்லாததிஞலே அதை உடனே செய்திருக்கலாம் என்றும் இதற்குமுன் 2 தடவைகளில் ஸ்ரீ காமகோடி பீடாதிபதி அவர்களால் ஜீர்ணோத்தாரணம் செய்திருப்பதற்கு அந்த காலங்களில் விக்ஞாபனப் பத்திரிகை வந்திருப்பதாய் சொல்லவில்லையென்று ரிப்ளை 10-வது கலத்தில் வீணாய்ச் சொன்னாலும் அப்படிக்கு நடந்திருக்கிறதுக்கு சர்க்காரிலிருக்கிற கணக்குமுதலானதுகளைப் பார்க்கிலும் விக்ஞாபனப்பத்திரிகை வேணுமென்றும் அவசரமில்லை.

15-வது. காமகோடி பீடாதிபதி அவர்களான ஸ்ரீ சங்கராசாரிய சுவாமியள் அவர்களுக்கு நாலுவர்ண ஜாதியுள்ள சகல சிஷியாளும் அக்கிரசம்பாவனை காணிக்கை முதலானதுகள் கொடுத்து வருகிறதற்கு தகுந்த ருஜுவும் முதல்பிரதிவாதி அவர்களுடைய மடத்தில் கணக்கு முதலான ஆதிரவுகளும் இருக்கவே இருக்கிறது. அதைக்குறித்து ரிப்ளை 5-வது கலத்தில் சொல்வது சரியல்ல.

16-வது. இதுவும் தவிர செங்கல்பட்டு ஜில்லா காஞ்சீபுரத்தில் பிரபலமான தோட்டங்களும் உதயபாக்கம் 1, சேக்காடு 1,

திருவத்தூர் 1, சித்தூர் ஜில்லாவில் நம்மனூர் 1, அம்பி 1, குண்டியான் தண்டலம் 1, கூடலூர் ஜில்லாவில் மடயாம்பலம் கிராமம் 1, இந்த திருச்சிறுப்பள்ளி ஜில்லாவில் அறியமங்கலம் 1, மகேந்திர மஙகலம் 1, கும்பகோணம் ஜில்லாவில் மாடாக்குடி 1, மாவடக்குரிச்சி 1, பெருமாண்டி 1, தோட்டங்கள் 2, மதுரை ஜில்லா சிவகஙகை சீமையில் புலவச்சேரி கிராமமும், பின்னும் சில்லரை சில்லரையாக சுரோத்திரியம் சர்வமானியமுமாக முதல் பிரதிவாதி அவர்களுடைய மடத்துக்குமட்டும் அதுகளுக்கு பிறவணுமுதலான ஆதிரவுகள் இருப்பதும் தவிர தஞ்சாவூர் மகாராஜா அவர்களாலும் அனந்தசயனம் மகாராஜா அவர்களாலும், தொண்டமான் சீமை, சிவகஙகை சீமை, எட்டியாபுரம், உடையார்பாளையம், தொரையூர், அறியலூர், சின்னசேலம் இந்த பிரதேசங்களின் கும்பினி துரைத்தனத்தார்கள் ராஜாக்கள் ஜமீன்தார்கள் முதலானவர்களாலே ரொக்க வருமானஙகளும் நடந்துவருகிறதும் தவிர சில சீமை அதாவது பொன்னேரி சீமை பூவிருந்தமல்லிசீமை இதுகளில் வெகுகாலமாய் மேறே செய்க்குருணி என்கிற வருமானஙகள் ஏற்பட்டும் அதுகளை சர்க்காரார் வசூல்செய்து கொடுத்துக்கொண்டும் இப்படிக்கெல்லாம் இருக்கிற ஆதிரவுகளின் விபரத்தைச் சொல்லவேணுமானல் விறளமாகுமானத்தினலே இதில் விஸ்தரிக்கவில்லே. இவ்விதங்களாக இருக்க, 5-வது கலத்தில் வாதிசொல்வது மிகுந்த தெரியாத்தனமாகவும் மூடத்தனமாகவு மிருக்கிறது.

17-வது. வாதியின் எஜமான் சேது யாத்திரைக்கு வரும்போது இந்த சுபாவில் முதல் பிரதிவாதி அவர்களுடைய சிஷியகிராமங்களில் சிலதில் பிரவேசித்தும் சம்பாவனே தீபாராதனே காணிக்கையும் கொடுத்துவரும்படி பலவந்தம்செய்தும் தொந்திரவுபடுத்தினதான சமாசாரம். முதல் பிரதிவாதிகளுடைய மடத்து காரியஸ்தாளுக்கு தெரிந்து அவரும் சிலசிஷியாளும் மேஜிஸ்திரேட்டில் தெரிவித்து அவர்களால் தடுத்து விளம்பரப்படுத்தி யிருப்பதை 11-வது கலத்தில் ஒப்புக்கொண்டிருப்பதினலே இந்த பிரதேசங்களில் வாதி ரிப்ளேயின் எஜமானருக்கு யாதொரு சுதந்திரமும்

சிஷியாளும் அக்கிர தாம்பூல மரியாதை காணிக்கைகளும் இல்லையென்று விசிதமாகும்.

18-வது. இப்போது வாதியின் எஜமான் என்று சொல்லப்பட்ட ஒரு எதியினுடைய ஸ்ரீமுகத்தில் கண்டிருக்கிற அம்சங்களை கண்டெழுதப்பட்டிருக்கிற ஸ்ரீமுகத்தை உடைத்தாயிருந்த வித்தியாரண்ணிய எதி என்பவர் சென்ற பிங்கள வருஷத்தில் சேது யாத்திரைக்கு வந்தகாலத்தில் முதல் பிரதிவாதி அவர்களுடைய சிஷிய பிரதேசங்களில் பிரவேசித்ததைப்பற்றி முதல் பிரதிவாதி அவர்களுடைய பரம்பரையைச் சேர்ந்த முந்திருந்த ஸ்ரீசங்கராசாரி சுவாமியானவர்களுடைய காரியஸ்தாள் ஆக்ஷேபித்ததைப்பற்றி முதல் பிரதிவாதி அவர்களுடைய ஆன்சரில் குறித்த ஒடம்படிக்கை எழுதிக்கொடுத்துயிருக்கிறதில் தலைப்பில் வித்தியாசங்கர என்பது முகரும் வைக்கப்பட்டும் ஸ்ரீங்கேரி ஸ்ரீ சாரதாபீடாதிபதி என்றும் கண்டிருக்கிற விவரத்தைப்பற்றி வாதி ரிப்ளை 12-வது கலத்தில் ஷை எதி ஸ்ரீங்கேரி மடாதிபதி அல்லவென்று சொல்லுகிறுள். ஷை எதி ஒடம்படிக்கை அம்சங்களையும் வாதியின் எஜமானனென்று சொல்லப்படுகிற ஒரு எதியினுடைய ஸ்ரீமுகமென்று சொல்லப்படுகிற தஸ்தாவேஜியும் பார்வையிட்டால் அதின் உண்மை இன்னதென்றும் வாதிக்கு கிரிமினல் சைட்டில் சிக்ஷை ஏற்படும்படி இருக்கும். ஷை வாதி பிராம்மணனுளதினுலே கோர்ட்டாரவர்கள் தயவுசெய்து அப்படிக்கு செய்யாமல் இருக்கவேணுமாய் முதல் பிரதிவாதி அவர்கள் அபிப்பிராயப்படுகிறுர்கள்.

19-வது. காஞ்சீபுரத்தில் ஸ்ரீகாமாக்ஷி அம்பாளுடைய ஆலயத்தில் ஆதி சங்கரபகவத் பாதாசாரியாரவர்களுடைய பிம்பம் சிலரூபமாயும் உத்ஸவ விக்கிரகமாயும் இருப்பதற்கு பஞ்சபருவ அதிகப்படி உத்ஸவங்களும் வருஷாவருஷம் நடந்துவருகிறதற்கு தேவஸ்தான கணக்கில் சிலவு எழுதப்பட்ட கணக்கு முதலான ஆதிரவுகள் சர்க்காரிலிருக்கச்சே ஆதி சங்கரபகவத் பாதாசாரியாரவர்கள் காஞ்சீயில் முக்தி அடைந்ததைப்பற்றி அவடத்தில் அதிஷ்டானம் இல்லைபோலவும் ரிப்ளை 20-வது கலத்தில் வாதிசொல்லுவது உப

யோகமற்றதாயிருக்கிறதுடன் காஞ்சீபுரத்திலிருக்கிற மடத்தில் மண்டனமிசிரர் என்கிற சுரேசுவராசாரியாருடைய அதிஷ்டானமும் மண்டனமிசிரரென்கிற பெயருள்ள அக்கிரகாரமும் பின்னும் அந்த ஊரில் சில அதிஷ்டானங்களுக்கு பிருந்தாவனங்களும் அந்த பிரதேசத்தில் தானே தம்மனூர் அம்பி திருவத்தூர் உதயம்பாக்கம் மடையாம்பலம் இதுகளிலும் (கும்பகோணத்திலும்) ஸ்ரீகாமகோடி பீடாதிபதி அவர்களுடைய பரம்பரைகளின் அதிஷ்டானங்களும் இருக்க வாதி ரிப்ளை 19-வது கலத்தில் காஞ்சீபுரத்திலாவது அந்த பிரதேசத்திலாவது மடம் அதிஷடானம் முதலானதும் இல்லை யென்று முழுவதும் பெறட்டாய்ச்சொல்வது சமுத்திரமும் பூமியும் இல்லையென்று சொல்வதுபோலவே இருக்கிறதே தவிர, இதைப் பார்க்கிலும் ஒரு உபமானம் சொல்லக்கூட இல்லை.

20-வது. காஞ்சீபுரத்தில் காமகோடி பீடமும் அவடத்தில் சிஷியாளை வைத்ததும் நிஜமானால் முதல் பிரதிவாதி அவர்கள் அவடத்தில்தானே இருக்கவேண்டியது போலவும் கும்பகோணத்தில் வந்திருக்கிற காரணம் ஆன்சரில் சொல்லயில்லை யென்றும் ரிப்ளை 20-வது கலத்தில் சொல்லுகிறுன். காமகோடி பீடாதிபதி அவர்கள் அவடத்திலேயே இருக்கவேணுமென்றும் மற்ற பிரதேசங்களில் இருக்கிறது கூடாது என்றும் எந்தகிரந்தங்களிலும் சொல்லியிருக்கவுமில்லை. காஞ்சீபுரத்திலிருக்கிற மடத்தில் முதல் பிரதிவாதியவர்களுடைய சிஷியாளும் காரியஸ்தாளும் இருந்து சர்வக்ஞ பீடத்துக்கு பூஜை முதலானதுகள் நடப்பிவித்துக்கொண்டு வருகிறதும் தவிர காவேரிதீரத்தில் வசிக்கவேணுமென்று முதல்பிரதிவாதியவர்களுடைய பரமகுரு சுவாமியள் அபிப்பிராயப்பட்டு சுரேசுவராசாரியாரால் பூசித்துவந்த யோகலிங்கமென்கிற சந்திரமௌளீசுவர சுவாமியுடன் கும்பகோணத்திலிருந்த மடத்துக்கு வந்து வாசம்செய்தவர்களுக்கு அந்த பிறதேசத்திலிருக்கிற ராஜாக்கள் முதலான சிஷியாக்களில் பூஜிக்கப்பட்டும் அநேக வருமானங்களுக்கு இடமும் அவடத்திலும், சில தடவை காஞ்சீபுரத்திலும் வாசம்செய்து வருகிறதைக்குறித்து வாதிசொல்லுகிற ஆக்ஷேபமும் உபயோகமற்றது

மாயிருக்கிறதும் தவிர ரிப்ளை 25-வது கலத்தில் ஒரு ராஜாவி னுடைய அவலம்பனத்தினல் உண்டான துண்டுமடமென்று சொல் லுவது வாதியின் எஜமானுக்கே தவிர முதல் பிரதிவாதி அவர்கள் அப்படிக்கல்ல.

21-வது. வைஷ்ண மதத்துக்கு முக்கியமான ராமாநுஜ சரித் திரம் என்கிற கிரந்தத்திலும் மத்வ மதத்துக்கு முக்கியமான மத்வ விஜயமணிமஞ்சரி இந்த கிரந்தங்களிலும் ஷை மதத்தை ஸ்ரீங்கேரிக் குப்போய் ஸ்தாபித்துக்கொண்டு வந்ததாக கண்டிருக்கிறதுபோல் ரிப்ளை 21-வது கலத்தில் சொல்லுகிருன். ஷை கிரந்தங்களில் ஸ்ரீங்கேரி என்கிற பெயரே இல்லை. ஷை மதங்கள் ஷண்மதத்தில் சேர்ந்ததே தவிர பிரத்தியேகமல்ல. ஷண்மத தாபனம் ஆதி பகவத்பாதரவர்களால் காஞ்சீபுரத்தில்தானே செய்யப்பட்டதால் அதை மேல்கண்ட ஆசாரியவிஜயமென்கிற கிரந்தத்தில் சொல்லி யிருக்கிறது.

22-வது. வாதியின் எஜமானுக்கு டில்லி பாச்சா சாகேப் அவர்களால் சில பிருதுகள் கொடுபட்டிருக்கிறதாயும் பஞ்சகலசம், மகரதோரணம், "அட்டபல்லாக்கு" உண்டென்றும் அதுதான் அவர் இப்போ பிருதாய் வைத்துக்கொண்டு இருப்பதாயும் ரிப்ளை 22-வது கலத்தில் சொல்லுகிருன்; அது சரியல்ல. ஆதிபகவத் பாதாசாரியாரவர்கள் ஈசுவராம்சமாயும் அநேக அனுக்கிரகங்களால் சகலமும் உண்டாக்கப்பட்டவர்களாயும் இருந்த படியால் அப்படிப் பட்ட அதிஷ்டான பரம்பரையில் சேர்ந்த முதல் பிரதிவாதியவர் களுக்கு அதை பார்க்கிலும் அதிகமாய் சப்தகலசமுள்ள அம்பாரி களும் ஜயகண்டாவுடன் இருக்கிற ஸிம்மலலாடம்வைத்த பல்லக்கு பிருதுகளும், சந்திரவாத்தியம், சூரியவாத்தியம், பகல்தீவட்டி, உபயசாமரம், சுவேதசத்திரம், சப்தகலச சத்திரம், மகரதோரணம், கர்ஜ்ஜி, சுர்ஜ்ஜி, தவளசங்கம், கெவுரீகாளம், எக்காளம், பாங் காதி, திருச்சின்னம், ரிஷபத்துவஜம், மயில்தொம்பை முதலான பின்னும் அநேக பிருதுகளும் சுதசித்தமாய் இருக்கவேயிருக்கிறது; வாதியின் எஜமானர் அந்த பரம்பரையில் சேர்ந்தவராயிருந்தால்

இப்படிக்கு அவருக்கும் சுதசித்தமாய் இருக்கவேணுமே! அப்படிக்கில்லாமல் ராஜாக்களுடையதயவுபெற்று அவாளாலே கொடுபட்ட பிருதுகளைக்கொண்டு அதனால்தான் ஜகத்குருவென்று சொல்வது சாஸ்திரத்துக்கும் லோகவழக்கத்துக்கும் ஒத்ததாயிருக்கயில்லை. இதனாலேதான் இராஜாக்களை அனுசரித்து நூதனமாய் பிருதுகளை சம்பாதித்துக்கொண்டதாக வாதி ரிப்ளையில் சொல்லுகிறதினாலேயே அதற்குமுன் அவாளுக்கு சுதசித்தமாய் பிருதுகள் இல்லையென்று தெரியவருகிறபடியால் அந்த பிருது தனக்கு இருக்கிறது என்கிற பிரபாவத்தைக்கொண்டு பெரியவபென்று சொல்லிக்கொள்ளவும் அதுவும் சொல்லதகாது. அட்டபல்லக்கு இருக்கிறதென்பது பிருதைச்சேர்ந்தது அல்ல. சுபாவத்துக்கு குறுக்கிட்டதென்று அர்த்தமேதவிர வேறில்லை. சில சமபங்களில் திருப்பதி வெங்கிட்டரமணசுவாமி தரிசனத்துக்கு போகப்பட்ட சமயங்களில் முதல் பிரதிவாதி அவர்களுக்கும் அட்டபல்லக்கு என்பது ஏற்பட வேண்டியதாகவே நேரிடுகிறது. அது சாஸ்திரீகத்துக்கும் சம்பிரதாயத்துக்கும் ஒத்ததல்ல; ஆனதினாலே அதை பெரிய பிருதாக நாம் எண்ணவில்லை. ஆனதினால் அதை எவ்வளவும் பெரிதாக ஒபபுக்கொள்ளத்தக்கதில்லை. கிரீடம் கர்ணபத்திரம் என்கிறது தேவதைகளுக்கு, கிரீடமென்பது சக்கரவத்திகள் இராஜாக்கள் வைக்கப்பட்டதேதவிர இதராளுக்குகிடையாது. ஆதி சங்கரபகவத்பாதாசாரியாரவர்கள் கிரீடம் வைத்துக்கொண்டதாக எந்த சாஸ்திர புராணங்களிலும் கிடையாது. மேல்கண்ட விதிகளுக்கு விரோதமாய் கிரீடம் என்று வாதி சொல்வதை யோசித்தால் அது கிரீடமல்ல. சீத ராஜ்ஜியங்களில் விசேஷமாய் யாவரும் பனி பயத்துக்காக குல்லாய் போட்டுக்கொள்ளுகிறது வழக்கம். வாதி எஜமானென்று சொல்லுகிற எதி அந்த பிரதேசத்து மகாராஜா அவர்களுடைய சம்ரக்ஷணையில் இருக்கிறவாளானதினாலே பனிக்கு அடக்கமாக வைத்துக்கொண்டிருக்கிற விமர்சையாய் வேலை செய்த குல்லாயாக தலைக்கு வைத்திருக்கலாம். குல்லாவை (கிரீடம்) என்று சொல்லிக்கொள்ளுவதுதகாததாயிருக்கிறது.

23-வது. வாதியின் எஜமானருக்கு ஸ்ரீரங்கப்பட்டணம் சீமையில் கிருமங்கள் விட்டிருக்கிறதாயும் அதுகளைச்சேர்ந்த மேஸ்திரேட்டு அதிகாரங்கள் செலுத்திவருகிறதாயும் அது ஒரு பெரிசாகவும் ரிப்ளை 24-வது கலத்தில்சொல்லுகிறுன். சர்க்காரார் தங்களுக்கிருக்கும் சொந்த அதிகாரத்தை பருதீனம் செய்ததாக எங்கையும் காணவில்லே. ஆனல் அதின் நிஜ ஸ்திதிகளை கோர்ட்டாரவர்களே தெரிந்துக்கொள்ளலாம். அது எப்படிக்கிருந்த போதிலும் அதினல் தாடங்க சுவதந்திரத்தைக் குரித்து நடக்கிற இந்த வழக்குக்கு உபயோகமில்லே. கூடலிமுதலான இதர துண்டு மடங்களொப்பந்தம் தஞ்சாவூர் மகாராஜா அவர்களுடைய அவலம்பனத்திலே "முதல்பிரதிவாதி அவர்களும்" ஒரு துண்டு மடத்தார்கள் போலரிப்ளை 25-வது கலத்தில் சொல்லுகிறுன். முதல் பிரதிவாதி அவர்கள் **ஆதிபகவத்பாதாசாரியார்** அவர்களுடைய பரம்பரையென்பதற்கு அனேக கிரந்தங்களும் ஆதிறவுகளும் இருப்பதை இதில் விஸ்தாரமாய் சொல்லப்பட்டிருக்கிறதும் தவிற முதல் பிரதிவாதி அவர்களுடைய பரம்பரையில் தஞ்சாவூர் மகாராஜா அவலம்பனத்தினல் இவடம் கும்பகோணம் க்ஷேத்திரத்துக்கு வந்த ஸ்ரீ சங்கராசாரிய சுவாமியளவர்களுக்கு முந்தின குரு சுவாமியளவாளான ஸ்ரீ சங்கராசாரிய சுவாமியளவர்களுக்கு சென்னப்பட்டணம் சமீபத்தில் திருவொற்றியூர் க்ஷேத்திரத்தில் ஸமாதி ஏற்பட்டு அதற்காக தோட்டம் வகையரு இனம் வரும்படிகளும் ஏற்பட்டு அந்த தோட்டத்திலேயே ஷை ஸமாதி பிருந்தாவனமும் மேற்படி ஜவேஜிகளைக்கொண்டு பூசை நைவேத்தியங்கள் நடந்துகொண்டு வருகிறதும் அந்த க்ஷேத்திரத்தில் முதல் பிரதிவாதியவர்களுக்கு மடம் யிருக்கிறதையும் கோர்ட்டாரவர்கள் யோசித்துப் பார்த்தால் தஞ்சைநகரம் மகாராஜா அவ்வர்களுடைய ஆசிறயத்திலே மகத்துவமுண்டானதாக சொல்லுவது கோர்ட்டாரர்வகளுக்கு திருப்திகரமாக தெரியவரும். வாதியின்எஜமான் வித்தியாரண்ணியருடைய பரம்பரை என்பதை ரிப்ளையிலும் அவ்ருடைய ஸ்ரீமுகங்களிலும் ஒப்புக்கொள்ளுவதினலே வாதி எஜமானன்

துண்டு மடத்காரென்று கோர்ட்டாரவர்களுக்கு ஸ்பஷ்டமாய் விசிதமாகும்.

24-வது. ஹைதரூபாத் அதாலத்து கோரட்டில் கூடலி மடத்துக்கும் ஸ்ரீங்கேரி மடத்துக்கும் பிரூது முதலானதுகளைக் குரித்து வியாச்சியமாயிருந்ததாயும் அதில் ஏதோ பஞ்சாயத்தார் கூடலி கும்பகோணம் முதலான மடம் துண்டுமடமென்றும் ஸ்ரீங்கேரி சரஸ்வதீ பீடம் பகவத்பாதரவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட தானத்தினலே அதை பெரியமடமென்று 1260வஸ யிஜரி றேபுசாணிமீ த்தில் தீர்ப்பு செய்ததாயும் அதுவும் தன் கக்ஷிக்கி ஒரு பலம் போலவும் சொல்லுகிருன். ஷை தீர்ப்பு இதற்கு ஒருவருஷத்திற்குள்பட்டதாய் தெரியவருகிறது. விவாத தாடங்கத்தைக் குரித்து நூதனமாய் ஸ்தாபித்துக்கொள்ள வாதி வகையறுக்கள் றிவினியூ தறப்பில் 4, 5 வருஷகாலம் முதல் வெகு விதமாய் துடர்ந்தும் பலிதப்படாத்தினலே அது சங்கதியை வாதி எஜமானறறிந்து நிருதரவாயிருக்கிற தன் கக்ஷிக்கி ஒரு ஆதிரவுபோல உண்டாக்கிக்கொள்ள வேணுமென்று கும்பகோணம் முதலானதுகள் துண்டுமடமென்றும் தன்னைச்சேர்ந்த சில மனுஷியாளைக்கொண்டு பஞ்சாயத்து தீர்ப்பென்று ஒன்றேற்படுத்திக் கொண்டிருக்கிறதாய் தெரியவருகிறதே தவிற அது கிரமமாய் நடந்ததாக இருக்கவில்லை அது நிஜமாயிருந்திருக்குமேயாகில் அவ்விடத்தில் விவாதப்பட்ட அந்த உபயவாதிகளுடைய பாத்தியத்துக்குமட்டும் விசாரிக்கவும் தீர்க்கவும் கூடுமே தவிற அவர்களுடைய அதிகாரத்துக்குள்படாத கும்பகோண முதலான ஸ்தலங்களில் இருக்கிற மடாதிபதிகள் சங்கதியைப்பத்தி தீர்ப்புசெய்ய யாதொரு அதிகாரமுமில்லை இதுனலேயே ஷை தீர்மானம் இந்த வழக்குக்கு ஒரு ஆதாரம்போல சொல்வது உபயோகமற்றதாயிருக்கிறது.

25-வது. கூடலி புஷ்பகிரி கொலால் முதலானது துண்டுமடமென்றும் அவர்களில் சிலர் வாதி எஜமானுக்கு விக்ஞாபனப் பத்திரிகைகள் யெழுதிக்கொண்டிருக்கிறதாயும் ரிப்ளை 27-வது கலத்தில் சொல்லுகிருன் ஷை பத்திரிகைகள் நிஜமானல் முன் எதிகள்

அனேக பத்திரிகை யெழுதிக்கொண்டிருக்கவேணுமே? அப்படிக் கிருப்பதாய் சொல்லாமல் சுவல்ப காலத்துக்குமுன் வாதியின் எஜமானுக்கு யெழுதிக்கொண்டதாய் சொல்வதினலே இந்த வ்ழக்குக் காகவே உண்டுசெய்தது என்பதற்கு யெவ்வளவும் சந்தேகமில்லை. பின்னும் ரிப்ளை 25-வது கலத்தில் முதல் பிரதிவாதி அவர்கள் மடாதிபதியென்றும் 27-வது கலத்தில் பிருது உடைத்தானவர் யென்றும் சொல்லுகிருன். வாதி அப்படிக்காவது பிருதில்சொல்லாமல் தெண்ணியத்தாழ்வாய் மடாதிபதியும் பிருதுள்ளவர்களல்லவென்றும் முதல் பிரதிவாதியவர்கள் அந்தஸ்து எதியென்றும் இப்படிக்கு லேசாயும் யெழுதியிருக்கிற தப்பிதத்தைக் குறித்து வாதியை தண்டிக்கவேண்டியது கோறட்டாரவர்களுடைய கடமையாயிருக்கிறது.

26-வது. முதல் பிரதிவாதியவர்களுக்கு தேசசஞ்சார காலங்களில் அந்தந்த ஜில்லாக்களிலிருக்கிற கலெக்டர் முதலான அதிகாரஸ்தர்களுக்கு கனம்பொருந்திய கெவர்ன்மெண்டாரவர்கள் பிருதாவளியைக் கண்டு அனுப்பியிருக்கிற ஆர்டர்களையும் சாதாரணமாய் பிறப்பிவிக்கப்பட்டிருக்கிறதென்று ரிப்ளை 16-வது கலத்தில் அலக்ஷியமாய் சொல்லுகிற வாதி தன் எஜமானுக்காக அப்படிபோலவே பிறந்திருக்கிறதாய் சொல்லுகிற ரகதாரிகள் தன் கக்ஷிக்கி உபயோகமாகவும் பலனுள்ளதுபோலவும் ரிப்ளை 28-வது கலத்தில் கண்டிருக்கிறதைக்குரித்து யோசித்தால் வாதி துர் கக்ஷிக்காரனென்று விசிதமாகும்.

27-வது. 1837௵த்தில் வாதியின் சேது யாத்திரைக்குப் போகிறதற்காக மைசூர் கமிஷன் துரையவர்களால் அவருடைய மடத்து ஆசார விசாரணைக்குள்பட்டு பாதகாணிகை முதலானது கொடுத்துவரவேண்டுமென்று அப்படிக்கு செய்யாதவர்களை சர்க்காரில் தண்டிக்கப்படுமென்று உத்திரவு கொடுத்திருப்பதாய் ரிப்பளை 29-வது கலத்தில் வாதி சொல்வது நிஜமானல் இந்த திருச்சிணப்பள்ளி கும்பகோணம் மேஜஸ்திரேட்டு துரையவர்களால் வாதியின் எஜமான் யாதொரு பலவந்தம் செய்யக்கூடாதென்று தடுத்ததை

யும் கும்பகோணத்திலிருக்கிற மடங்களின் வழியாய் போகக்கூடா தென்றும் பிறந்த உத்திரவுகளையும் ஷெ உத்திரவை காண்பிவித்து ரத்துசெய்து கொள்ளாமல் அதற்குள்ப்பட்டு நடக்கவும் என்ன நிமித்தியமிருக்கிறது? ஸ்ரீங்கேரிமடத்தை பெரியதென்று மைசூர் சமஸ்தானத்திலுள்ள சில மகாஜனங்களும் சில துண்டு மடத்தாரும் யெழுதியிருக்கிறதாயும் ரிப்பிளை 30-வது கலத்தில் சொல்வது இதற்கு எவ்வளவும் உபயோக மற்றதாயிருக்கிறது. குத்தி பல்லாரி ராஜாவினலெ கொடுத்த கிராமம் அபஹரித்துக்கொள்ளப்பட்டு போனதைக்குறித்து ரிப்பிளை 31-வது கலத்தில் சொல்லியிருக்கிற சங்கதிகள் இந்த வியாச்சியத்துக்கு எவ்வளவும் உபயோகமற்றதாய் இருக்கிறது.

28-வது. இராமேசுவரத்தில் ஆரியாளுக்கும் தீர்த்தவாசிகளுக்கும் மதத்தைக்குறித்து நேரிட்டிருந்த வியாச்சிய தருணத்தில் வாதியின் எஜமான் அவடத்தில் யாத்திரைபோனதில் வழக்கத்துக்கு விரோதமாய் தான் சுவதாவாய் கோடிதீர்த்தம் யெடுத்துக் கொள்ளுகிறதாக சொன்னதை ஆரியாள் தடங்கல்பண்ணி விட்டதினலே அந்த தீர்த்தமே அவருக்கு கிடைக்காமல்போன ஆங்காரத்தைப்பற்றி ஷெ தீர்த்தவாசிகளுடன் கக்ஷி சேர்ந்து அவாளுக்கு ஒத்தாசையாய் தன் பெயரை பெருமையாய்கண்டு ஒரு ஸ்ரீமுகம் எழுதிக்குடுத்த போதிலும் கோரட்டார் நீதியின்பேரில் அந்த வழக்கை தீர்மானித்திருக்கிறார்களே தவிர வாதியின் எஜமானுடைய பெயரைக்குரித்தாவது மடாதிபத்தியத்தைக் குரித்தாவது பிரந்த தீர்ப்பல்ல.

29-வது. ஆதி பகவத்பாதர் அவர்கள் பதினெட்டு ஸ்தளத்தில் ஸ்ரீசக்கிர பிரதிஷ்டை செய்துயிருப்பதையும் ஒவ்வொரு ஸ்தளத்துக்கு ஒவ்வொரு சிஷியாளை நேமித்திருக்கவேணுமென்று ரிப்பிளை 33-வது கலத்தில் சொல்லுகிறான். அப்படி பதினெட்டு ஸ்தளத்தில் ஸ்ரீசக்கிர பிரதிஷ்டை செய்ததாய் சொல்லுவதற்கு இன்ன கிரந்தத்தில் ஆதாரம் யிருக்கிறதென்று பிரித்து சொல்லாமல் விட்டிருந்தபோதிலும் பகவத்பாதாளாலே யெவ்வளவு சக்கிர

பிரதிஷ்டை செய்திருந்தபோதிலும் வசின்னியாதியஷ்டாங்கவாக்தேவதைகள் பிம்பங்களுடன் சர்வயக்கியபீடமாய் ஸ்ரீசக்கிர பிரதிஷ்டை காஞ்சீபுரத்தில் செய்து முக்கிய சிஷியராகிய **சுரேசுவராசாரியாரை** நேமித்திருப்பதினலே மற்ற ஸ்ரீ சக்கிரங்களுக்கும் அந்த பீடாதிபதிகளே பாத்தியஸ்தராயிருக்கச்சே ஒவ்வொரு ஸ்தளத்துக்கு சிஷியாள் நேமகமாய் யிருக்கவேணுமென்று ஆக்ஷேபிப்பது வீணனதாய் இருக்கிறது. தாடங்கம் துரஸ்துசெய்யவேண்டியதைக்குரித்து பிலவஙூ தைமீ 5உ-யில் ஸ்தளத்தார் விக்கியாபன பத்திரிகை யெழுதிக்கொண்டிருக்கிறதாயும் அதில் 6, 7, 8, 9, 10, 11, இந்த பிரதிவாதிகளும் கையெழுத்தும் வைத்து யிருக்கிருர்களென்று ரிப்பிளை 34-வது கலத்தில் யெழுதியிருக்கிருன். அது நிஜமானல் ஷை விக்கியாபன பத்திரிக்கையை பிராதில் கண்டிருக்கிற வாதி ஷை பிரதிவாதிகளும் கையெழுத்துபோட்டிருக்கிருர்களென்பதை பிராதில்தானே முக்கியமாய் கண்டிருக்கவேணும் அப்படிக்கு இல்லாமல் ஷை பிரதிவாதிகள் வாதியின் போதனைக்கு உள்பட்டு ஒத்த ஆன்சர் கொடுக்க வில்லையென்கிற குரோதத்தினலே ஆன்சருக்குப் பிறகு ஷை விக்கியாபனபத்திரிகையில் அவர்கள் கையெழுத்து வைத்திருப்பதாய் சொல்வது கல்பிவித்துக் கொண்டிருக்கிருனென்று விசிதமாகும். இதுவும்தவிர இந்த நம்பர் 3-வது பிரதிவாதி ஷை கோவிலுக்கு தலைமையான ஸ்தளத்தானகையால் அவரால் ஷை தாடங்கம் துரஸ்து செய்யவேண்டியதைக்குறித்து முதல்பிரதிவாதி அவர்களுடைய பாத்தியதையைக்கண்டு அனேக ஆதிரவுகள் யெழுதிக்கொடுத்திருக்கிறதும் தவிற அவர் தன்னுடைய துர்கக்ஷியில் சேரவில்லையென்று இந்த நெம்பரில் வீணய் பிரதிவாதியில் சேர்த்து பிருது செய்த வாதி ரிப்பிளை 34-வது கலத்தில் ஷை பிரதிவாதியும் தங்களுக்கொரு ஆதிரவு எழுதிக்கொடுத்திருக்கிறது போல அதின் வருஷம் மாசம் தேதி காட்டாமல் மறைத்தும் பிருதில் அப்பேர்க்கொத்த தெஸ்தாவேஜி இருப்பதாய் சொல்லாமலும் இருப்பதை கோரட்டார் யோசித்தால் அதுவும் கல்பனையென்றே விசிதமாகும்.

30-வது. விவாத தாடங்கம் துரஸ்துசெய்கிற பாத்தியம் ஸ்ரீங்கேரி எதிக்கென்று கலெக்டர் துரையவர்களிடத்தில் 4-6-7-11 பிரதிவாதிகள் அர்ஜீ கொடுத்திருக்கிறதாயும் அது சங்கதியைப் பத்தி ஸ்தளத்தாருக்காக பேச முத்தியபிள்ளைக்கும் வாஞ்சிசாஸ்திரியள் என்பவருக்கும் தர்மகர்த்தா முதலான இடங்களிலும் கச்சேரியிலும் பேசவேண்டியதுக்காக மலைக்கோட்டை வெங்கிட்டராமய்யன் யென்பவனுக்கும் அச்சுக்கடுதாசிகளில் அதிகாரபத்திரங்கள் யெழுதிக்குடுத்திருப்பதாயும் பிப்பிளை 35-வது கலத்தில் கண்டிருக்கிறது. நிஜமாகவே ஸ்தலத்தார் அப்படிக்கு கலெக்டர் துரையவர்களிடத்தில் அர்ஜீ கொடுத்ததாயிருந்தால் அதி சமீபத்திலிருக்கிற அவர்கள் சுவதாவாய்ப்பேசாமல் முத்தியபிள்ளை முதலானவர்களுக்கு அதிகாரபத்திரங்கள பணச்சிலவுசெய்து அச்சுக்கடுதாசிகள் வாங்கி யெழுதிக்கொடுக்கவும் அவர்களுக்கு கையிலிருந்து நஷ்டப்பட்டு சம்பளம் கொடுக்கவும் அவர்களுக்கு என்ன அகத்தியம் உண்டாயிருக்கலாம் இதுனாலேதானே ஷை பிரதிவாதிகள் முதலான ஸ்தலத்தார் அப்படிக்கி அர்ஜீயாவது அதிகாரபத்திரமாவது எழுதிக்கொடுத்திருக்கமாட்டார்களென்றும் தாடங்கஜீர்ணோத்தாரண சுவதந்திரத்தைக்குறித்து தனக்கு பலமாகவேணுமென்று நினைத்து வாதி அப்படிக்கும் சில ஆதிரவுகள் கல்ப்பிவித்துக்கொண்டு அப்போர்க்கொத்த மாருபாடுகளுக்கு உள்பட்டவர்களைக்கொண்டு இஷ்டப்படிக்கி எவ்வளவு அர்ஜிகொடுத்ததாய் சொன்னபோதிலும் அது எவ்விதமாய் எழுதிக்கொண்டிருந்தாலும் அதுகளின் உண்மை யாதொரு அதிகாரிகளாலும் விசாரிக்கப்படாததுகளாய் யிருப்பதால் அதுகள் நிஜமென்று நம்பத்தகாது.

ஸ்ரீரங்கம் தேவஸ்தானம் ஹெட் மேஷ்காராயிருந்த வைத்திலிங்கமுதலி வாதியின் தாக்ஷண்ணியத்துக்கு உள்பட்டு மாருபாடாய் தன் அதிகாரத்துக்கு உள்ப்பட்ட சிலரைக்கொண்டு வாக்குமூலங்கள் வாங்கி தாடங்க பிரதிஷ்டை செய்யவேண்டிய பாத்தியம் ஸ்ரீங்கேரியாருடைதென்று கலெக்ட்டர் துரையவர்களுக்கு அர்ஜி யெழுதியிருக்கிறதாயும் அந்த அர்ஜியின் பலத்தைக்கொண்டு போர்ட்டு

கவர்மெண்டு இதுகளுக்கு யெழுதிருப்பதாயும் ரிப்ளேயில் சொன்ன போதிலும் ஷை பாத்தியமென்று சொல்லுவது ஒருதேவஸ்தானம் பேஷகாருல் யெழுதப்பட்டதானபடியினுலே அது நிஜமென்று நம்பி மேலான அதிகாரஸ்தாள் ஷை அர்ஜிப்படிக்கி உத்திரவு கொடுக்கவில்லையென்பது வாதியின் ரிப்ளேயினுலேயே தெரியவருகிறபடியினுலே அதுகளே ஒருபெரிசாய் காட்டி ரிப்ளேயில் சொல்வது உபயோகமைத்ததாயிருக்கிறது. ஷை பேஷ்கார் விசாரணையின் அர்ஜி நியாயமாயிருக்குமேயாகில் அந்தப்படிக்கி மேலான அதிகாரஸ்தாளால் உத்திரவுகள் பிறந்து வாதியின் எஜமானனும் தாங்கம் துரஸ்துசெய்து இருக்கலாம் அப்படிக்கில்லாத சங்கதிகள் வாதி ரிப்ளேயில் காட்டிருப்பது வீணனதென்று விசிதமாகும்.

31-வது. முதல பிரதிவாதி அவர்களின் பீட பரம்பர்ரயினுடைய அதிஷ்டானங்கள் இத்தினை இருப்பது யென்பதும் அவர்களுடைய பெயர்களும் தெரிந்திருக்கமாட்டாதென்பதாய் வாதி தெரியாத்தனமாய் ரிப்ளே 36-வது கலத்தில் சொல்லுகிறவன் ஸ்ரீநகேரியிலும் காசி முதலான இடங்களிலும் சித்தங்கதாளாய் போனவர்களுக்குசுமார் 68 அதிஷ்டானங்களிருக்கிறதென்று சொல்வதுனுலேயே வாதியின் எஜமானுக்கு அதிஷ்டானங்கள் இவ்வளவு என்கிற நிச்சயம் தெரியாதென்றும் நிமித்தியமில்லாத சங்கதிகளே வீணுய் ரிப்ளேயில் சொல்லுகிருனென்றும் தெரியவருகிறது. ஜீரணமாயிருந்த தாடங்கங்களுக்கு முதல் பிரதிவாதி அவர்கள் ஜீர்ணேத்தாரணம் செய்து அகிலாண்டேஸ்வரீ அம்மனுக்கு சமர்ப்பிவித்து கிரமப்படி நிறவேரி இருக்கிறது எவ்வித பொய்யான முகாந்திரங்களைக்காட்டியாவது எடுத்துப்போடலாமென்று வாதி வீணன எண்ணங் கொண்டு ஸ்ரீ சக்கிர தாடங்களில் அபினவ சச்சிதானந்த பாரதி துரஸ்து செய்தது என்று முன் எழுதப்பட்டிருந்தது போலவும் அதை இப்போ பிரதிவாதிகள் எடுத்துப்போட்டு கும்பகோணம் சுவாமிகளாலது துரஸ்து செய்யப்பட்டிருக்கிறதென்று ஒரு தகட்டில் எழுதி தாடங்கத்தின் அடியில் வைத்திருக்கிறதாகவும்

அதுகளுக்கு ருசு இருக்கிறதாகவும் அநீதமான பொய்யை கல்ப்பித்து எழுதியிருக்கிறார்களே தவிர அதுகள் நிஜமல்ல வாதி சொல்லுகிறபடி அபினவசச்சிதானந்த எதியினுடைய பெயர் முன் அதல் எழுதியிருந்தால் அதைவிட வேறே பிரபலமானருசுவாதிக்கி வேண்டியதில்லையே? எந்த தெரியாதவனும் அப்பேர்ப்பட்ட ருசு யிருப்பதை பிறாதுக்குமுன் ரெவினியூ திரப்பில்கொடுத்த அர்ஜிகளாலும் ஷெடி பாத்தியதையைக் குறித்துக்கொண்டு வந்திருக்கிற இந்த பிறாதிலும் முக்கியமாய் கண்டெழுதாமல் விட்டிருப்பானா? மேலும் ஷெடி தேவஸ்தானத்துக்கு பேஷ்காராயிருந்த வைத்திலிங்க முதலி வாதியின் கக்ஷிக்கி சாதகமாய் யெழுதின அர்ஜியிலாவது ஷெடி தாடங்கத்தை தினம் பிரதி எடுத்து பூசை பண்ணுகிற அர்ச்சகாள் ஸ்தலத்தார் முதலானவர்கள் தன்கக்ஷிக்கி பலனாயி கலெக்டருக்கு யெழுதிக்கொண்டதாய் சொல்லுகிற அர்ஜிகளிலாவது அது விவரத்தை முக்கியமாய் கண்டிருக்கவேணுமே இப்படிக்கி முன் நடவடிக்கைகளில் யாதொன்றிலும் காட்டாமல் தாடங்க ஜீர்ணோத்தாரணமாயும் பிறதிவாதிகளும் ஆன்சர் குடுத்தபிறகும் வாதி சொல்வதினாலேயே அதை சுத்த பொய் என்றும் அதைப்பத்தி ருசு இருக்கிறதாய் சொல்வதை யெந்த நியாயாதிபதிகளும் நம்பக்கூடாதென்றும் விசிதமாகும்.

32-வது. முதல் பிரதிவாதியவர்களுடைய பெயர் **சந்திரசேகரேந்திர சரஸ்வதி** என்று சொல்லுகிறது 3 பெயராகிறதென்றும் எதிகளுக்கப்படிக்கி 3 கூடாதென்றும் ரிப்ளை 37-வது கலத்தில் சொல்லுகிறான் ஆதிசங்கரபகவத்பாதர் அவர்கள் தேவேந்திரனை ஜெயித்து சுரேசுவராசாரியாருக்கு இந்திரபட்டம் கொடுக்கப்பட்டதென்றும் வாசனஸ்தவ ஸ்தோத்திர மென்கிற பிரகரணத்தில் சொல்லியிருப்பதனாலே சுரேசுவராசாரியாருடைய சிஷியபரம்பரைகளுக்கு இந்திராளென்கிற பெயரும் சேர்ந்துவருகிறபடி முதல்பிரதிவாதியவர்களுக்கு சந்திரசேகரேந்திர சரஸ்வதி என்கிற பெயர் அனாதி சம்பிரதாயமாய் ஜெகத் பிரசித்தமாயிருப்பதை வாதி அறியாமல் ரிப்ளையில் 3 பெயர்கூடாதென்று சொல்வது சரியல்ல.

சரஸ்வதி என்கிற சொல்லுக்கும் பாரதீஎன்கிற சொல்லுக்கும் அர்த்தம் ஒன்ருயிருந்தாலும் எதிகளுக்குண்டான 10 சம்பிரதாயத்தில் சரஸ்வதி சம்பிரதாயம் வேருயும் பாரதீ சம்பிரதாயம் வேருயும் விசுவேஸ்வர ஸ்மிருதியில் சொல்லியிருக்கிறது. இந்த பத்து சம்பிரதாயத்தில் இரண்டு சம்பிரதாயத்தை சேர்த்து பெயர் சொல்லக்கூடாது. முதல் பிரதிவாதியவர்களுக்கு சந்திறசேகரர் என்று வியவகார பெயரும் பட்டபெயர் இந்திரர் என்று எதிகளுடைய சம்பிரதாயபெயர் சரஸ்வதியென்றும் இப்படிக்கிறமமாயிருப்பது யாதொருவிரோதமுமில்லை. வாதியின் எஜமான் சுரேஸ்வராசாரியாருடைய சிஷீய பரம்பரையைச் சேர்ந்தவராயிருந்தால் அவருக்கும் இந்திரபட்ட பெயரிருக்கவேணுமே? அப்படிக்கில்லாமல் நரசிம்ம பாரதியென்று சொல்வதினுலேயே வாதியின் எஜமான் சுரேசுவருசாரியாருடைய சிஷியபரம்பரையில் சேர்ந்தவரல்லவென்றும் தெளிவாய் விசிதமாகும்.

33-வது. இந்த வழக்கில் வாதி ரிப்பளேயில் ஸ்ரீ சக்கிரதாடங்கம் ஜீர்ணேத்தாரணம் செய்யவேண்டிய பாத்தியம் ஸ்ரீங்கேரி மடத்து எதிகளதென்று சொல்லுவதற்கு ஜெம்புகேசுவரத்தில் யாதொரு தெஸ்தாவேஜிகளாவது ஷை கோவிலில் ஸ்ரீங்கேரி மடத்துக்கு யாதொரு மிருசான வருமானங்களாவது இருப்பதாய் சொல்லாமல் தாடங்கத்தைப்பற்றின இந்த வழக்கு எல்வளவும் உபயோகமில்லாத சங்கதிகளேயும் ஆதிரவுகளேயும் காட்டிருந்தபோதிலும் அதுகள் மடாதிபத்தியத்தை சேர்ந்ததென்று சொன்னத்திஞலே அதுகளுக்கும் பதில் சொல்லவேண்டியதாய் நேரிட்டது ரிப்பளே 38-வது கலத்தில் தனக்கு இன்னும் அனேக ஆதிரவுகள் ஸ்ரீங்கேரி மடத்து ரிகார்ட்டில் இருப்பதுபோல ஒரு மலப்பு தோணும்படி பொய்யை யெழுதிருக்குருனே தவிர தாடங்க ஜீர்ணேத்தாரணத்தைப்பற்றின ஆதிரவுகள் இருந்தால் வீணுன தெஸ்தாவேஜிகளே காட்டி சொல்லுகுற வாதி முக்கியமான தெஸ்தாவேசுகளே வரவழைத்துக்கொண்டு காட்டாமல் விட்டிருக்கமாட்டானென்று அனேகம் பொய்களேபோல இப்படியும் ஒரு பொய்

யை கல்ப்பிவித்து பிப்ளேயில் சொல்லுகுறுனென்றும் விசித மாகும்.

34-வது. இதில் வாதிசொல்லுகுற மேல்காட்டிய வின்ன தஸ்தாவேசுகளை அடியில் காணுகிற தீர்ப்பைபோல பலனுள்ள தாகமாட்டாது எப்படி என்றால் மத்வமதமான உத்திராதிமடத்து சுவாமிகள் தஞ்சாவூர் சீமை யேட்டு சிரஸ்தாவாயிருந்த இராம சந்திரராயனுக்கு அனுப்பின ஸ்ரீமுகத்தை கும்பகோணத்திலிருக் குற காமகோடி பீடாதிபதியவர்களான முதல் பிரதிவாதியவர் களுடைய மடத்து வாசல் வழியாய் பட்டணப்பிரவேசம் செய்விக்க எத்தனப்பட்டதை குறித்து விவாதம் உண்டாய் அப்போ கலெக்ட் டராயிருந்த மேஸ்தர்ஹாரீஸ் துரையவர்களிடத்தில் பிராது சொல் லிக்கொண்டதில் அவரவர்கள் போர்ட் கவர்ன்மெண்டாருடைய உத் திரவின்பேரில் திருமதஸ்தாளையும் வரவழித்து விசாரணை செய்து அவர்கள் ஒப்புக்கொண்டபடி காமகோடி பீடாதிபதியவர்களாகிய சங்கராசாரியசுவாமி அவர்களுடைய மடமே பெரிதென்றும் அந்த பீடாதிபதிகள் நெடுநாள் வழக்கப்படிக்கு சகல பிருதுக்கள் உடனே சகல மடத்து வாசல் வழியாயும் போகலாமென்றும் மற்ற மடாதி பதிகள் ஷெ சங்கராசாரிய சுவாமியாரவர்கள் மடத்து வாசல் வழி யாய் போகக்கூடாதென்று 1820 ஹூ த்தில் தீர்ப்பு செய்து தஞ்சா வூர் மகாராஜா அவர்கள் அரண்மனைக்கு அனுப்பிவித்து பிரசித்தப் படுத்தி இருக்கிறார்கள். இந்த தீர்ப்பைப் பார்க்கிலும் வாதி பிப் பிளேயில் சொல்லுகுற அன்னிய தேசமாகிய நாசிகா துக்குடி ஹைதிராபாத் பஞ்சாயத்தார் அவடத்திய விவாதத்தை பற்றி சொற்பகாலத்திற்கு முன் செய்த தீர்ப்புகள் ஒரு பலனாகமாட்டாது.

35-வது. ஆன்சரில் காட்டிய ஈசுரஹூ த்தில் முதல் பிரதி வாதி அவர்களுடைய பரமகுருசுவாமிகளவர்களாகிய சந்திரசேக ரேந்திர சரசுவதி சுவாமிகளாலும் அதற்குமுன் அக்ஷயஹூ த்தில் ஷெயார்களுடைய குருசுவாமிகளாகிய மகாதேவேந்திர சரஸ்வதி சுவாமிகளாலும் ஸ்ரீசக்கிர ஜீர்ணோத்தாரணமாயிருப்பதற்கு ஆன்

சரில் அவர்கள் பெயர் காணவில்லையென்று ரிப்பளீயில் ஆக்ஷே பித்து இருக்கிறது சரியல்ல.

36-வது வாதி பிரூது ரிப்பளீயிலும் பிரதிவாதிகள் ஆன்சர் ரிஜாய்ண்டர்களிலும் தங்கள் தங்கள் கக்ஷிக்கு வேண்டிய கிரந்தங்களை குறித்து காட்டியிருக்குற விஷயத்தில் கோர்ட்டாரவர்களுக்கு தாடங்கம் துறஸ்துசெய்யவேண்டிய பாத்தியதையின் விஷயம் தவிர மடாதிபத்தியத்தினுடைய விஷயத்தையும் அறிந்து தீர்ப்புசெய்ய வேணுமென்று தோணும்பக்ஷத்தில் அதைப்பற்றி கிரமபடி நிறவேற்றவேண்டிய அதிகாரம் கோர்ட்டாரவர்களதாய் இருக்கையிலும் இந்த இலாகாவில் அனேக சாஸ்திரிகள் இருக்கையிலும் வாதி இந்த கவர்ன்மெண்டு இலாகாவுக்கு உள்படாத பம்பாய் பங்காளா முதலான இடங்களில் இருக்குற சாஸ்திரிகளை சவால்கேட்டு தீர்மானிக்கவேண்டுமென்று ரிப்பளீ கடைசி கலத்தில் சொல்லுகுற வாதியின் கருத்தை கோர்ட்டாரவர்களே யோசிக்கவேணும்.

37-வது. ரிப்பளீயில் எழுதிய மற்ற பாலவசனமான அநேக விண்சங்கதிகளுக்கு விஸ்தரித்து பதில் எழுதவேண்டியதில்லை, ஆகையால் இத்தியாதி நடவடிச்கைகளை கோரட்டார் பார்வையிடும்போது ஸ்ரீ சக்கரஜீர்ணோத்தாரண பாத்தியம் காமகோடி பீடாதிபதியவர்களுடைய பாத்தியமானத்திலே காஞ்சீபுரத்திலும் ஜெம்புகேஸ்வரத்திலும் முன்காலத்திலும் செய்திருக்கிற மாமூல் வழக்கப்படி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரீ அம்மனுடைய தாடங்க ஜீர்ணோத்தாரணம் முதல் பிரதிவாதியவர்கள் செய்திருப்பதை சகலவிதத்திலும் நியாயமென்றும் அதைப்பற்றி யாதொரு சம்பந்தமுமில்லாத சொல்ப சம்பளத்தில் சேவகா விர்த்தியாயிருக்கிற வாதி முதல் பிரதிவாதியவர்களுக்கு வீணை சிலவும் அநேக விதமான தொந்திரவுகளும் நேரிடும்படி செய்விக்கவேணுமென்று கருதி துர்வழக்காடுகிறுனைகயால் வாதியின் வழக்கைதள்ளி நியாயமான தீர்ப்பு செய்து தரவேணுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

1845ஹு
பிப்பரவரிமீ 25உ

(ஒப்பம்) **சுப்பய்யர்.**

திருச்சினாப்பள்ளி ஜில்லா பிரன்சிபால் சதர்மீன் கோர்ட்டாரவர்கள் செய்த தீர்ப்பு.

மேற்படி கோர்ட்டு 1844-ம் வருஷத்திய அசல் நம்பர் 95.

நகரஞ்சீமை கொப்பந்தாலூகா ஸ்ரீங்கேரியில் இருக்கும் ஸ்ரீங்கேரிமடாதிபதியவர்களாகிய ஸ்ரீசங்கராசாரிசுவாமிகளான நரசிம்ம பாரதிசுவாமியவர்களால் மொகத்தியார் நாமா பெத்தசேஷஜோவியர், அந்தஸ்துமடம் விஜாரணைக்கர்த்தா — வாதி.

வக்கீல் கிருஷ்ணசாஸ்திரிகள்.

பிராதில் கண்டிருக்கிறபடி கும்பகோணம் ஜில்லா கஸ்பா கும்பகோணத்திலிருந்து வந்திருக்கும் ஸ்ரீ சந்திரசேகர பாரதி சுவாமிகள்—அல்லது முதல்பிரதிவாதி மனுவில் கண்டபடி காஞ்சீ காமகோடி பீடாதிபதியவர்களாகிய ஸ்ரீசங்கராசாரிய சுவாமியாரவர்களான சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாயமிவர்கள் அந்திஸ்து மடாதிபதி ... 1.

ஜெம்புகேசுவரம் கோவில் தர்மகர்த்தாவான லாலுகுடிதாலூகா பிச்சாண்டார்கோவிலிலிருக்கும் சந்திரசேகரம்பிள்ளை பிராதுக்குப்பிறகு இறந்துப்போனபடியால் அவருடைய சுவீகாரபுத்திரனான ஆவுடையபிள்ளை அந்திஸ்துவிவசாயம் ... 2.

ஷை ஜெம்புகேசுவரத்திலிருக்கும் அய்யகளய்யராகிய ஜெம்புபதி தீக்ஷிதர் பிராதுக்குப்பிறகு இறந்துபோனபடியால் அவனுக்கு பாத்தியஸ்தனும் சிறிய தகப்பன் குமாரனுமாகிய கிருஷ்ண தீக்ஷிதர் யென்கிற மகாதேவ தீக்ஷிதர் அந்திஸ்து கோவில் ஸ்தலத்தார் ... ... 3.

ஷை யூரிலிருக்கும் குட்டை தீக்ஷாபண்டிதரென்கிற பெரியதீக்ஷித பண்டிதர் ... ... 4.

பெரியசாமி பண்டிதர் பிராதுக்குப்பிறகு இறந்துப்போனபடியால் ஷையார் குமாரர் சிதம்பர பண்டிதர் ... 5.

வெங்கிட்டராய பண்டிதர் ... ... 6.

வெங்காச்சமென்கிற வெங்கிடாசல பண்டிதர் ... 7.

சுப்பராயபண்டிதர் அந்திஸ்து அர்ச்சகாள் ... 8.

சின்னுவைய்யன் ... ... 9.

பெருமாளையன் ... ... 10.

ஆனை அய்யன் அந்தஸ்து ஸ்தானிகம் ... 11.

முத்திய பிள்ளை ... ... 12.

செம்புலிங்கம் பிள்ளை ... ... 13.

கிருஷ்ண பிள்ளை ... ... 14.

சிவலிங்கம் பிள்ளை ... ... 15.

நாகரத்தினம் பிள்ளை அந்தஸ்து கணக்கு ... 16.

பிரதிவாதிகள்.

முதல் பிரதிவாதியவர்களால் முக்தியார்ஞமாபெத்த கெணபதி சாஸ்திரியளுக்குக்காக வைக்கீல் சுப்பய்யர். *

இரண்டு முதலுள்ள பிரதிவாதிகளின் வைக்கீல்கள்

* கிருஷ்ணராவு 1.

* வெங்கிட்டராமய்யர் 2.

வாதி வைக்கீல் கொடுத்த பிருதில் ஆதி ஸ்ரீங்கேரி சங்கருச் சாரிசுவாமியள் உத்தேசம் 1808௵த்துக்கு முன் ஜெம்புகேஸ்வரம் கோவில் ஸ்ரீ அகிலாண்டீஸ்வரியம்மன் காதுகளில் ரூ 2000-ம் பொருமான தங்கத்தில் கெம்பு வகையரு கல்பதித்து சக்கரதாடங் கங்களை செய்து சாத்திவைத்ததாகவும் பின்பு உத்தேசம் இதுக்கு 80 வருஷமிருக்கும். ஷெ மடத்துக்கு அதிபதியாயிருந்த அபிநவ சச்சிதானந்த சுவாமியார் ஷெ தாடங்கம் அஜீரணமாயிருந்ததை துருஸ்துசெய்து வைத்ததாகவும் முதல் பிரதிவாதி தாம் சுவயமாய் மடாதிபதி போலவும், ஷெ தாடங்கங்களை துருஸ்து செய்யவேணு மென்றும் இரண்டு முதலுள்ள பிரதிவாதிகளை கைவசப்படுத்திக் கொண்டு தடங்கல் செய்வதினுலே ஷெ தாடங்கங்களை ஸ்ரீங்கேரி சுவாமியாரவர்கள் துருஸ்துசெய்து அம்மனுக்கு சாத்தும்படியாயும் அதில் பிரதிவாதிகளின் தடங்கலே நீக்கி வைக்கும்படியாயும் தீர்ப் பாக வேணுமென்று கண்டிருக்கிறது.

முதல் பிரதிவாதி வைக்கீல் கொடுத்த ஆன்சரில் ஆதி சங்கரு சாரிசுவாமியார் கலியுகம் பிறந்து 2000௵த்துக்குப்பின்பு காஞ்சீ புரத்தில் வந்து ஸ்ரீகாமாக்ஷியம்மனுக்கு ஆலயம் முதலானதுகளை ஜீர்ணோத்தாரணமும் ஷெ யம்மன் சன்னதியில் ஸ்ரீ சக்கர பிர திஷ்டையும் ஷெ ஜெம்புகேஸ்வரத்தில் அகிலாண்டீஸ்வரி யம்ம னுக்கு ஸ்ரீ சக்கர தாடங்கங்களை பிரதிஷ்டையுஞ் செய்துவைத்து அவடத்தில் மடமும் நிர்மாணம் பண்ணியிருப்பதாகவும் அந்தப் படி மேற்படி பீடத்தில் பரம்பரையாக மடங்கள் முதலானதுகளை அனுபவித்துக்கொண்டு வருகையில் ஸ்ரீ அகிலாண்டீஸ்வரி அம்ம னுடைய ஸ்ரீசக்கரதாடங்கங்களை 158௵க்கு முன்னனை அக்ஷய௵

த்திலும் 85௵க்கு முன்வந்த ஈஸ்வர௵த்திலும் அப்போதிருந்த காமகோடி பீடாதிபதிகளான சங்கராசாரி சுவாமியள் ஜீர்ணோத்தாரணஞ்செய்து அம்மனுக்குச் சாத்தியும் 1839௵க்கு சரியான விகாரி௵த்தில் காஞ்சீபுரம் காமாக்ஷியம்மன் தேவஸ்தானத்தில் ஸ்ரீசக்கர ஜீர்ணோத்தாரணம் செய்து சகல மரியாதைகளும் பெத்திருப்பதாகவும் ஜெம்புகேஸ்வரம் தேவஸ்தானத்து தர்மகர்த்தாவான 2-வது பிரதிவாதி விவாதப்படுகிற ஸ்ரீ சக்கிரதாடங்கம் ரொம்பவும் அஜீர்ணமாய் இருந்ததினாலே இந்த பிரதேசங்களில் இருக்கிற இந்துமதஸ்தர்களாகிய சாவுகார் உத்தியோகஸ்தாள் ஸ்தானிகாள் ஸ்தலத்தார் முதலானவர்களாலும் கோவில் கணக்குமுதலான அனுபோகங்களையும் விசாரித்து ௸ ஸ்ரீசக்கிரதாடங்கங்கள் முதல் பிரதிவாதியவர்களால் துறஸ்துசெய்து அம்மனுக்குச் சாத்தியிருப்பதாகவும் முதல் பிரதிவாதி காமக்கோடி பீடாதிபதியான சங்கராசாரி சுவாமியள் யென்பதற்கும் விவாத தாடங்கம் துருஸ்து செய்ய பாத்தியத்தை உண்டானவர் யென்பதற்கும் அனேக தஸ்தாவேசுகள் இருப்பதாகவும் அதுகளுக்கு விரோதமாய் வாதி ௸ தாடங்கத்தை ஸ்ரீங்கேரி சங்கராச்சாரி சுவாமியள் செய்துவைத்தது போலவும் பிறகு துருஸ்து செய்ததுபோலவும் பிராதில் சொல்லுவது பிசகென்றுங் கண்டிருக்கிறது.

இரண்டாவது பிரதிவாதிக்காக வைக்கீல்கள் கொடுத்த ஆன்சரில் விவாத சக்கிற தாடகங்கம் துரஸ்து செய்யவேண்டிய பாத்தியம் வாதியின் யெஜமானருதல்லவென்றும் ஆதி ஸ்ரீபாகவதபாதாசாரியரான சங்கராசாரியாருதென்றும் போர்ட்டார் அவர்களுடைய உத்திரவுபடிக்கி இந்த சுபா கலெக்ட்டர்துரையவர்களால் 2-வது பிரதிவாதியை 1842௵த்தில் தர்மகர்த்தாவாக நேமித்தது முதல் ஜெம்புகேஸ்வரம் தேவஸ்தானத்தினுடைய வேலைகளைப் பார்த்து வருகையில் ௸ ஸ்ரீ சக்கிரதாடங்கம் வெகு வருஷத்துக்கு முன் துரஸ்த்து செய்விக்கப்பட்டு ரொம்பவும் மலினமாயிருந்ததினாலே ௸ கோவில் ஸ்தலத்தார் முதலானவர்களாலும் ௸ தேவஸ்தானத்து கணக்கு முதலானதுகளாலும் காஞ்சீ காமகோடி பீடாதி

பதியான சங்கராசாரி சுவாமியார் அதற்கு பாத்தியஸ்தரென்றும் அவர்களால் ஜீர்ணோர்த்தாரணஞ் செய்துவிக்க வேணுமென்றும் வெகுவித ஆதிரவு அனுபோகங்களால் தெரியவந்தபோதிலும் ஷை தேவஸ்தானம் இந்துமதஸ்தர்களுக்கு முக்கியமுள்ள தாகையால் இந்தசுபாவிலிருக்கிற பாரிவர்த்தகாள் பிராசுதார்கள் பெரிய மனுஷாள் முதலான யனேகம் பெயர்களை ஷை கோவில் சன்னதியில் கூட்டிவைத்து விசாரணை செய்ததிலும் மேல்கண்டபடியே தெரியவந்ததினுலே அந்தப்படிக்கி செய்துவைத்து அம்மனுக்கு சாத்தி இருப்பதாகவும் முதல்பிரதிவாதிக்கி தாடங்க ஜீர்ணோத்தாரண பாத்தியத்துக்காக ஷை தேவஸ்தானத்தில் ரூ 5000 பொருமான மடமிருப்பதுமல்லாமல் கோவிலில் அமுதுபடி யெண்ணை முதலானதுகள் நடந்து வருவதாகவும் கண்டிருக்கிறது.

மூனுமுதல் 16 வரையில் உள்ள பிரதிவாதிகள் முதல் பிரதிவாதி ஆன்சர் தங்களுக்குஞ் சரியென்றும் தங்களை வீணாய் பிரதிவாதியில் சேர்த்திருப்பதாகவும் மேற்படி ஆன்சரின் அடியில் கண்டிருக்கிறது.

பிறுதுக்கு அனுசரணையாய் வாதி வைக்கீல் ரிப்ளையும் ஆன்சருக்கு அனுசரணையாய் பிரதிவாதிகள் வைக்கீல்களும் ரிஜாயிண்டர்களும் கொடுத்தார்கள்.

வாதி வைக்கீல் 37 சாக்ஷிகளும் 43 தஸ்தாவேசுகளுக்கும் முதல் பிரதிவாதி வைக்கீல் 21 சாக்ஷிகளுக்கும் 51 தஸ்தாவேசுகளுக்கும் 2-வது பிரதிவாதி 11 தஸ்தாவேசுகளுக்கும் சாப்தா கொடுத்து வாதி வைக்கீல் விஜாரிக்கவேண்டியதில்லையென்று ஷரு மூலமாய் அறிவித்துக்கொண்ட 24 பெயர்களையும் முதல் பிரதிவாதி வைக்கீல் விஜாரிக்கவேண்டியதில்லையென்று அறிவித்துக்கொண்ட 5 பெயர்களையும் தவிர மைத்தவர்களை ஒழுங்குப்படி விஜாரணை செய்யலாச்சுது.

வாதியின் சாக்ஷிகள்.

வைத்திலிங்க தீக்ஷதர்	... 1.	குப்பா தீக்ஷதர்	... 7.
அப்புவையன்	... 2.	ஸ்ரீகண்ட தீக்ஷதர்	... 8.
வாஞ்சி அய்யன்	... 3.	சவுந்திர பண்டிதர்	... 9.
பிரபாகற சாஸ்திரியள்	... 4.	பெருமாள்சாமிஅய்யன்	... 10
ராமய்யன்	... 5.	வெங்கிட்டராமய்யன்	... 11.
ராமசாமி சாஸ்திரியள்	... 6.	பெரியசாமி அய்யன்	... 12.
		சுப்பய்யன்	... 13.

முதல்பிரதிவாதியின் சாக்ஷிகள்.

முத்தியபிள்ளை	... 1.	உமயறபாகம்பிள்ளை	... 9.
ராமசாமிபிள்ளை	... 2.	வைத்தி அய்யன்	... 10.
நாகறெத்தினம்பிள்ளை	... 3.	சாம்பசிவவையன்	... 11.
ருமைய்யன்	... 4.	அண்ணுவையன்	... 12.
காமாக்ஷி அய்யன்	... 5.	முத்தியபிள்ளை	... 13.
செம்புலிங்க ஆசாரி	... 6.	செம்புலிங்கபிள்ளை	... 14.
அருணுசலம் பிள்ளை	... 7.	முத்தயபத்தன்	... 15.
இருளப்பிள்ளை	... 8.	வைத்திஞத குருக்கள்	... 16.

வாதியின் தஸ்தாவேசுகள்.

உள்-நெம்பர் 21-ல் தாக்கலான 1844ஹு சூலாய்மீ 22உயுள்ள திருச்சிணுப்பள்ளி சுபா அசிஸ்டாண்டு மாஜிஸ்திரேட்டு துரையவர்களால் பிறப்பிவித்த இஸ்தியார் நகல் ... 1

உள்-நெம்பர் 22-ல் தாக்கலான ஷெ துரையவர்கள் குண்டு சாலை போலீஷ் அமீனுவுக்கு யனுப்பிவித்த 1844ஹு சூலாய்மீ 22உயுள்ள சன்னது நகல் ... 2

உள்-நெம்பர் 23-ல் தாக்கலான ஷெ சுபா மாஜிஸ்திரேட்டு துரையவர்களால் பிறப்பிவித்த 1844ஹு ஆகஸ்டுமீ 1உயுள்ள இஸ்தியார்நாமா நகல் ... 3

உள்-நெம்பர் 157-ல் தாக்கலான 1838௵ பிப்ரவரி௴ 11௳ யுள்ள முசிறி தாலூகா தாசீல் குப்பய்யரால் அனுப்பின சன்னது ... 43

முதல்பிரதிவாதியால் தாக்கலான தஸ்தாவேஜிகள்.

உள்-நெம்பர் 79-ல் தாக்கலான விகுர்தி௵ கார்த்திகை௴ சுத்தபவுர்ணமி இந்துவாரத்தில் எழுதப்பட்டதாயிருக்கிற திருச்சிநாப்பள்ளிக்கு இராஜாவாயிருந்த விஜைய ரங்க சொக்கநாதநாயக்கர்அவர்களுடைய தாம்பிரசாசனம் 1

உள்-நெம்பர் 80-ல் தாக்கலான 1792௵ ஏப்பிரல்௴ 18௳ யுள்ள கும்பினியாரவர்களாலேயும் நவாபு அவர்களாலேயும் கொடுக்கப்பட்டதாயிருக்கிற ராதாரி ... 2

உள்-நெம்பர் 81-ல் தாக்கலான 1207-ம் இஜரி ரம்ஜான் ௴ 24௳ யுள்ள நவாப்சாயபவர்களுடைய ராதாரி ... 3

உள்-நெம்பர் 82-ல் தாக்கலான 24-ம் இஜரி ரஜப் மாசம் 1௳ யுள்ள நவாப்பு சத்தரல்லிகானவர்களுடைய பிரவாணு... 4

உள்-நெம்பர் 83-ம் தாக்கலான 6௵ ஜிஅஜ் மாசம் 10௳ யுள்ள ௸ சாப்த்தர் அல்லிகான் சாயபவர்களுடைய பிரவாணு ... 5

உள்-நெம்பர் 84-ல் தாக்கலான 4௵ மொகரம்௴ 27௳யுள்ள நவாப்சாயபு அவர்களுடைய பிரவாணு ... 6

உள்-நெம்பர் 85-ல் தாக்கலான 1806௵ பிப்பரவரி௴ 7௳ யுள்ள திருச்சிநாப்பள்ளி சுபாகலெக்டர் துரையவர்களுடைய பட்டா ... 7

உள்-நெம்பர் 86-ல் தாக்கலான 1823௵ ஏப்பிரல்௴ 5௳ யுள்ள ௸ பட்டா ... 8

உள்-நெம்பர் 87-ல் தாக்கலான 1838௵ ஜெனவரி௴ 19௳ யுள்ள ௸ பட்டா ... 9

உள்-நெம்பர் 88-ல் தாக்கலான 1834௵ ௸ பட்டா ... 10

உள்-நெம்பர் 89-ல் த்ாக்கலான 1828௵ ௸ பட்டா ... 11

இரண்டாவது பிரதிவாதியால் தாக்கல்செய்த தஸ்தாவேஜிகள்.

இந்த வியாச்சிய புரோசிடிங்குஸ் ஆதரவுவகையராக்களை பிறசிபால் சதர்மீனவர்கள் மிகுந்த கவனத்துடன் பார்வையிட்டு ஆலோசித்ததில் அபிப்பிராயமான தென்னவென்றல்.

ஜெம்புகேஸ்வரம் அகிலாண்டீஸ்வரி யம்மனுடைய சக்கரதாடங்கத்தை பழுதுபார்க்கவேண்டிய பாத்தியம் தன் எஜமானனுன ஸ்ரீங்கேரி சங்கராசாரி சுவாமியவருடையதென்றும் உத்தேசம் 80 வருஷத்துக்கு முன் ஸ்ரீங்கேரி மடம் ஆதீனகர்த்தர் சேதப்பட்டுப் போயிருந்த மேற்படி தாடங்கத்தைப் பழுதுபார்த்திருக்கிறதாயும் இப்பவும் சேதப்பட்டிருப்பதினலே ஸ்ரீங்கேரி மடம் சுவாமியார் பழுதுபார்க்க எத்தனப்பட்டதில் முதல் பிரதிவாதியும் மைத்த பிரதிவாதிகளும் ஒன்ருய்ச் சேர்ந்து தடங்கல் செய்கிறதினலே தன்னுடைய யெஜமானரான ஷை சுவாமியார் ஷை தாடங்கத்தைப் பழுதுப்பார்த்து ஷையம்மனுக்கு சாத்தும்படியாயும் பிரதிவாதிகள் செய்யப்பட்ட தடங்கலை ரத்தாகும்படி தீர்ப்புசெய்யவேணுமென்றும் வாதி பிருதில் சொல்லுகிருன்.

முதல் பிரதிவாதி வக்கீல் ஆன்சரில் ஷை அம்மனுடைய தாடங்கத்தைப் பழுதுபார்க்கிற பாத்தியத்தைக் குறித்து வாதியின் எஜமானனுக்கு யாதொரு சம்மந்தமில்லை யென்றும் ஆதிமுதல் முதல் பிரதிவாதிக்கி முன்னிருந்த மடாதிபதிகள் பழுதுபார்த்து வந்திருக்கிருர்களென்றும் 85 வருஷத்துக்கு முன் ஈஸ்வர வருஷத்தில் அந்தக்காலத்தில் இருந்த ஆதீனகர்த்தரான **க|மகோடி பீடாதிபதியவர்களாகிய சங்கராசாரி சுவாமியாரால்** பழுது பார்க்கப்பட்டு முன் ஒப்பந்தம் சாத்தப்பட்டிருக்குதென்றும் வாதியின் எஜமானர் வந்து பழுது பார்த்திருப்பதில்லை யென்றும் ஆகையால் பழுது பார்க்க வேண்டிய பாத்தியம் அவருடையதல்லவென்றும் விளங்குகிருர்.

மைத்த பிரதிவாதிகளும் ஷை தாடங்கத்தை பழுதுபார்க்க வேண்டிய பாத்தியம் முதல் பிரதிவாதியவர்களுக்கு இருக்கிறதென்றும் அவர் இதற்குமுன்னலே பழுது பார்த்திருக்கிருர்களென்றும் வாதியுடைய எஜமானருக்கு அந்தபாத்தியம் இல்லையென்றும் ஆன்சர் கொடுத்திருக்கிருர்கள்.

முதலாவது வாதியால் நாற்பத்திமூணு ஆதரவுகளும் முதல் பிரதிவாதியால் அன்பத்தொரு ஆதரவுகளும் இரண்டாவது பிரதி வாதியால் பதினேரு ஆதரவுகளும் ஆக நூத்தியஞ்சு ஆதரவுகள் தாக்கலாகி வாதிபக்கம் 13 சாக்ஷிகளையும் முதல் பிரதிவாதி பக்கம் 16 சாக்ஷிகளையும் விசாரிக்கப் பட்டது. இந்த வியாச்சியத்தில் தாடங்கத்தைப்பழுதுபார்க்க வாதியுடைய எஜமான் பாத்தியஸ்தரா யில்லையா ? யென்பதை உருதிப்படுத்திக்கொள்வது மாத்திரம் முக் கியமென்று தோணப்பட்டு அந்த விஷயமான இதற்கு முன்னலே யெந்த மடத்தாரால் தாடங்கம் பழுதுபார்க்கப்பட்ட தென்பதை இஸ்தாபிக்கவேண்டியதற்காக முதல் பிரதிவாதிக்கும் வாதிக்கும் பயின்றீஸ் கொடுக்கப்பட்டது.

2-வது. வாதியுடைய வைக்கீல் 177-நெ. வாக்குமூலத்தில் ஸ்ரீங்கேரி மடத்தார் பழுதுப்பார்த்ததைக் குரித்து 1176-ம் இஜிரி யில் நவாப்பு சாயப்பு அவர்களால் கொடுபட்ட இனயத்துநாமாக் களின் 64, 65-வது லெக்க அடையாளங்களுள்ள இரண்டு இனு யத்து நாமாக்களைத் தாக்கல் செய்திருப்பதாகவும் ஆனல் அதின் தமிழ் வருஷம் மாசம் தேதி சொல்லுகிறதற்காக கணக்கு இவ்வி டத்தில் இல்லாததினலே சொல்லக்கூடாமலிருப்பதாகவும் யெழுதி வைத்திருக்கிறுர். ஆகையால் அந்த ஆதரவுகள் பலமுள்ளதென்று வாதி நினைத்திருக்கிறுர் யென்றும் அதைத்தவிர அந்த விஷயத் தில் வேறே ஆதிரவுகளில்லையென்றும் தோணப்படுகிறது. ஷை இர்ண்டு ஆதிரவுகளையும் கவனமாய் பார்வையிட்டதில் 64-வது லெக்க ஆதிர்வுடைய கவரில் 1176-ம் இஜிரி ஜவ்வால்மீ 6வ-யென் றும் 65-வது லெக்க ஆதிரவுடைய கவரில் மேற்படிவூல சீயச்சுமீ 7வ- யென்றும் கண்டிருக்குது. அதுகளில் கவறு ஆதரவில் அகி லாண்டீஸ்வரி யம்மனுடைய தாடங்கத்தை பழுதுபார்க்கவேண்டி யதற்காக ஜெம்புகேஸ்வரத்துக்கு தான் வந்திருக்கிறதாய் கண்டெழு திய கடுதாசி வந்துசேர்ந்தது என்றும் 2-வது ஆதரவில் ஷை அம்ம னுடைய தாடங்கத்தைப் பழுதுபார்த்ததாயும் இப்போ வேறே யிடத்துக்கு போகிறதாயும் நீர் அனுப்பிவித்த கடுதாசி வந்து சேர்

ந்து தென்றும் யெழுதப்பட்டிருக்குது. வாதி தன்னுடைய மடத்தார் 80 வருஷத்துக்கு முன் பழுதுபார்த்ததைக் குறித்து அந்த ஆதிரவுகள் முக்கியமானதென்று யெண்ணுகிறுர். ஆனுல் அடியில் விவரித்திருக்கிற சில காரணங்களால் அந்த ஆதிரவு நிஜமானதென்று பிரன்சிபால் சதர்மீனவர்களால் நம்பப்படவில்லை பின்னும் அது நிசமானதென்று யெண்ணக்கூடாததாயு மிருக்குது அதெப்படியென்றுல்.

முதலாவது. முன்னிருந்த அனேக துரைத்தனத்தார் பறவாணுக்கள் உத்திரவு முதலானதுகள் பேரில் இப்பேர்ப்பட்ட * ஒரு அடையாளம் போடுகிறது வழக்கமாய் இருக்குது பின்னுங் கவர் வேறேயாயும் அதின் உள்ளே இருக்கிற கடுதாசி வேறேயாயும் அந்த கவரின்பேரில் கொஞ்சம் அகலமுள்ள நிகளமான **கமர்பந்து** யென்று சொல்லுகிற ஒரு துண்டைச்சுருட்டி அதின்பேரில் கைமுத்திரை வைக்கிறது மாமூலாயும் வழக்கமாயும் இருக்குது இந்த விஷயத்தில் அந்த கவரில் வேறே கடுதாசி போடுகிறதாவது அல்லது மேலே சொல்லப்பட்ட **பயிஜெங்கிற** அடையாளம் வேறே மனுஷன் போடுகிறதாவது மிகவும் சுளுவானகாரியமாயும் ஒரு சிருவயதுள்ள பையனுல் அப்படி செய்யப்படுவது கூடுமானதாயும் இருக்குது. மேலெழுதிய இரண்டு ஆதிரவுகளான இனுயத்து நாமாக்களும் அப்படியே யிருக்குது. ஏனென்றுல் உள்வயணத்திலிருக்கிற கடுதாசி வேறேயாயும் கவர் வேறேயாயுமிருக்கிறதுமல்லாமல் அந்த கவர் கடுதாசிக்கி சேர்ந்ததாயிருக்கவில்லை பின்னுங் கவரில் **சங்கராசாரியா** ரென்று மாத்திரம் யெழுதப்பட்டிருப்பதினுலே அந்தகவர் அதுதானென்றும் அல்லது அந்தக்கடுதாசி அந்தகவரிலிருந்த கடுதாசிதானென்றும் அல்லது அதில் போடப்பட்டிருக்கிற பயிஜ் யென்கிற அடையாளம் நவாப்சாயப் அவர்களுடைய பயிஜென்றும் யெவ்விதமாய் நம்பக்கூடும்.

* (அசலில் பயிஜியென்று துலுக்கில் ஒரு அடையாளக் குறிப்பு காட்டிருக்கிறது.)

2-வது. இதுவுந்தவிற துரைத்தனத்தாரால் கடுதாசிகளில் வைக்கப்பட்ட கையெழுத்துகளாவது அடையாளங்களாவது ஒரே விதமாயிருக்குமேயல்லாமல் ஒன்றுக்கொன்று வித்தியாசப்பட மாட்டாது. இந்த இரண்டு ஆதிரவுகளில் போடப்பட்ட பயிஜ் யென்கிற அடையாளம் ஒன்றுயிருக்கவில்லை பின்னும் அது ஒருவ ராலேயே போடப்பட்ட கையெழுத்துயென்று நினைக்கக்கூடாததா யிருக்கிறது.

3-வது. பின்னும் ஒவ்வொரு மனிதன்பேரால் இனுயித்து நாமா முதலானதுகள் துரைத்தனத்தாரால் பிறப்பிவிக்கிறது எப் போதெழுதப்பட்டிருந்தபோதிலும் ஒன்றுக்கொன்று வித்தியாசப் படாமல் ஒரேவிதமாய் இருக்கிறது வழக்கமாயிருக்கிறதே யல்லா மல் பலதடவைகளில் வேறேவிதமாய் எழுதுகிறது அவர்களுடைய வழக்கத்துக்கு விரோதமாயிருக்கிறது. அப்படியிருக்க கெடி இர ண்டு ஆதிரவுகளில் ஒன்றுக்கு ஒன்று வித்தியாசப்பட்டிருக்கிறது. எப்படியென்றுல் 64-வது லெக்க ஆதிரவுடைய கவரில் **சங்கராச்சரி** என்று மாத்திரம் கண்டும் 65-வது லெக்க ஆதிரவினுடைய கவரில் **ஸ்ரீங்கேரி சங்கராச்சாரியா** ரென்றும் யெழுதப்பட்டுமிருக்குது. அப் படியே உள் வயணக்கடுதாசிகளும் ஒன்றுக்கொன்று வித்தியாசமா யிருக்குறது. தவிர முதலாதிரவில் உள்வயணத்தில் யார்பேரால் எழுதப்பட்டிருக்குதோ அந்த மனிதனுடைய பெயர் காணுமலும் 2-வது ஆதரவில் **ஸ்ரீங்கேரிச்சாரியா** ரென்றும் யெழுதப்பட்டிருக் குது துரைத்தனத்தார் யெழுதுகிற ஒழுங்கில் இப்பேர்ப்பட்ட வித் தியாசம் எப்போதும் நேரிடமாட்டாது. பின்னும் ஒவ்வொரு மனி தனுக்கு யிவ்விதமாய் எழுதவேணுமென்று போக்குகளில் யெழுதி வைக்கிறது மாருத வழக்கமாயிருக்குது.

4-வது. பின்னும் இரண்டு கடிதாசிகளுடைய கவரிலும் முத் திரையுடைய சித்திரமாத்திரம் காணப்படுகிறதேயல்லாமல் அதி லிருக்கிற எழுத்துகளினுலே அந்த முத்திரை நவாப் முத்திரை யென்றுவது அல்லது வேருெருவனுடைய முத்திரையென்றுவது அந்த முத்திரையினுடைய **ஸ்திதியினுல்** காணப்படவில்லை. ஆகை

யாலும் வாதிசொல்லுகிறபடி அது நவாப் வாலாஜா அவர்களுடைய தென்று நினைக்கக்கூடாததாயிருக்குது.

5-வது. மேல்கண்டிருக்கிற காரணங்களைத் தவிர பின்னும் ஒரு பலமான குறிப்பு பிரன்சிபல் சதிரமீன் அவர்களுக்கு தோணப் படுகிறது. அதாவது நவாப் சாயபுமார்கள் யார்பேருல் இனயத்து நாமா பிறப்பிவிக்கிருர்களோ அதினுடைய கவருக்கும் கமர்பந்து இல்லாமல் யெழுதப்படுகிற வழக்கமில்லை. ஏனென்றுல் அது முன் னிருந்த துரைத்தனத்தாருடைய பிருதாயிருந்தது. கவரும் கமற்பந் தும் போட்டதற்கு ஒருபக்கத்தில் மேல்வக்கணையும் யெந்த மனிதன் பேருல் யெழுதிக் கொடுக்கப்படுகுறதோ அவன் பெயரும் மைத் தொரு பக்கத்தில் கோந்து ஒட்டி முத்திரை வைக்கிறதும் ஒரு வேளை கமற்பந்து போடாதபோதிலும் மேல்கண்டபடிக்கி ஒரு பக் கத்தில் பெயரும் மைத்தொருபக்கத்தில் முத்திரையும் போடுகிறது மாருத வழக்கமாயிருந்த சங்கதியும் பிறன்சிபால் சதர்மீனவர்களு க்கு செம்மையாய் தெரிந்திருக்குது. அந்த சங்கதி தெரியவேண்டி யதற்காக உள் 31-வது லெக்க அடையாளமுள்ள ஒரு நமூனவை இந்த நெம்பர் கட்டில் வைக்கப்பட்டிருக்குது. இந்த விஷயத்தில் ஷை இரண்டு கடுதாசிகளுடைய கவரும் ஷை வழக்கத்துக்கு நேரே விரோதமாயிருக்குது. கமற்பந்து இல்லாமல் இருக்கிறதையும் ஆலோசிக்காமல் போனலும் யெந்த மனிதன் பேரால் பிறந்திருக் குதோ அந்த மனிதனுடைய பெயர் கவரில் யெந்த இடத்தில் எழு தப்பட்டிருக்குதோ அந்த இடத்தில் தானே முத்திரையும் போடப் பட்டிருக்குது. இது ஒருபோதும் கூடாதகாரியமா யிருக்குது. ஏனென்றுல் எந்தமனிதன் பெயருல் பிறந்திருக்குதோ அந்தமனித னுடைய பெயர் முதலில் எழுதப்பட்டு அதற்கு அடியில் நவாப் சாயபவர்கள் முத்திரை போடுகிறது யெவ்வளவும் கூடுமான காரி யமா யிருக்கவில்லை. ஏனென்றுல் அப்படி செய்வதில் அவாளுக்கு அவமானத்துக்கு இடமாயிருக்குது. அவர்களுடைய தருவாயிருக் கிற விஷயத்திலும் அல்லது வேறே யாதொரு பெரிய மனுஷாளா யிருந்தபோதிலும் யெப்பவும் அந்தபடி எழுதப்படமாட்டார்கள்.

பின்னும் இந்த கவர்களில் இருக்கிறபடித்கி கோந்து ஒட்டி இருக்கிற பக்கத்தில்யார் பேரால் இனுயித்துனுமா பிறந்திருககுதோ அவன் பெயர் எழுதுகிறது இல்லாத காரியமாயும் வழக்கத்துக்கு நேரே விரோதமாயும் யிருக்குது. ஆகையால் எந்த மனுஷனுக்கு இந்த வழக்கங்களும் தந்திரங்களும் தெரியாமலிருக்குதோ அப்பேர்ப்பட்ட மனிதன் நவாப்சாயபு அவர்களுடைய முத்திரையென்று தெரியவேண்டியதற்காக அந்த கவரில் முத்திரை போட்டிருக்கிறேனே யல்லாமல் வேறே நிமித்தியமில்லே யென்றும் அல்லது அந்தக் காலத்திலிருந்த முன்ஷீகளுடைய தெரியாமை யென்றும் அவர்களுடைய பிசகு யென்றும் எவ்வளவும் தோணவில்லே.

6-வது. மேலெழுதிய சகல காரணங்களால் அந்த இரண்டுக் கடுதாசிகளும் நவாப் சாயபுவர்களால் ஸ்ரீங்கேரி சங்கராசாரியார் பெயருக்குப் பிறந்ததல்லவென்று பிரன்சிபால் சதர்மீனவர்கள் நிச்சியமாய் சொல்லக்கூடுமானதாயிருக்குது.

3-வது. வாதியால் தாக்கலாயிருக்குற ஸ்ரீங்கேரி சுவாமியள் மடத்துக்கு இனுமாக விடப்பட்ட 10 காணி நிலத்தைக்குறித்துப் பிறந்திருக்கிற 149-வது லெக்க அடையாளமுள்ள ஆதிரவுகளும் அதேவிஷயத்துக்காக பிறந்திருக்கிற 150 151 இந்த லெக்க அடையாள ஆதிரவுகளும் முதல் பிரதிவாதியால் தாக்கலான கிராமங்கள் இனும் கொடுத்ததைக்குறித்து பிறந்திருக்கிற 79-வது லெக்க ஆதிரவும், பின்னும் இதே விஷயத்தில் 82 முதல் 90 வரைக்குமுள்ள 9 ஆதிரவுகளும் தாக்கலாயிருக்குது. வாதியுடைய எஜமானரும் முதல் பிரதிவாதியும் அவர்களுக்கு முன்னிருந்த சுவாமிகளும் இனும் தருமமுதலானதுகளே பெத்துகொள்ள தகுந்தவர்களான நிலேயும், பின்னும் இப்பேர்ப்பட்டவர்களுக்கு கெண்ணியத்துக்காக நவாப்பு இராஜா வகைறுக்களால் இப்பேர்ப்பட்ட இனும்கள் கிடைக்கிறது வழக்கமாயிருக்கிறநிலேயும் இந்த ஆதிரவுகளில் தாடங்கத்தைக் குறித்து யாதொரு பிறஸ்தாபங்காணுமலிருக்கிற நிலேயும் இந்த ஆதிரவுகள் இந்த வியாச்சியத்துக்கு சம்மந்தப்பட்டு இருக்கவில்லே. அதுகளால் தாடங்கத்தைப் பழுதுபார்க்க

வேண்டிய பாத்தியம் வாதியுடைய யெஜமானருக்குயிருக்குதென்று காணப்படவில்லை.

4-வது. வாதி பக்கம் தாக்கலான 66 முதல் 72 வரையிலும், 75 முதல் 77 வரையிலும், 152 முதல் 157 வரையிலும் தாக்கலாயிருக்கிற ஆதிரவுகளும் வாதியுடைய எஜமானரும் அவருக்கு முன்னிருந்த ஸ்ரீங்கேரி மடத்து சுவாமியளுடைய கெண்ணியத்தைக் குறித்தும் மரியாதைகளையும் யோக்கியதைகளையும் குறித்துங் கண்டிருக்குது. அப்படியே முதல் பிரதிவாதியால் தாக்கலான 80, 81, 91, 93, 94, 101 முதல் 107 வரையிலும் 136 முதல் 147 வரையிலும் 159 முதல் 161 வரையிலும் 163 முதல் 165 வரையிலும் இருக்கிற லெக்க அடையாளமுள்ள ஆதிரவுகளும் முதல் பிரதிவாதியும் அவருக்கு முன்னிருந்த கும்பகோணத்து சுவாமியளுடைய கெண்ணியத்தையும் மறியாதைகளையும் யோக்கியதைகளையும் குறித்து கண்டிருக்குது. அதுகளில் 147-வது லெக்க ஆதிரவான செங்கல்பட்டு ஜில்லா கலெக்ட்டரவர்களால் காஞ்சீபுரம் தாசில்தார் பேருக்கு பிறந்த சன்னதில் முதல் பிரதிவாதி பாரி அந்திஸ்துள்ளவர்களென்றும் கெண்ணியம் பெத்தவர்களென்றும் அவருக்கு அதிக மரியாதையும் வெகுமானமும் செய்ய வேணுமென்றுங் கண்டிருக்கிறது மேல்கண்டிருக்கிற தஸ்தாவேசுகளால் ஸ்ரீங்கேரி கும்பகோணம் இரண்டு மடத்து சுவாமிகள் கெண்ணியமுள்ளவர்களென்றும் மரியாதை யுள்ளவர்களென்றும் தெரியவருகிறபடியினாலே அந்த சங்கதியை பிரன்சிபால் சதர்மீனவர்களும் ஒப்புக்கொள்ளுகுறார்கள். அதைக் குறித்து யாதொரு ஆக்ஷேபனைக்கும் யிடமில்லை. ஆனால் அந்த நிமித்தியத்தினாலே விவாதப்படுகிற தாடங்கத்தைப் பழுதுபார்க்கிற பாத்தியம் வாதியுடைய யெஜமானருக்கு உண்டாயிருக்குதென்று நிச்சயப்படாமலிருப்பதினாலே ஷை ஆதிரவுகள் வாதியுடைய வழக்குக்கு உபயோகமில்லை யென்று தோணப்படுகிறது.

5-வது. அயிதராபாத்து நவாப்சாய்பு அவர்களுடைய அதாலத்து கோரட்டில் பஞ்சாயத்தார் செய்ததா யிருக்கிற 73-வது

லெக்கமுள்ள தீர்ப்பும் அதைக்குறித்து பிறந்த 74-வது லெக்க முள்ள இஸ்திபாருப் வாதியால் தாக்கலாயிருக்குது. அதுகள் ஸ்ரீங் கேரி மடத்தாருக்கும் கூடலி மடத்தாருக்கும் நேரிட்ட தகறார் களைக் குறித்து பிறந்திருக்கிற தீர்ப்பாயிருக்குதே யல்லாமல்; முதல் பிறதிவாதி மடத்தைக் குறித்து சம்மந்தப் பட்டதல்ல. ஆகையால் அந்த தீர்ப்பு முதல் பிரதிவாதிகளுக்காவது இந்த தாடங்கத்தைக் குறித்தாவது சம்மந்தப்பட்ட வில்லை.

6-வது. வாதி பக்கம் விசாரணையான 13-சாக்ஷிகளில் முத லாவது. 13-வது சாக்ஷிகள் ஷெ தாடங்கத்தை ஸ்ரீங்கேரி மடத்து சுவாமியார் பழுதுபார்த்ததாயும் தாங்கள் அதை பார்த்திருக்கிற தாகவும் மைத்த சாக்ஷிகள் அந்த சங்கதியை தங்கள் பின்னோர்கள் சொல்லக் கேழ்விப்பட்டதாகவும் சாக்ஷிசொல்லுகிறார்கள் 1-வது சாக்ஷி தனக்கு இப்போது 96 வயதென்றும் 13-வது சாக்ஷி தனக்கு 95 வயதென்றும் சொல்லி அந்த காலத்தில் தாங்கள் 10-வயதுள்ள வர்களா யிருந்ததாக சொல்லுகிறார்கள். அவர்களுடைய வாக்கு மூலங்களில் கண்டிருக்கிற மைத்த சந்தேகங்களை ஆலோசிக்காமல் போனாலும் தாங்கள் 10 வயதுள்ளவர்களா யிருந்தகாலத்தில் இப் போதைக்கி 85 ௵த்திற்கு முன் நடந்தசங்கதி யென்று ஞாபகம் வைக்கிறதும் அதன் விபரம் சொல்லுகிறதும் நினைப்புக்கு எட்டாத தாயும் சந்தேகத்துக்கு இடமாயிருக்கிறதே தவிர முதல் சாக்ஷிக் காரன் சொன்னது நிஜம் அல்ல யென்பதற்க்காக, பலமான பின் னும் ஒரு திருஷ்டாந்தரம் இருக்குது அது என்னவென்றால் இந்த சாக்ஷிக்காரன் 1837-ம் ௵த்தில் மாஜிஸ்திரேட்டு முன்பாக யெழுதிவச்ச 229 வது லெக்க அடையாளமுள்ள வாக்குமூல நகலை முதல் பிரதிவாதி தாக்கல் செய்திருக்கிறார். அதில் இப்போதைக்கி கர௵த்துக்கு முன்னாலே இந்த சாக்ஷிக்காரன் தனக்கு 80 வய தென்று சொல்லியிருக்குறான். அந்த கணக்குப்படிக்கி இந்த சாக்ஷிக்காரன் இப்போது 89-வயதுள்ளவனா யிருக்கிறபடியினாலே தான் பார்த்ததாக சொல்லுகிறகாலத்தில் இவனுக்கு 3 வயதும் 222-வது லெக்க அடையாளமுள்ள ஆதிரவால் அந்த சமயத்தில்

இவன் பிறந்து மாத்திரம் யிருப்பானென்று தெரியவருகிறபடியி
னாலே இவன் சொல்லுகிறது யெப்படி நிஜமாயிருக்கும்? அப்
படியே தங்கள் முன்னோர்களால் கேழ்விப்பட்டதாய் சொல்லுகிற
மைத்த சாக்ஷிகள் கேழ்விப்பட்டவர்களா யிருக்கிறதை ஆலோசிக்
காமல் போனாலும் அப்படியே அவர்களுடைய ருசுவும் சந்தேக
முள்ளதாயிருக்கிறதுமல்லாமல் இன்ன சுவாமியாரால் இன்ன வரு
ஷத்தில் பழுது பார்க்கப்பட்டதென்று கேழ்விப்பட்டதாக யாதொரு
சாக்ஷியாலும் நிச்சயமாய் வெளியாகவில்லை இதுவும் அல்லாமல்
64, 65 இந்த லெக்க ஆதிரவுகளில் 1176-ம் இஜிறி யென்று யெழு
தப்பட்டிருக்கிறபடியினாலே அந்த கணக்கால் இப்போ நடக்கிற
1262-ம் இஜறி வரைக்கும் 86௵ மாகுறபடியினாலே அதர்க்கு
சரியாகவேணுமென்று இந்த 1-வது 13-வது சாக்ஷிகள் அப்படி
சொல்லி இருப்பார்களென்று தோணுகுது. ஆனால் சந்திரன் கணக்
குள்ள 31-௵த்துக்கு சூரியன் கணக்குள்ள ௵-ம் 30-௵மா
குது தெளிவாயும் அறிந்தவர்களுக்கு பிரகாசமாயும் இருக்குது
இந்த நிமித்தியத்தினாலே சந்திரன் கணக்குப்படிக்கான 86௵த்
தில் 3௵ கழித்துப்போட்டால் சூரியன் கணக்குப்படி 83௵
மாகுது. அதினாலே 1-வது 13-வது சாக்ஷிகள் பார்த்ததாகவும்
அவர்களுடைய வயதும் அதில் விசேஷமாய் முதல் சாக்ஷிக்காரன்
சொல்லுகிறதும் 64, 65 இந்த லெக்க ஆதரவுகளில்கண்ட மத்தளிப்
புக்கும் பின்னும் இந்த ஆதரவுகள் 222-வது அடையாளமுள்ள
கணக்கும் நேரே விரோதமாயிருக்குது இந்த சாக்ஷிகளுடைய சாக்ஷி
யை நிஜமானதென்று யேத்துக்கொள்ளுகிற விஷயத்தில் ஸ்ரீங்கேரி
மடத்துசுவாமியார் அந்த வருஷத்தில் பழுது பார்த்திருக்கிறதைக்
குறித்தும் தன் கக்ஷிக்கும் மிகவும் பலமுள்ளதென்று நிச்சயமாய்
வாக்கு மூலத்தில் சொல்லி யெழுதி வைத்திருக்குற ஷை ஆதரவு
களைப் பொய்யாக்குது இந்த நிமித்தியங்களால் ஷை சாக்ஷிகள்
சொல்லுகிற ருசுவும் ஷை ஆதரவுகளும் நம்பக்கூடாததாயிருக்குது
வாதியுடைய வழக்கு அவருடைய ஆதிரவுகளினாலேயும் சாக்ஷி
களாலேயும் ரூபிக்கப்படாம லிருப்பதினாலே முதல் பிரதிவாதி

யுடைய சாக்ஷிகளுடைய விபரத்தைக் காட்டவேண்டியது அவசர மென்று பிரன்சிபால் சதர்மீனவர்கள் அபிப்பிராயப்பட வில்லை.

7-வது. தாடங்கத்தைப் பழுதுபார்க்கவேண்டிய பாத்தியம் ஸ்ரீங்கேரி மடத்தாருக்கு யிருக்குமென்று வேரேமனிதர்களால் ரெவினியூபோரட்டு முதலான இடங்களுக்கு அனுப்பப்பட்டும் இந்த சங்கதியில் அவர்கள் பிரவேசிக்க மாட்டோமென்றும் அதை கலெக்டர் இடத்தில் சொல்லிக்கொள்ள வேணுமென்றும் இன்டார்சுடன் இருக்கப்பட்ட சில மனுக்களுடைய நகல்களும் பின்னும் தாடங்கத்தைப் பழுதுபார்க்கவேண்டிய பாத்தியம் யாருடையதென்று, விஜாரித்து தெரியப்படுத்த வேணுமென்று திருச்சிணுப்பள்ளி ஜில்லா கலெக்டர் அவர்களால் தேவஸ்தானம் ஹேட் பேஷ்காருக்கு அனுப்பப்பட்ட உத்திரவுக்கு நகலும் சில பெயர்கள் அந்த பாத்தியதை ஸ்ரீங்கேரி சுவாமிகளுக்கு பாத்தியமென்று கொடுத்த வாக்குமூலங்களைக்கண்டு ஷை பேஷ்கார் கலெகட்டர் அவர்களுக்கு யெழுதிக்கொண்ட அர்ஜிக்கி நகலும் இப்பேர்ப்பட்ட சில ஆதிரவுகள் வாதியால் தாக்கலாயிருக்குது. அப்படியே ஷை தாடங்கத்தைப் பழுதுபார்க்க வேண்டிய பாத்தியம் கும்பகோணமடத்து சுவாமியாருக்கு இருக்குமென்று ரிவினியூபோர்ட்டுக்கும் கவர்ன்மெண்டாருக்கும் அனுப்பப்பட்ட அர்ஜிகளும் அந்த சங்கதிகளைக் குறித்து தானே இன்னும் அனேகம் பெயர்களால் யெழுதிக்கொண்ட ஆதிரவுகளும் முதல் பிரதிவாதியால் தாக்கலாயிருக்குது பின்னும் ஸ்ரீரெங்கம் ஜெம்புகேஸ்வரம் இதுகளுக்கு கலெக்டரவர்களால் நேமுகமான தர்மகர்த்தாவாயிருக்கிற 2-வது பிரதிவாதியால் கும்பகோணம் மடத்து சுவாமியாருன முதல் பிரதிவாதிக்கி அந்தபாத்தியம் இருக்குமென்பதைக் குறித்து பிறந்திருக்கிற அனேக ஆதிரவுகளை ஆஜர்செய்யப்பட்டு இருக்குது ஆனல் விசாரணையில் தெரிய வந்த சங்கதிகளினுலேயும் ஆதரவுகளை பார்வையிட்டதினுலேயும் 1838ௐ முதல் இந்த தகரார் நேறிட்டு ஸ்ரீரங்கத்திலும் ஜெம்புகேஸ்வரத்திலும் இருக்கிறவர்கள் இருகக்ஷியாகி சில பெயர் வாதி பக்கத்திலும் கொறைப்பெயர் முதல் பிரதிவாதி பக்கத்திலும் கூடி

யிருக்கிறார்கள் யென்றும் வாதிபக்கமாய் இருக்கிற அந்த மனிதர்களே, ரிவினியூபோரட்டுக்கும் கலெகட்டர் முதலானவர்களுக்கும் வாதியின் எஜமானருக்கும் பாத்தியமுண்டென்பதைக்குறித்து மனுக்கள் கொடுப்பிவித்து சாக்ஷியுஞ் சொல்லியிருக்கிறார்களென்றும் காணப்படுகுது ஸ்ரீங்கேரி மடத்து சுவாமிக்கு பாத்தியம் இருக்குதென்பதைக் குரித்து வாதியால் தாக்கலாயிருக்கிற ஆதிரவுகள் 38ஸ்ரீ த்துக்குப்பிரகான சச்சரவு ஆறம்பித்தபின்பு யெழுதப்பட்டிருக்குது. பின்னும் கலெக்ட்டர் அவர்கள் அர்ஜிக்கும் மாஜர்நாமா முதலானதுகளும் கொடுப்பட்டிருக்க அந்த விஷயத்தை நிச்சயிக்காமலும் வாதியுடைய பாத்தியத்தை நிற்ணயிக்காமலும் யாதொரு உத்திரவு கொடாமலும் தாடங்கம் துறுஸ்துசெய்குற விஷயத்தில் உபயத்திராளும்கூடி யேக மனதாய் தீர்மானம் செய்துக்கொள்ளவேணுமென்றும் இதர்க்கு விறோதமாய் உபயத்திறுளில் ஒருவரும் நடக்கக்கூடாதென்றும் 31-வது லெக்க அடையாளமுள்ள ஒரு இஸ்தியார் புறப்பிவித்திருக்குறார். ஆகையால் சச்சரவு ஆறம்பித்த பின்பு விறோத நிமித்தியத்தினாலே யெந்த ஆதரவுகள் பிறந்திருந்தபோதிலும் அந்த ஆதரவுகள் நம்பக்கூடாததாயும் ஞாயவிறோதமாயும் இருப்பதினாலே அந்த ஆதரவுகளினால் வாதிக்கி உபயோகமிருக்குதென்று நினைக்ககூடாததாயிருக்குது. பிறுதை ஸ்தாபிக்க வேண்டியது வாதியுடைய காரியமாயிருந்ததினாலேயும் மேலெழுதிய காரணங்களால் ருசுவாகாமலிருக்குறதுனாலேயும் முதல் பிரதிவாதியுடைய ஆதிரவுகளையும் சாக்ஷிகளுடைய ருசுக்களையும் விவரிக்கவேண்டிய அவசரம் காணப்படவில்லை.

8-வது. ஜெம்புகேஸ்வர தேவஸ்தானத்தினுடைய கணக்காயும் சாக்ஷிகளால் ருசுவாயுமிருக்கிற 222-வது அடையாளமுள்ள ஆதரவில் ஷை தாடங்கம் ஈசுவரஸ்ரீ புரட்டாசிமீ 29உ **சங்காராசாரியாறால்** பழுதுப் பார்க்கப்பட்டதென்றும் அதற்காக தங்கம், சிகப்பு, பச்சை முதலானதுகள் சிலவாயிருக்குதென்றுங் கண்டிருக்கிறது. அந்த கணக்கில் அப்படிப் பழுதுப் பார்த்தது ஸ்ரீங்கேரி சங்கராசாரியறுலென்றுவது கும்பகோணம் சங்கராசாரியறுலென்று

வது கண்டிருத்ததினலே நிற்ணயிக்கக்கூடாமல் போனாலும் இதர்க்கு முன்னலே ஈஸ்வர வருஷத்துக்குச் சரியான 1757 வருஷத்தில் ஷெ தாடங்கத்தைப்பழுது பார்க்கப்பட்டதென்று நினைக்கப் போருமானதாயிருக்குது அந்த கணக்குப்படிக்கி ஷெ தாடங்கம் பழுது பார்க்கப்பட்டு 89 வருஷமாகுது இந்த விஷயத்தில் 6-வது கலத்தில் விவரித்திருக்கிறபடி வாதி பக்கத்தில் 1-வது 13-வது சாக்ஷிகளுடைய சாக்ஷியையும் 64, 65 இந்த லெக்க அடையாளமுள்ள ஆதிரவுகளையும் எவ்விதமாய் நிஜமென்று நம்பக்கூடும். ஒன்றுக்கொன்று சந்தர்ப்பமில்லாமல் வித்தியாசமா யிருப்பதினலேயே அந்த சாக்ஷிகளினலேயும் ஆதரவுகளினலேயும் வாதிக்கி யென்ன பிரயோஜனம் உண்டாகும்? பின்னும் அந்த இரண்டாதிரவுகளும் ஷெ 222-வது லெக்கமுள்ள கணக்குக்குச் சம்மந்தம் இல்லாமல் விரோதப்பட்டிருக்குது. 229-வது லெக்கமுள்ள ஆதரவு இந்த சங்கதிக்கிப் பலமுள்ளதாயிருக்குது. மேல் எழுதிய சகல திஷ்டாந்திரங்களால் **வாதியுடைய வழக்கு ருசுவாகாத்தினலே தள்ளுபடி செய்யப்பட்டது.** விபாச்சிய சிலவு முழுவதும் வாதியே கொடுக்க வேண்டியது.

இந்த தீர்ப்பைக்குறித்து உபயவாதிகளில் ஒருவருக்கொருவர் கவுல்கரார் செய்துகொள்ளுகிறதாயிருந்தால் கோர்ட்டு முன்பாக செய்துக்கொள்ளவேணும் அப்படிக்கில்லாமல் தாங்களாய் செய்துக்கொண்டதுபோல் அறிவித்துக்கொண்டால் ஒப்புக்கொள்ளத்தக்கதில்லை.

முதல் பிரதிவாதிக்கி வாதி கொடுக்கவேண்டியது.

அச்சுகடுதாசிகளின் கிறயம்	...				29	4	0
கட்டளைகளின் படி ...	...				2	12	0
வக்கீல் பீஸ் ...	...	100	0	0—	132	0	0

இரண்டு முதலுள்ள பிரதிவாதிகளுக்கு வாதி கொடுக்கவேண்டியது.

அச்சுகடுதாசிகளின் கிறயம் ...		7 4 0
வக்கீல் கிருஷ்ணறுவு முக்கால் பங்கும் வெங்கடராமய்யர் கால்பங்குமாக பத்திக்கொள்ள வேண்டிய பீஸ் ...	100 0 0	—107 4 0
ஆ துகை.		239 4 0

வாதி இழந்துபோன சிலவு.

பிறுது முதலான அச்சுகடுதாசிகளின் கிறயம்		131 0 0
கட்டளைகளின் படி		6 0 0
வக்கீல் பீஸ் ...	100 0 0	—237 0 0

1846-ம் வரு அக்டோபர்மீ 17உ இந்த தீர்ப்பு செய்யலாச்சுது.

ஷை ஸ்ரீ 29உ திருச்சிறுப்பள்ளி ஜில்லா பிரன்சிபால் சதர்மீன் கோரட்டு வீட்டில் நம்முடைய கையொப்பமும் கோரட்டு முத்திரையும் போடலாச்சுது.

இந்த தீர்ப்பின்பேரில் மேற்படி வரு நவம்பர்மீ 28உ அப்பீல் கெடுவு முடிவாகுது.

இந்த தீர்ப்பு எட்டு கடிதங்களில் தயார்செய்யப்பட்டிருக்கிறது.

(அசலுக்குச் சரியான நகல்.)

(Signed in Hindustani) **SYED GEEYAWOOD ZEEN.**

Principal Sudder-Ameen.

29*th October* 1846.

TRUE COPY.

(Signed) THEENADAYALU NAIDOO,

Sheristadar.

Copied by
M. Azeemuddin.

Compared
R. Ramasamy Iyer.

(SEALED) DISTRICT COURT OF TRICHINOPOLY.

DECREE OF THE CIVIL COURT OF TRICHINOPOLY.

O. S. No. 95 of 1844.

BEFORE THE PRINCIPAL SUDER AMEEN.

Plaintiff:

Sasha Josier, the Vakeel of Sree Sunkara Aucharry Swamy Nursimma Baurthaswamy, the Singaree Madathyputhy, residing in Singaree, in the Taluk of Coopum in Nagaram.

Vakeel Krishnah Sastry.

vs.

Defendants:

1. The Chundrasagara Baurathy Swamy or—as stated in the 1st defendant's motion—Caunjy Camacotte Peetathypathy *alias* Chundra Sagara Saraswathy Swamy.
2. Chundrasagara Pillay, one of the Trustees of the Jemboocaswara Pagoda, and after his death his adopted son Auvadiapillai.
3. Iyyagulier Jembooputhy Deetchater, and after his death his heir and the son of his father's brother Krishnah Deetchater *alias* Mahadava Deetchater.
4. Cootte Deetchah Panditer *alias* Parea Deetchah Panditer.
5. Parea Swamy Panditer, and after his death his son Chedumbara Panditer.
6. Vencatroya Panditer.
7. Vengachum *alias* Vencatachellah Panditer.
8. Soobaraya Panditer.
9. Sennoovien.
10. Perumalien.
11. Annien.

12. Mootea Pillay.
13. Jemboolinga Pillay.
14. Krishnum Pillay.
15. Sevalingum Pillay.
16. Nagaruthnum Pillay.

Vakeel of 1st defendant's Agent Ganapathy Sastry.

Vakeel Soobier.

Vakeels of the defendants from the 2nd to the 16th.

Krishnah Row and Venkataramien.

Appeal No. 109 of 1846.

BEFORE THE CIVIL COURT.

Appellant:

Sasha Josier, the Vakeel of Sree Sankara Auchary Swamy Nursimma Bauratha Swamy, the Singaree Madathypathy, residing in Singaree, in the Taluk of Coopum in Nagaram.

Vakeel Subtarishy Sastry.

vs.

Respondents:

1. The Chundrasagara Baurithy Swamy or—as stated in the 1st defendant's motion—Caunjy Camacotee Peetathyputhy *alias* Chundra Sagara Saraswathy Swamy.
2. Chundrasagara Pillai, one of the Trustees of the Jemboocaswara Pagoda, and after his death his adopted son Auvadia Pillay.
3. Iyyagulier Jemboopathy Deetchater, and after his death his heir and the son of his father's brother Krishna Deetchater *alias* Mahadava Deetchater.
4. Cootee Deetchah Panditer *alias* Peria Deetchah Panditer.
5. Pereaswamy Panditer, and after his death his son Chedambara Panditer.
6. Vencatrayah Panditer.

7. Vengachim *alias* Vencatachella Panditer.
8. Soobarayah Panditer.
9. Sennoovien.
10. Peroomalien.
11. Annien.
12. Mootea Pillay.
13. Jemboolinga Pillay.
14. Krishnum Pillai.
15. Sevalingam Pillai.
16. Nagarathnam Pillai.

Vakeel of the defendants—Soobier.

This suit was first tried as O. S. No. 95 of 1844, on the file of the Principal Suder Ameen, the cause of action being the privilege of repairing the earrings of the Sree Agelandaswamy Ummon idol of the Jemboocaswarah Covil, the plaintiff claiming as Singaree Madathypathy and the 1st defendant contesting the claim as Caunjy Camacottee Peedathypathy under the circumstances severally mentioned in the plaint and in his answer.

The 2nd defendant, one of the Trustees of the Covil, maintains the right of the 1st defendant as do the other defendants from 3 to 16 who repudiate all concern in the suit.

A reply and rejoinder were put in and 13 witnesses were examined and 43 documents for the plaintiff and 16 witnesses and 51 documents for 1st defendant. For the 2nd 11 documents were put in.

The Principal Suder Ameen, for reasons assigned, nonsuits plaintiff.

Against this decision plaintiff appeals in No. 109 of 1846, reiterating therein his original pleadings; re-asserting his sole right to repair the earrings of the idol; and declaring that he was non-suited from motives of partiality. He further argues that his document 63 distinctly states "that a Singaree Swamiar's man was

coming to repair the thandungums;" that this document was given and issued by Nunjarajappier, the predecessor of the Nawab, in the year Thauthoo (1756); that the Principal Suder Ameen has offered no objections to this document; that, therefore, it was incorrect for the Principal Suder Ameen to state in his decree that there were no other documents than 64 and 65 regarding the point in dispute: that this alone shows that the Principal Suder Ameen has not maturely considered the case and that it (document 63) was not perused by him. Appellant then complains that the Principal Suder Ameen has given a partial summary of his documents Nos. 64-65; and proceeds to criticise and combat the objections made by the Principal Suder Ameen to those documents. That, moreover, the Principal Suder Ameen has admitted the validity of his (appellant's) document No. 150, wherein it is stated that the enoyetnamah (65) is dated, as mentioned in his plaint and that the Aureamangalam village had been set apart for the expenses of the madam mentioned in that very document (65), arguing that thereby (No. 150) his document 65 was proved to be genuine and that from these two documents alone (63 and 150) the Principal Suder Ameen could have decided in his (appellant's) favor. Appellant adds that Singaree Swamier administers the magisterial and civil duties of the Singaree Taluk; that he is a man of distinction; and then asks "Would such a man have fabricated documents 64-65," and concludes by praying for the reversal of the Lower Court's decision. Appellant files eight documents in appeal marked respectively A. B. C. D. E. F. G. H.

Appellant pleads that he has the *sole* right of repairing the ear ornaments of the idol: and sues for that sole right.

After a most patient and careful consideration of all the documents adduced and the arguments made use of, the Court can find nothing that gives the sole right to appellant by actual and positive proof. Now this is the main point to be established by appellant:

and it follows that, on his failing therein, he must be nonsuited ; for finding the respondents in possession of the privilege, the Court cannot disturb that possession without good and sufficient reason.

Granting, for argument sake, that appellant had successfully combated the objections made by the Principal Suder Ameen against his (appellant's) documents, and that, as alleged by him (appellant), the Principal Suder Ameen had not fully and fairly perused and considered the same and that the documents in question are true ones, still the one fatal objection would remain of the total absence of any documentary proof, of the right of repairing the ear ornaments of the idol being *confined* to appellant to the *exclusion* of all others.

The Court cannot close the case without remarking on the evidence adduced by appellant to prove the actual reparation of the ear ornaments by Singaree Swamyar in A. D. 1757.

In the restrictions on the evidence of appellant's 1st and 13th witnesses to this point by the Principal Suder Ameen, the Court fully concurs. That they were both eye-witnesses to the reparation, is highly improbable, and as regards the 1st witness utterly false and for the reasons assigned by the Principal Suder Ameen.

Decree of the Lower Court confirmed with costs.

Costs to be paid by appellant to 1st respondent, viz.,

	Rs.	A.	P.	Rs.	A.	P.
Costs incurred in the original suit.	132	0	0			
Do. in appeal and value of stamp paper used for Vakalatnamah.	1	0	0			
Vakeel fees	25	0	0			
Batta to peon	0	3	0—	158	3	0
Costs to be paid by appellant to the whole of the respondents (1st excepted), viz.,						
Costs incurred in the original suit ...	107	4	0			

	Rs.	A.	P.	Rs.	A.	P.
Costs in appeal and value of stamp paper used for Vakalatnamah.	1	0	0			
Vakeel fees	25	0	0—	133	4	0
Costs to be borne by the appellant, viz.,						
Costs incurred in the original suit	237	0	0			
Value of stamp paper used for appeal petition.	136	0	0			
Value of stamp papers used for motion, list of documents, and Vakalatnamah.	39	0	0			
Batta to peon	0	10	8			
Vakeel fees	25	0	0—	437	10	8
TOTAL.........				729	1	8

Given under my hand and the seal of the Court in the Court House at Trichinopoly this 12th day of January A. D. 1848.

(Signed) **E. STORY,**
Acting Civil Judge.

Signed and sealed this 19th February 1848. The period for preferring a special appeal will expire on the 19th May 1848.

(Signed) **E. STORY,**
Acting Civil Judge.

(A *true copy.*)

(Signed) **NINELY STORY,**
Acting Civil Judge.

Copied.
D. Martin.

Extract from the Proceedings of the Suder Adalut under date the 11th September 1848.

Read special Appeal Petition presented on the 1st July 1848, by R. Teroomal Row. Vakeel on behalf of Sasha Joseyer of Zillah Trichinopoly, praying for the admission of a special appeal from the decree of the Acting Civil Judge of Trichinopoly in Appeal No. 109 of 1846.

(Here enter Sp. Ap. Petition No. 106 of 1848.)

1. The Original Suit No. 95 of 1844 was instituted by the special appellant against the 16 defendants with a view to establish his right to the privilege of repairing the earrings of the Sree Agelandaswamy Umman idol of the Jemboocaswara Covil.

2. The Principal Suder Ameen rejected the plaintiff's claim, and the decree of this officer was confirmed by the Acting Civil Judge in appeal, on the ground that the plaintiff (appellant) had totally failed to prove his sole right to repair the ear ornaments of the idol, to the exclusion of all others.

3. The special appellant now impugns the justness of these decrees, but the Court of Suder Udalut having carefully considered his objections urged against them, are of opinion that no good or legal grounds exist, which would justify the admission of a special appeal in this case.

4. Both the Lower Courts, after a full consideration of all that the petitioner had to adduce in support of his alleged right to be the sole individual entitled to perform certain repairs to the earrings of the idol in question, pronounced such plea not established. To admit, therefore, a special appeal merely to consider the propriety of these judgments would be opposed to Act III of 1843, and the petitioner's prayer for the same cannot be complied with.

Ordered that extract from these proceedings be given to the petitioner's Vakeel on his application.

(True Extract.)

(Signed) **G. J. GRANTTRUST,**

Hd. Asst. to the Registrar.

Extract from the Proceedings of the Suder Adalut under date the 30th October 1848.

Read Miscellaneous Petition presented on the 9th October 1848, by R. Teroomal Row, Vakeel on behalf of Sasha Joseyer of Zillah Trichinopoly.

(Here enter S. M. P. No. 398 of 1848.)

1. The object of this petition is to induce the Court of Suder Udalut to reconsider their orders of the 11th September 1848 rejecting the petitioner's application for the admission of a special appeal from the decree of the Civil Judge of Trichinopoly in Appeal Suit No. 109 of 1846.

2. The Court of Suder Udalut see nothing in this petition which would induce them to question the propriety of their orders of which the petitioner complains and they accordingly resolve to dismiss this petition.

Ordered that extract from these proceedings be given to the petitioner's Vakeel on his application.

(*True Extract.*)

(Signed) **G. J. GRANTTRUST,**
Hd. Asst. to the Registrar.